உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 26 திங்கட்கிழமை (09.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 164



02
அரங்கை அதிர வைத்த அதிரடிகள்



03
வோர்னுக்கு பாராட்டு விழா



16
ஊடகவியலாளர் கொலைப்பட்டியல்

# ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிபுணர் குழு அறிக்கை மீது விவாதம்

## பாதக நிலைமைகளை தவிர்க்க இலங்கை முயற்சி

கொழும்பு, மே9

**ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையின்படி இலங்கையின் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை விவாதம் ஒன்று நடைபெற உள்ளது எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.**

27 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இடம்பெற உள்ள இந்த விவாதம் இலங்கைக்குப் பாதகமாக அமைந்து விடாமல் இருக்க இலங்கை பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு

(29ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உயர்மட்டக்குழு வெள்ளியன்று வருகிறது

### நிபுணர் குழுவின் அறிக்கை குறித்துப் பேச்சு நடத்தும்

கொழும்பு, மே 9

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆராய இந்திய உயர் மட்டக் குழு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வருகிறது.

இந்தக் குழுவில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க உள்ள இந்தக் குழு ஐ.நா. நிபுணர் குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தி, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்படி வலியுறுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-சி)

# கப்பம் வசூலிக்கும் தகவல் கிட்டினால் படையினர் களத்தில் உடன் குதிப்பர்

## ஹத்துருசிங்க இப்படிக் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 9

கப்பம் வசூலித்தல் உள்ளிட்ட பிரச்சினைகளை வர்த்தக சமூகத்தினர் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் அது தொடர்பாக அறியத்தந்தால் எனது தலைமையிலான படையினர் உடனடியாகவே களத்தில் இறங்கி வர்த்தகர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பர்.

- இவ்வாறு உறுதியளித்தார் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

யாழ்ப்பாண வர்த்தக் சமூகத்தினர் தற்போது எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பாக வர்த்தக சமூகத்தினருக்கும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையேயான கலந்துரையாடல் யாழ்.நகரிலுள்ள பாதுகாவலன்

(29ஆம் பக்கம் பார்க்க)



## வெளியூர் பஸ்கள் இனிமேல் பண்ணையில் தரிக்கவேண்டும்

### கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், மே 9

தெற்கு மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்து வரும் பஸ்களைப் பண்ணையில் அமைந்துள்ள தரிப்பிடத்தில் தரித்துநின்று சேவையை மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நகரத்தின் முக்கிய வீதிகளில் வாகனங்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணியை மாலை 6 மணிக்குப் பின்பே மேற்கொள்வேண்டும் என்றும் முடிவு செய்யப்

(29ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் நேற்றுப் பிற்பகல் களேபரம்; கலைத்துக் கலைத்து கையெழுத்துவேட்டை

யாழ்ப்பாணம், மே 9

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராகத் தமிழ் மக்களிடம் கலைத்துப் பிடித்துக் கையெழுத்து வாங்கும் 'வேட்டை' நேற்று யாழ். நகரில் முழுவீச்சில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

இலங்கை அரசு மீது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்துப் போராட்டம் நாடெங்கும் நடைபெற்று வருகின்றது. இந்தப் போராட்டத்தின் ஓர் அங்கமாகத் தனியார் போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரத்நாயக்கா தலைமையிலான



(29ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அரசின் செயற்பாடே காரணம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே 9

யுத்தம் முடிந்த கையோடு ஜன நாயகத்தை நிலைநாட்டாது வேறு செயற்பாடுகளில் அரசு ஈடுபட்ட மையே ஐ.நா.நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளிவருவதற்குக் காரணம் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுக் கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே. வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிட்டமையை நாம் எதிர்க்கின்றோம். இதை வெளியிட ஐ.நாவுக்கு வேறு காரணங்கள் இருந்தன. இருந்தாலும் இலங்கை அரசின் செயற்பாடே இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்குக் காரணம்.

யுத்தம் முடிந்த கையோடு மீள் குடியேற்றம், அவசர காலச்சட்டத்தை நீக்குதல், மற்றும் காணாமற்போனவர்களின் விவரங்களை வெளியிடுதல் போன்ற ஜன நாயகத்தை நிலை நாட்டும் செயற்பாடுகளில் ஈடுபடாது வேறு செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டமையே இந்த அறிக்கை வெளிவரக் காரணம்.

இந்த அறிக்கையில் உண்மை உள்ளதா அல்லது பொய் உள்ளதா என்பது பிரச்சினையல்ல. அறிக்கை வெளியிடப்பட்டது

(29ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸாமாவின் இறுதி உரை நாடா வெகுவிரைவில் வெளிவரும்

### அல்-குவைதா அமைப்பு அறிவிப்பு



துபாய், மே 9

அமெரிக்கப் படையால் கொல்லப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன் ஒஸாமா பின் லேடன் பேசிய ஒடியோ நாடா வெகுவிரைவில் வெளியிடப்படும் என்று அல் - குவைதா அறிவித்துள்ளது.

பின்லேடன் கொல்லப்பட்டமையை உறுதிசெய்த அல்-குவைதா, அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தாக்குதல் நடத்த அவர் திட்டமிட்டிருந்தார் எனவும் கூறியுள்ளது. பின்லேடனின் ஆவி அமெரிக்கர்களையும் அவர்களது முகவர்களையும் துரத்தும் என்றும் தெரிவித்துள்ளது. அவர்களை நிம்மதியாக இருக்கவிட மாட்டோம்என்றும் அல் - குவைதா கூறியுள்ளது.

அமெரிக்கப் படையால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன், ஒஸாமா பின் லேடன் பேசிய ஒடியோ நாடா விரைவில் வெளியிடப்படும்

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரங்கை அதிர வைத்தது

# கெயிலின் அதிரடி

- டிலீப் -




ஈவிரக்கமில்லை கெயிலுக்கு. பாவம் விரட்டி விரட்டியடித்தார் கொச்சியை. ஓவருக்கு 37 ஓட்டங்களைக் கொடுத்தார் பிரசாந் பரமேஸ்வரன். சாதனைகளுடன் பெங்களூருக்கு கிடைத்தது வெற்றி. உடை நிறமாற்றி களமிறங்கிய பெங்களூர் புது உடையில் சாதனையுடன் மிளிர்ந்தது.

ஐ.பி.எல்லின் 50 ஆவது ஆட்டம். நடந்தது பெங்களூரில். மஹேலவின் கொச்சி நாணயச் சுழற்சியில் வெற்றி. துடுப்பெடுத்தாடுவது முடிவு. கிளிங்கர் - பிரன்டன் மக்கலம் கொச்சி சார்பில் நுழைந்தனர் களத்துக்கு. சகீர் கான் பெங்களூரின் சார்பில் பந்து வீச்சுத் தொடக்கம். அடக்கத்துடன் தொடங்கிய ஆட்டம் சூடு பிடித்தது. சிக்ஸர்கள் கொச்சியின் கணக்கில் இல்லை. பவுண்டரிகள் அடிக்கடி நகர்ந்தன எல்லைக்கு. 5 ஓவர்களில் எட்டப்பட்டது 40 ஓட்டங்கள். அடுத்த ஓவர் முடிக்கப்பட்டது பிரன்டன் மக்கலமின் ஆட்டம். வெற்றோரி பந்து வீச்சு. 16 பந்துகளில் 22 ஓட்டங்கள். மூன்று பவுண்டரிகள் மட்டும் அதனுள் அடக்கம்.

வந்தார் பார்த்திவ் பட்டேல். கிளிங்கருடன் இணைந்தார். நகர்ந்தது மெதுவான ஆட்டம். ஏழாவது ஓவர் மித்துன் வீசினார். பட்டேல் தப்பித்துக் கொண்டார். பிடி எடுக்கப்பட்டது. ஆனால் பந்து வீச்சு முறையற்றதாகியது. .37 பந்துகள் தேவைப்பட்டது 50 ஓட்டங்கள் எடுப்பதற்கு. ஓடி எடுக்கப்பட்ட ஒற்றை ஓட்டங்கள் கொச்சியின் கணக்கை உயர்த்திச் சென்றன. ஒன்பதாவது ஓவர் வீச அழைக்கப்பட்டார் கெயில். எதிர் கொண்டார் கிளிங்கர். பிடுங்கியெறியப்பட்டது கிளிங்கரின் விக்கெட். 25 பந்துகளில் பெற்றுக்கொடுக்கப்பட்டது 24 ஓட்டங்கள். வந்தார் ஜெயவர்த்தன. மூன்று ஓட்டங்களுடன் வீழ்த்தினார் வெற்றோரி. தொடங்கியது கொச்சியின் திண்டாட்டம். பார்த்திவ் பட்டேல் ஆட்டத்தை முடித்தது ரன் அவுட். கொச்சி 73 ஓட்டங்களில் பறிகொடுத்தது 4 ஆவது விக்கெட். 19 ஓட்டங்களுடன் முடிந்தது பட்டேல் ஆட்டம்.

ஜடேஜா - ஹொட்ஜ் இணைவு. ஆட்டத்தை தொடக்கும் முன்பே முடிந்தது ஹொட்ஜின் ஆட்டம். சந்தித்தார் 12 பந்துகள். பெற்றது 5 ஓட்டங்கள். பின்வரிசை வீரர்கள் களத்தில் நிலைக்கவே இல்லை. ஜடேஜா மட்டும் தனித்து நின்று போராட்டம். தாக்குப்பிடிக்க முடியவில்லை பெங்களூர் பந்து வீச்சை. ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேறினர் பின்னணி வீரர்கள். இறுதி வரை முட்டி மோதிய ஜடேஜா 22 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 23 ஓட்டங்கள்.

இருபது ஓவர்களில் பெற்றனர் 126 ஓட்டங்கள். இழந்தனர் 9 விக்கெட்டுக்கள். அரவிந், வெற்றோரி கைப்பற்றினர் தலா 2 விக்கெட்டுக்கள்.

ஈ விரட்டும் இலக்கு பெங்களூருக்கு. கெயிலின் அதிரடிக்கு முன்னால் தூசு இந்த இலக்கு. வந்தனர் டில்ஷான் - கெயில் ஜோடி. முதலாவது ஓவரில் பறந்தது சிக்ஸர். கெயில் மறந்து விட்டாரோ அதிரடி எண்ணினர் பலர். பவார் வீசினார் இரண்டாவது ஓவர். டில்ஷான் நொருக்கினார் பந்து வீச்சை. பாவம் பவார் வீசிய பந்துகள் எல்லாம் எல்லைக்கு வெளியில். 20 ஓட்டங்களுடன் டில்ஷான் முடித்துக் கொண்டார் அதிரடி. கெயில் எதிர்கொள்ளத் தயார். பந்து வீசத் தயாரானார் பிரசாந் பரமேஸ்வரன். முதலாவது பந்து விண்ணைத் தொட்டு தாண்டியது எல்லையை. வீசினார் இரண்டாவது பந்தை. அது முறையற்ற பந்து. அதையும் விட்டு வைக்கவில்லை கெயில். விளாசினார் சிக்ஸர். அடுத்த இரண்டு பந்துகள். தாக்குதலின் வேகம் குறைந்தது. பவுண்டரிகளாகச் சென்றன பந்துகள். மீண்டும் கொதித்தெழுந்தார் கெயில். அடுத்தடுத்து விளாசப்பட்டது இரண்டு சிக்ஸர்கள். பாவம் இறுதிப் பந்தில் பவுண்டரியுடன் விட்டு வைத்தார். கெயிலிடம் சிக்கி சின்னாபின்னமானது கொச்சி. ஒரு ஓவரில் 37 ஓட்டங்கள் வாரி இறைத்தார் பிரசாந் பரமேஸ்வரன். கெயில் - டில்ஷான் முழக்கத்தால் 16 பந்துகளில் பெறப்பட்டது 50 ஓட்டங்கள். மஹேலவின் வியூகம் மாறியது.

வினய்க்குமார் அழைப்பு. கெயில் அதிரடிக்கு முயற்சிப்பு. வாய்க்கவில்லை முதல் நான்கு பந்துகள். ஐந்தாவது பந்து மலிங்கவின் பாணியில் வீசினார் வினய்க்குமார். சரித்தார் கெயிலை. 16 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பொழிந்தார் கெயில். 3 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அவரின் அதிரடியின் 'சாம்பிள்'. கெயில் வெளியேற்றம். அடங்கியது பெங்களூரின் அதிரடி. இருந்தும் முடியவில்லை அதிரடி ஆட்டம்.

ஹோக்லி - டில்ஷான் இணைந்தனர். வெற்றிப் பயணம் வரை தொடர்ந்து வந்தனர். ஹோக்லி அடக்கி வாசிப்பு. கெயிலின் பணியை தொடர்ந்து முன்னெடுத்தார் டில்ஷான். 13.1 பந்து வீச்சில் வெற்றி 9 விக்கெட்டுக்களால் பெறப்பட்டது.

கடைசி வரை களத்திலிருந்த டில்ஷான் 31 பந்துகளில் 57 ஓட்டங்கள். துணை நின்ற ஹோக்லி 27 ஓட்டங்கள். அதிரடிகளால் அரங்கை நிறைத்த கெயிலுக்கு கிடைத்தது ஆட்ட நாயகன் விருது.

## இன்றைய ஆட்டம்

- ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் சென்னை சூப்ப கிங்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்)
- சச்சின் – மும்பை (10 ஆட்டங்கள் 365 ஓட்டங்கள்)
- ராயுடு – மும்பை (10 ஆட்டங்கள் 349 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (10 ஆட்டங்கள் 24 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (10 ஆட்டங்கள் 13 விக்கெட்டுக்கள்)
- இக்பால் அப்துல்லா – கொல்கத்தா (11 ஆட்டங்கள் 13 விக்கெட்டுக்கள்)

# புத்தெழுச்சி பெற்றது புனே

- அருண்மொழி -

ஐ.பி.எல்லின் 51 ஆவது ஆட்டம் மொஹாலியில் நேற்று நடைபெற்றது. இதில் கில்க் கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், யுவராஜ் சிங் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

கில்கிறிஸ்ட் - வல்தாட்டி ஆகியோர் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். வல்த்தாட்டி ஆரம்பம் முதலே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டாவது ஓவரை வோஜ் வீச மூன்று பவுண்டரிகள் அடித்து அசத்தினார் வல்த்தாட்டி. நான்காவது ஓவரை ராகுல் சர்மா வீசினார். 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்தது. கில்கிறிஸ்ட் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக வல்த்தாட்டி - மார்ஷ் இருவரும் இணைந்தனர். அடக்கமா அதிரடியாட்டத்தை ஆடினர். புனே அணி களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சில் அசத்தியது. ஓட்டங்களை எடுப்பதற்கு சிரமப்பட்டனர். 45 பந்துகளில் அணி 50 ஓட்டங்களை எட்டியது. அடுத்த பந்திலேயே ராகுல் சர்மாவின் பந்து வீச்சில் வல்த்தாட்டி ஆட்டமிழந்து வெளியேறினார். 22 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 23 ஓட்டங்களை அவர் பெற்றிருந்தார்.




அடுத்து களமிறங்கிய டினேஸ் கார்த்திக், மார்ஷ் உடன் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயற்சித்தார். 12.4 பந்து வீச்சுக்களில் 80 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 3 ஆவது விக்கெட்டையும் இழந்தது. மார்ஷ் 28 பந்துகளில் 1 சிக்ஸர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் புவனேஸ் குமாரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். மார்ஷ்க்குப் பதிலாக வந்த டேவிட் ஹஸி 5 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பினார். அதனைத் தொடர்ந்து கார்த்திக் 30 ஓட்டங்களுடன் மிச்செல் மார்ஷின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். 100 ஓட்டங்களில் 5 ஆவது விக்கெட்டை இழந்தது பஞ்சாப் அணி. பின்வரிசை வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, இறுதியில் இருபது ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் புவனேஸ் குமார், பார்னெல், ராகுல் சர்மா, மிச்செல் மார்ஷ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதில் பார்னெல் 4 ஓவர்கள் வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது புனே வாரியர்ஸ் அணி. ரைடர் - பான்டி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களம் புகுந்தனர். முதலாவது ஓவரை பிரவீன் குமார் வீசினார். அந்த ஓவர் ஓட்டமற்ற ஓவராக முடிவடைந்தது. இரண்டாவது ஓவரை ஹரிஸ் வீச பான்டி இரண்டு பவுண்டரிகள் அடித்தார். ஓவருக்கு இரண்டு பவுண்டரிகள் என்ற வீதத்தில் தொடர்ச்சியாக எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டை புனே அணி இழந்தது. 18 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பகாட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பான்டி - உத்தப்பா ஜோடி சிறப்பாக ஆட்டத்தை தொடர்ந்தது. 44 பந்துகளிலேயே 50 ஓட்டங்களைப் புனே அணி பூர்த்தி செய்தது. இரண்டாவது விக்கெட்டுக்காக கட்டியெழுப்பப்பட்ட இணைப்பாட்டம் 37 ஓட்டங்களில் முறிவடைந்தது. புனே அணி 69 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் உத்தப்பாவை இழந்தது. 18 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹரிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து மனிஷ் பாண்டியும் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரவீன் குமாரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

12.1 பந்து வீச்சில் 84 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் யுவராஜ் - பேக்குசன் இருவரும் இணைந்து ஆடத்தொடங்கினர். யுவராஜ் அதிரடியாக ஆடத்தொடங்கினார். ரசிகர்களுக்கு கண்ணுக்கு விருந்தளித்தார் யுவராஜ். 20 பந்துகளில் 32 ஓட்டங்களை இந்த ஜோடி இணைப்பாட்டமாய் பெற்ற நிலையில் அதிரடியாக ஆடிய யுவராஜின் ஆட்டத்தை சிறீவாஸ்ரவா முடித்து வைத்தார். 15 பந்துகளில் 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் யுவராஜின் விக்கெட் சரிக்கப்பட்டது. புதிதாக களம் புகுந்த ஜீன்-ஜீன் வாலா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் அதே ஓவரில் ஆட்டமிழந்தார். 18 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்தது. [illegible] பந்து வீச்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது புனே.

ஆட்டநாயகனாக ராகுல் சர்மா தெரிவானார்.

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளான் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 10 | 08 | 02 | 0 | 0 | + 0.735 | 16 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.464 | 14 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 10 | 06 | 03 | 0 | 1 | + 0.786 | 13 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 10 | 06 | 04 | 0 | 0 | + 0.223 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 05 | 04 | 0 | 1 | - 0.194 | 11 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.624 | 10 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.312 | 08 |
| புனே வாரியர்ஸ் | 10 | 03 | 07 | 0 | 0 | - 0.070 | 06 |
| டெக்கான் சார்ஜஸ் | 10 | 03 | 07 | 0 | 0 | - 0.125 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 09 | 03 | 06 | 0 | 0 | - 0.934 | 06 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறக்கவில்லை எமது பந்துவீச்சு

## தோல்வி குறித்து சேவாக்

ஐ.பி.எல். போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் 32 ஓட்டங்களில் சேவாக் தலைமையிலான டெல்லி டெயா டெவில்ஸ் அணியை வீழ்த்தியது.

மும்பை இந்தியன்ஸ் பெற்ற 8 ஆவது வெற்றியாகும். 10 ஆட்டத்தில் 16 புள்ளிகளுடன் அந்த அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இதன்மூலம் அந்த அணி அரை இறுதியை உறுதி செய்தது. அந்த அணி கொச்சி, ராஜஸ்தான் அணிகளிடம் மட்டுமே தோற்றது.

டெல்லி அணி 7 ஆவது தோல்வியைத் தழுவியது. இதன்மூலம் அந்த அணி அரை இறுதியில் நுழைவதற்கான வாய்ப்பு குறைவே. 8 புள்ளிகளுடன் இருக்கும் அந்த அணிக்கு இன்னும் 3 ஆட்டங்களே எஞ்சியுள்ளது.

இந்தத் தோல்வி குறித்து டெல்லி அணித் தலைவர் சேவாக் கூறியவை வருமாறு:-

7 ஓட்டங்களுக்கே 4 விக்கெட்டுக்களை இழந்தோம். முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் இந்த மோசமான ஆட்டத்தால் தோல்வி அடைந்தோம். 7 ஓட்டங்களில் 4 விக்கெட்டுக்கள் வீழ்ந்த பிறகு 146 ஓட்டங்கள் எடுத்தமை சிறப்பானது. மலிங்க மற்றும் மும்பை இந்தியன்ஸ் வீரர்கள் அனைவரும் சிறப்பாக பந்து வீசினார்கள்.


தொடக்கத்திலேயே விக்கெட் சரிந்ததால் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டது. ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ற வகையிலேயே இருந்தது. நாங்கள் தான் சரியாக துடுப்பெடுத்தாடவில்லை. அத்தோடு எங்களது களத்தடுப்பும் மோசமாக இருந்தது. சில பிடிகளைத் தவறவிட்டோம்.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பை தேர்வு செய்த முடிவு நியாயமானதுதான். ஏனென்றால், கடந்த 2 ஆட்டத்தில் நாங்கள் ஓட்டங்களை விரட்டித்தான் வெற்றி பெற்றோம். குறிப்பாக கடந்த ஆட்டத்தில் 180 ஓட்ட இலக்கை எடுத்து வெற்றி பெற்றோம். இந்தத் தோல்வியால் அரை இறுதியில் நுழைவதற்கான வாய்ப்பு இல்லை. தற்போதைய நிலையில் அரை இறுதியில் நுழைவது மிக மிகக் கடினம்.

இவ்வாறு சேவாக் கூறினார்.



சேவாக்



# இலங்கை அணிக்கு மூன்றாம் இடம்

ஐ.சி.சியின் ஒரு நாள் போட்டிக்கான அணிகள் மற்றும் துடுப்பாட்ட, பந்து வீச்சாளர்களின் தரவரிசையை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அணிகளுக்கான தரவரிசையில் ஆஸ்திரேலியா 129 புள்ளிகளுடன் முதலிடத்திலும், இந்தியா 121 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இலங்கை 118 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. தென்னாபிரிக்கா அணி நான்காவது இடத்திலும், இங்கிலாந்து ஐந்தாவது இடத்திலும், பாகிஸ்தான் ஆறாவது இடத்திலும் உள்ளது. நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், அயர்லாந்து அணிகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

# வோர்னுக்குப் பாராட்டுவிழா

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் வோர்ன் இந்த ஐ.பி.எல். போட்டியோடு ஓய்வு பெறுகின்றார். இதை அவர் நேற்று முன்தினம் தெரிவித்தார். இனி அவர் அந்த அணியின் பயிற்சியாளராகவோ அல்லது ஆலோசகராகவோ நியமிக்கப்படலாம். ஓய்வு பெறும் வோர்னுக்கு பிரிவுபசார விழா நடத்த ராஜஸ்தான் அணி உரிமையாளர் நடிகை ஷில்பா ஷெட்டி திட்டமிட்டு உள்ளார்.

ஐ.பி.எல். போட்டி முடிந்த பிறகு இந்த பிரிவுபாசாரம் நடைபெறும். எந்த இடம், எந்த திகதி என்பது இன்னும் முடிவாகவில்லை. வோர்ன் தலைமையில் ராஜஸ்தான் றோயல்ஸ் முதலாவது ஐ.பி.எல். கிண்ணத்தைக் கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# சாதிக்க உதவுவது சச்சினே!

## -அம்பதி ராயுடு



கம்பீர்

போட்டியின் போது, 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் வழங்கும் ஆலோசனைகள் சாதிக்க உதவுவதாக, மும்பை இந்தியன்ஸ் அணியின் அம்பதி ராயுடு தெரிவித்துள்ளார்.

இந்திய மண்ணில், நான்காவது ஐ.பி.எல் தொடர் நடக்கின்றது. இதில் இடம் பெற்றுள்ள மும்பை இந்தியன்ஸ் அணியில், இளம் இந்திய வீரர் அம்பதி ராயுடு விளையாடி வருகிறார். மூன்றாவது வீரராக களமிறங்கும் இவர், நிறைய போட்டிகளில் அணித் தலைவர் சச்சினுடன் இணைந்து அணியின் வெற்றிக்கு கைகொடுத்துள்ளார்.

இதுகுறித்து அம்பதி ராயுடு கூறியதாவது:

மும்பை இந்தியன்ஸ் அணியில், 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சினுடன் இணைந்து விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. என்னை போன்ற இளம் வீரர்களுக்கு, சச்சினுடன் விளையாட வேண்டும் என்ற கனவு உள்ளது. இந்த கனவு, எனக்கு ஐ.பி.எல் தொடர் மூலம் நிறைவேறியது உற்சாகம் அளிக்கின்றது. போட்டியின் போது, இவர் வழங்கும் ஆலோசனைகள் சாதிக்க உதவுகிறது. தினமும் இவரிடம் இருந்து துடுப்பாட்டம் குறித்த ஆலோசனைகள் நிறையக் கற்றுக் கொள்கிறேன். இந்த அனுபவம், வரும் காலங்களில் சர்வதேச அளவில் சாதிக்க கைகொடுக்கும் என்று நம்புகிறேன்.

தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில், விரைவில் இந்திய அணியில் இடம் பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. தற்போது எனது கவனம் முழுவதும் நான்காவது ஐ.பி.எல் தொடர் மீது உள்ளது. இதில் முழுத்திறமையை வெளிப்படுத்தி, மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு கைகொடுப்பதை லட்சியமாக கொண்டுள்ளேன்.

வெற்றிநடையை தக்கவைத்துக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே, எந்த ஒரு அணியும் முதலிடத்தில் நீடிக்க முடியும். இவ்வாறு அம்பதி ராயுடு கூறினார். (15)

# பந்துவீச்சுக்கு பாராட்டு

## கம்பீர்

ஐ.பி.எல் போட்டியில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் 'டக்வேர்த் லூயிஸ்' விதிப்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 10 ஓட்டங்களில் சென்னை சூப்ப கிங்சை வீழ்த்தியது.

துடுப்பாட்ட வீரர்களுக்கு மிகவும் சிரமமான இந்த ஆடுகளத்தில் சென்னை அணியால் 114 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. பின்னர் ஆடிய கொல்கத்தா 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 61 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. 'டக்வேர்த் லூயிஸ்' விதிப்படி கொல்கத்தா 10 ஓட்டங்களால் வென்றது.

கொல்கத்தா பெற்ற 7 ஆவது வெற்றியாகும். இதன்மூலம் 14 புள்ளிகளுடன் அந்த அணி 2 ஆவது இடத்தில் உள்ளது. சென்னை சூப்ப கிங்ஸ் 4 ஆவது தோல்வியைத் தழுவியது. 12 புள்ளிகளுடன் அந்த அணி 3 ஆவது இடத்தில் உள்ளது. இந்த வெற்றி குறித்து கம்பீர் கூறியதாவது:-

சென்னை சூப்ப கிங்ஸ் மிக சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டது. பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக வீசி 114 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினார்கள். அரை இறுதி வாய்ப்பை பெற இந்த வெற்றி மிகவும் முக்கியமானது. இன்னும் ஒரு வெற்றி பெற்றால் வாய்ப்பைப் பெற முடியும் என்று நினைக்கிறேன்.

லீ உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவர். இளம் வீரர்கள் அவரிடம் இருந்து பாடம் கற்கிறார்கள். ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு ஏற்ற வகையில் இருந்தது. ஆடுகளத்தை குறை எதுவும் கூற இயலாது. இவ்வாறு அவர் கூறினார். சென்னை சூப்ப கிங்ஸ் பயிற்சியாளர் பிளமிங் தோல்வி குறித்து கூறியதாவது:-

சென்னை அணி எடுத்த ஓட்டம் மோசமானது இல்லை. கொல்கத்தா வீரர்களின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. இந்த தோல்வியால் நாங்கள் துவண்டு விடவில்லை. மீண்டும் எழுச்சி பெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.


# இலங்கை அணிக்கும் பாதுகாப்பு!

இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு செல்ல இருக்கும் இலங்கைக் கிரிக்கெட் அணியினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் பிரித்தானிய அரசு ஈடுபட்டு வருகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஒக்ஸ்பிறிச்ட் கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் முதலாவது ஆட்டம் ஆரம்பமாகின்றது. அன்றைய தினம் இலங்கைக் கிரிக்கெட் அணியினருக்கு எதிராக புலம்பெயர் தமிழர்களில் ஒரு சாரார் மைதானத்தில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டு உள்ளனர்.

இந்த நிலையில் இலங்கைக் கிரிக்கெட் அணியினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் பிரித்தானிய அரசு ஈடுபட்டு வருகின்றது என்று கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்து உள்ளார். (15)

# இறுதியாட்டத்தில் சாய்னா




சாய்னா

மலேசிய திறந்த தொடர் பட்மின்ரன் ஒற்றையர் இறுதிச் சுற்றுக்கு இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவல் முன்னேறினார். மலேசியாவில் உள்ள கெடாக் நகரில் மலேசிய திறந்த கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மின்ரன் தொடர் நடக்கின்றது.

நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் சாய்னா நேவல், தென் கொரியாவின் ஜி ஹூயன் சங்கை எதிர்கொண்டார்.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா நேவல் 21-14, 21-13 என்ற நேர் செட்டில் கணக்கில் மிகச் சிறப்பாக வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
09 மே 2011 திங்கட்கிழமை

# தொடரும் தமிழ்க் கொலைகள்; சீர்செய்யப்படுவது எப்போது?




தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 523ஆவது படையணியால் சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் நடத்தப்பட்ட விழாவின்போது அங்கு அமைக்கப்பட்ட அலங்கார மேடைகளில் காணப்பட்ட தமிழ் எழுத்துக்களின் பிழைகள் பலரை வேதனைக்குள் ஆழ்த்தியது.

நிகழ்ச்சியில் கிறிஸ்தவ வணபிதாக்கள், அரச அலுவலர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இவ்வாறான விடயங்களை அவதானித்த இவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான நிகழ்ச்சிக்குச் செல்லும் எமது பிரதிநிதிகள் சம்பந்தப்பட்டவர்களுக்காவது இதனை விளக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். இல்லையேல் தமிழ்க் கொலைகள் எமது சந்ததியினரைச் சென்றடைய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று கருத்துக் கூறப்பட்டது. (ம-288)

# 35மதுபான நிலையங்களுக்கே அனுமதி

யாழ்ப்பாணம்,மே9

மதுவரித் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்ட 35 மதுபான நிலையங்கள் மாத்திரமே மதுபான விற்பனையில் ஈடுபடுவதாக யாழ். மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் எஸ்.சோதிநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்குத் தெரிவிக்கையில் -

அனுமதிக்கப்படாத மதுபான விற்பனை நிலையங்களினால் பொதுமக்களுக்கு நாளாந்தம் பெரும் விளைவுகள் ஏற்படுகின்றன.

அனுமதி வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களான பருத்தித்துறையில் 12, மல்லாகத்தில் 10, சாவகச்சேரியில் 6, சங்கானையில் 7 ஆகிய மதுபான விற்பனை நிலையங்கள் சேவையில் உள்ளன என்றார். (எ-313)




தென்மராட்சி,மே9

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-207)

* * *

தென்மராட்சி,மே9

சாவகச்சேரி ஆவரஞ்சாட்டி முருக மூர்த்தி ஆலய புனராவர்த்தன சம்பு மகா கும்பாபிஷேகம் இன்று காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

சிவசக்தி உபாசகர் சிவஸ்ரீ த.வீரபத்திரக் குருக்கள் தலைமையிலான குருமார் கிரியைகளை மேற்கொள்வர். (ம-207)

* * *

காரைநகர்,மே9

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-250)

* * *

திருநெல்வேலி இராஜவீதி, சக்திவேல் முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும். (ம-313)

* * *

யாழ்ப்பாணம்,மே9

யாழ். கந்தர்மடம் பழம் வீதி, ஞானவைரவர் ஆலயத்தின் சங்காபிசேகம் மற்றும் அலங்கார உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் காலை, மாலை இருவேளைகளிலும் விசேட பூசைகள் இடம்பெறும்.

தினமும் காலை 9.30 மணிக்கு அபிஷேகப் பூசைகள் ஆரம்பமாகி சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வருவார். (ம-313)

* * *

யாழ்ப்பாணம்,மே9

கோப்பாய் சித்தி வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (313- 72)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசமைப்புக்கு இன்னொரு திருத்தம்

அரசமைப்புக்குப் பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்வதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தச் சட்டத் திருத்தம் நீதித்துறை சம்பந்தப்பட்டதாகும். உத்தேச சட்டத்தின் பிரதான நோக்கம், பிரதம நீதியரசர் ஒருவரின் பதவிக்காலத்தை ஐந்து வருடங்களாகக் கட்டுப்படுத்துவதும், நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரை ஜனாதிபதியே நியமிக்க வகை செய்வதும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

அரசமைப்புச் சட்டத்துக்குப் புதிய திருத்தம் ஒன்றை - பத்தென்பதாவது திருத்தத்தை - கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகவும், ஆனால், அது இறுதி வடிவம் பெறுவதற்கு முன்னர் கருத்துக் கூறமுடியாது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெலவும் அதனை ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இந்த இரண்டு அம்சங்களும் நீதித்துறையின் மீது, அரசும் அதன் தலைவரும் ஜனநாயகப் பண்புகளுக்கு எதிரான அம்சங்களைத் திணிக்க வகை செய்யும் என்றும், அவை சர்வாதிகாரத்துக்கு வழி செய்யும் சாத்தியம் அதிக அளவில் உள்ளதென்றும், நீதிச் சேவை சார்ந்த வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உத்தேச மாற்றங்கள், திருத்தங்கள் குறித்து இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் கூறியுள்ள போதிலும், குறிப்பிட்ட திருத்த யோசனைகள் இரண்டும், நிறைவேற்று அதிகாரமும் (ஜனாதிபதியும்) நாடாளு மன்றமும் (அரசாங்கமும்) சேர்ந்து சர்வாதிகாரத்துக்கு வழி செய்யும் என்ற அச்சம் உண்டாவது தவிர்க்க முடியாததே.

இப்போது பிரதம நீதியரசர் ஒருவர் 65 வயதுவரை பணி புரியலாம். அதேவேளை, நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரை நியமிக்கும் அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கே உரித்தாக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்களில் நீதித்துறையும் ஒன்றாகும். அவற்றில் இன்னொன்றான நிறைவேற்று அதிகாரம், இந்த நாட்டில் மக்கள் நலன்களை, விருப்புகளைப் புறந்தள்ளும் நிலையை நோக்கி நகர்ந்து வருகின்றது. ஊடகத் துறையிலும் ஜனநாயகப் பண்புகளுக்கு உட்பட்டுச் செயற்படுவதற்குத் தடங்கல்கள் ''தாராளமாக''ப் போடப்பட்டு, முழுமையற்றதாக்கும் போக்கு அடிக்கடி தலையெடுக்கின்றது. அதேவழியில், நீதித்துறையிலும் - அதன் நிர்வாக அலகுகளில் முதன்மையான உயர்நீதிமன்றக் கட்டமைப்பிலும் - ''கைவைக்கும்'' போக்குத் தலைகாட்டத் தொடங்கியுள்ளது. அரசு முனைப்பாகச் செயற்பட முனைந்துள்ளது.

நல்லாட்சிக்கு வலுவும் வளமும் சேர்ப்பது நீதித்துறை. நீதித்துறையும் ஆட்சித்துறையும் சுதந்திரமாகத் தனித்தனியே இயங்க வேண்டியவை. அதில் களங்கம் ஏற்படுத்த முனையும் எந்தப் போக்கும் ஜனநாயகத்துக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடாகவே அமைவது நிச்சயம். நாடாளுமன்றமோ அல்லது நிறைவேற்று அதிகார அமைப்போ அநீதி விளைவித்துச் செயற்பட்டால், மக்கள் நீதி வேண்டித் தேடி ஓடுவது நீதித்துறையையே. அதனாலேயே அது மதிப்புக்கு உரிய, மேன்மை கொண்ட துறையாக ஜனநாயக நாடுகளில் உயர்வாக மதிப்பிடப்படுகின்றது.

உத்தேச பத்தொன்பதாவது திருத்த யோசனை இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு அம்சங்களும் நீதித்துறையை ஊறுபடுத்துவதற்கான ஏற்பாடு என்று துறைசார் வல்லுநர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே பல அதிகாரங்களைத் தன்னகப்படுத்தி உள்ள நிறைவேற்று ஜனாதிபதி, நீதித்துறையையும் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியே இதுவென்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா கண்டித்துள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரை ஜனாதிபதி நியமிக்க வகை செய்யப்பட்டால், நிறைவேற்று அதிகாரம் நீதித்துறை மீது தனது செல்வாக்கைத் திணிக்க வழி பிறக்கும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அரசமைப்புக்கான உத்தேச 19 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்தால், நீதித்துறை நிறைவேற்று அதிகாரத் துறைக்கு அடங்கிச் செயற்பட - பணிந்து நடக்க - நிர்ப்பந்திக்கப்படும். நீதித்துறை சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் செயற்படும் சுதந்திரம் பறிக்கப்படும் என்றும் முன்னாள் பிரதம நீதியரசர் எடுத்துக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான பதினெட்டாவது சட்டத் திருத்தமும் நிறைவேற்று அதிகாரத்தை, சர்வாதிகாரமாக மாற்றும் ஏற்பாடு என்று சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அரசாங்கத்துக்கு உள்ள அதீத வாக்குப் பலத்தால் அது நிறைவேற்றப்பட்டு விட்டது.

எதற்கும் 19 ஆவது சட்டத் திருத்தம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே நிறைவேற்று அதிகாரம் நீதித்துறையை விழுங்கிவிடுமா என்பது முழு அளவில் தெரியவரும்.

# ஐ.நா. அறிக்கைக்கு விரிவான பதில் அனுப்ப அரசு மும்முரம்

நேற்று 09-05-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

அமெரிக்க வெளியுறவு ராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் நியூயோர்க்கில் பத்திரிகையாளர்களின் கேள்விகள் இரண்டுக்கு அளித்துள்ள பதில்களில் இருந்து அவரது இலங்கை விஜயத்தின் நோக்கம் தெளிவாகியுள்ளது. முதல் கேள்விக்கு அவர் அளித்திருந்த பதில் பின்வரு மாறு அமைந்திருந் தது.

பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்தும் வகையில் நம்பகமான சுதந்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தன் முக்கியத்துவத்தை அமெரிக்கா – இலங்கை அரசுக்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது.சர்வதேச சட்டங்களை மீறியவர்கள் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டியது உள்ளூர் அதிகாரவர்க்கமாகும். அரசுளால் தமது கடப்பாடுகளை நிறைவேற்ற விரும்பாத அல்லது முடியாத சமயங்களி லேயே சர்வதேச பொறி அமைப்பு ஒன்று பொருத்தமாக இருக்க முடியும்.

சர்வதேச பொறி அமைப்புக்கு போகும் முன்னதாக முதலில், பொறுப்புக் கூறுவது தொடர்பாக உள்ளகப் பொறி அமைப்பொன்றை நிறுவும் படியாக அமெரிக்கா யோசனை கூறும் என்று இந்தக் கட்டத்தில் நீங்கள் கூறுவீர்களா ? என்று கேட்கப்பட்டபோது உதவி அமைச்சர் கூறியது:

நான் முன்பு கூறியதுபோல முதலில் சம்பந்தப்பட்ட நாடு - அதாவது இலங்கை இந்த விதமான பிரச்சினைகள் தொடர்பாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்று நம்புகிறோம்.

பதை இலங்கை விரும்புவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் ஐ.நா. தொடர்பில் இலங்கை அரசின் கொள்கை மாற்றம் காரணமாகவே பிளேக்கை சந்திப்பதில் ஜனாதிபதி தயக்கம் காட்டினார் என்று மேற்கத்திய ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

ஐ.நா. அறிக்கையை புறக்கணிப்பது என்று முன்பு தீர்மானித்திருந்த அரசு இப்போது அறிக்கை தொடர்பாக அதனுடன் தொடர்புகொள்ள முடிவு செய்திருக்கிறது. இதனை அமெரிக்காவின் ஆலோசனையைக் கேட்டு செய்ததாக கருதப்படாமல் இருக்கவே அரசு இவ்வாறு நடந்துகொண்டிருக்கிறது.

இலங்கை அரசுக்கு ஒபாமா நிர்வாகம் அனுப்பியுள்ள செய்தி இரண்டு அம்சங்களைக்கொண்டதாக உள்ளது. முதலாவது; ஐ.நா. அறிக்கையில் காணப்படும் பொறுப்புக்கூறும் பிரச்சினைகளை உள்நாட்டு செயல் முறையில் அரசு அணுகவேண்டும் என்பது அமெரிக்காவின் நிலைப்பாடு. அவ்வாறான செயற்பாடு இடம்பெறாத விடத்து சர்வதேச பொறி அமைப்பொன்றை ஏற்படுத்த அமெரிக்கா வற்புறுத்தும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது தகுதியானதாக இல்லை, உள்ளக செயற்பாடுகளை நம்பகமாக மேற்கொள்வதற்கு அது சரியானதாக இல்லை என்பது அமெரிக்காவின் நிலைப்பாடாகும்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை நல்லிணக்க ஆணைக் குழுவே போரின் முடிவின் பின் எழுந்துள்ள விடயங்களை ஆராய அவசியமான பொறி அமைப்பாகும். ஆனால் ஐ.நா. அறிக்கை, நல்லிணக்க ஆணைக் குழுவானது பொறுப்புக் கூறும் அமைப்புக்கான சர்வதேசங்களை வெளிப்படுத்துவதாக

## அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு மேற்கு நாடுகள் பலவும் ஆதரவு

அமெரிக்க உதவி அமைச்சர் இலங்கை ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யுமாறு இலங்கையின் அமெரிக்க தூதரகம் கேட்டுக் கொண்டதை நிறை வேற்ற முடியாமல் போனமைக்கு ஜனாதிபதி செயலகம் கவலை தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக அவர் இலங்கை வெளியுறவு அமைச்சருடன் ஒரு சந்திப்பை நிகழ்த்தினார். கடந்த மாதம் இலங்கை வரவிருந்த றொபேர்ட் பிளேக்கின் இலங்கை விஜயம் அமைச்சர் பீரிஸ் நாட்டில் இல்லாமையால் ஒத்திபோடப்பட்டிருந்தது. ஆனால் பிளேக் இலங்கை வந்திருந்த முன்னைய சமயங்களில் ஜனாதிபதி அவரைச் சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக நம்பகமான சர்வதேசப் பொறி முறையொன்று அமைக்கப்பட வேண்டுமென்பதை அமெரிக்கா பலமாக ஆதரிக்கும் நிலையில் இருப்பதாலேயே பிளேக்கின் இலங்கை வருகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் அடக்கிவாசிப்

இல்லை. சர்வதேச மனித உரிமைச் அல்லது மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டுள்ளமை குறித்து விசாரிப்பதற்குள்ள அதிகாரங்களை அது தெளிவாக வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

இந்த வகையில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையில் பல முரண்பாடான கருத்துக்கள் உள்ளன. அத்துடன் பிரிட்டன் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் அமெரிக்காவின் கருத்தினை ஆதரிக்கின்றன. தென்னாபிரிக்காவும் இந்தக் கருத்தை இந்த வாரம் ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

பிளேக்கினால் முன்வைக்கப்பட்டுள்ள இரண்டாவது விடயம், இணக்கப்பாடு தொடர்பானது. கடந்த வாரம் மாலைதீவிலிருந்து இலங்கை வந்தவுடன் அமெரிக்க உதவி அமைச்சர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் 90 நிமிட நேரம் ஆலோசனை நடத்தினார். இலங்கை அரசுடன் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தி வருகிறார்கள். ஆனால் 29 ஆம் திகதி நடைபெற விருந்த சந்திப்பு பயனில்லாமல் போய்

விட்டது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஐ.நா. குழுவின் அறிக்கையை வரவேற்றிருக்கிறார்கள் என்பதால் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரசு தரப்புக் குழுவின் தலைவர் முன்னாள் பிரதம மந்திரியான ரத்ன ஸ்ரீவிக்கிரம நாயக்க தமது பத வியை ராஜிநாமா செய்திருந்தார். இதனால் சந்திப்பு குழப்ப மடைந்து அரச தரப்பினரை தமிழ்த் தரப்பினர் குறை கூறினார்கள். அதேசமயம் தமிழர் தரப்பினர் தமது உறுப்பினர் கள் நாடாளுமன்றத்தில் தெரி வித்தவைகளுக்கு மாறாக தமது நிலைப்பாடு இல்லை என்று வலியுறுத்தினார்கள்.

இந்த நிலையில், நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக பெரும் எதிர்ப் பிரசாரங்கள் நடத்தப்பட்டு மக்கள் மத்தியில் தேசப்பற்று உணர்வு கிளப்பப்பட்டுள்ள நிலையில் அரசு இப்பொழுது ஒரு சிக்கலான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. முதலாவதாக இணக்கக்குழு தனது விசாரணைகளை நவம்பர் 15 ஆம் திகதி வரை நீடித்துள்ளது. அறிக்கையில் காணப்படும் சில முக்கியமான விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழு ஆராயும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. ஆனால் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையும் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பொறுப்புக் கூறும் விடயத்தை ஆராயக் கூடிய அமைப்பாக இந்த ஆணைக் குழுவை ஏற்றுக் கொள்ளவில்லை.

மீள் இணக்கம் தொடர்பான விடயத்தில் உள்ள முக்கிய திறவு கருவி 13ஆவது அரசமைப்புத் திருத்தமாகும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவும் அதற்கு மேலாக செல்லவும் தாம் தயாராய் இருப்பதாக ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவின் தொடர்ந்த நினைவுறுத்தல்களின் காரணமாகக் கூறிவந்துள்ளார். 13 ஆவது திருத்தத்துக்கு மேலாக என்பதை குறிக்க அவர் 'பிளஸ்' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். 13 ஆவது திருத்தத்துக்கு மேலாகவும் அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்பதையே அது குறிப்பதாக இருந்தது. ஆனால் கூட்டமைப்பினருடனாக பேச்சுக்கள் சிக்கலானவையாக இருந்துள்ளன. பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் அதனைக் கைவிடும் படியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் அதனுடன் சேர்ந்திருக்கும் கட்சிகளிலுமுள்ள 'தீவிரவாதிகள்' நெருக்குதல் கொடுத்துவந்துள்ளனர். இந்த

**தொகுப்பு: கோகுலன்**

நிலையில் எவ்வாறு இந்த சிக்கலான நிலையிலிருந்து அரசு முன்னேறும் என்று சொல்லக் கூடியதாய் இல்லை. இந்த நிலைமையில் இந்தியாவிலிருந்து உயர் மட்ட குழு வொன்று விரைவில் இலங்கை வரவிருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

இலங்கை ஐ.நா. வுடன் தொடர்புகொள்ளப் போவதாக வெளியுறவு அமைச்சர் பீரிஸ் அமெரிக்க உதவி அமைச்சார் பிளேக்கிடம் தெரிவித்தார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இலங்கை தெளிவுபடுத்த வேண்டும்

## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது எந்தவொரு பாதிப்புக்களும் இடம்பெற வில்லை என்று ஒட்டுமொத்தமான மறுப்பு,புலிகளை அழிப்பதற்கான நடவடிக் கையின்போது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையை நியாயப்படுத்தும்?

இவ்வாறு இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் பணியாற்றிய போது புலனாய்வுப் பிரிவின் தலைவராகச் செயற்பட்ட கேணல் ஆர்.ஹரிகரன் கேள்வி எழுப்புகிறார்.

தெற்காசிய ஆய்வுக்குழு இவர் எழு திய கட்டுரையைக் கடந்த வெள்ளிக் கிழமை வெளியிட்டுள்ளது.

அந்தக்கட்டுரையிலேயே அவர்இதனைத் தெரிவித்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

ஐ.நா.நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக விசனமடைவதிலும் பார்க்க இலங்கை தனது செயற்பாட்டைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் பதிலளிக்கும் கடப்பாடு கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நிய மித்த மூவர் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கை இரண்டு பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தியுள்ளது. நிபுணர்குழு வின் அறிக்கையானது இலங்கை அரசுக் கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான நம் பகரமான குற்றச்சாட்டுக்கள் பலவற் றைக் கண்டறிந்துள்ளது.

தமிழ் மக்களின் அடிப்படைத் துன்பங் கள் சட்டவிதியை உறுதிப்படுத்தும் போது நாட்டில் மனித உரிமைகள் மீறப் படும் கட்டமைப்பு, அடிப்படைச் சுதந்தி ரம் மறுப்பு, சுதந்திர ஊடகம் போன்ற விட யங்கள் தொடர்பாகத் தீர்வு காணப்பட வில்லை என்ற உணர்வே காணப்படு கிறது. இந்த நிபுணர்குழுவின் கண்டு பிடிப்புக்கள் புதியவையல்ல.

இதே குற்றச்சாட்டுக்கள் பல்வேறு வடி வங்களில் சர்வதேச முகவரமைப்புக் களின் செய்திகளில் ஊடகங்களில் மற் றும் ஏனைய அரசிடமிருந்து 2009 ஆம் ஆண்டு பெப்ரவரிக்கு முந்திய காலத்தி லிருந்தே வெளிவந்தன.

ஆரம்பத்திலிருந்தே இந்தக் குற்றச் சாட் டுக்களை சர்வதேச சதியின் ஓர் அங்க மாக முத்திரை குத்துவதன் மூலம் அலட் சியப்படுத்துவதற்கு அரசு முயற்சித்திருந் தது.பதலளிக்கும் கடப்பாடு தொடர்பாக சர்வதேச ரீதியாக விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு இலங்கை அரசின் பதிலானது மூன்றுவகையானதாகக் காணப் படுகின்றது.

ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகத்துக் கும் பதிலளிக்கும் கடப்பாட்டை நிரா கரித்தல் சம்பந்தமாக மூன்றுவகையான அரசின் பதில்கள் அமைந்துள்ளன.

அரச உயரதிகாரிகளின் நிர்வாக முறைமை.சகதிக்குள் உள்ளது. இந்தியா வின் வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தில் முன்னேற்றமின்மை இதற்கு நல்ல உதா ரணமாகும். ஐ.நா. அறிக்கை தொடர் பாகத் தனது நடவடிக்கையை இலங்கை தெளிவுபடுத்த வேண்டும். இதற்கு மாற்று வழி இல்லை என்று அவர் மேலும் தெரி வித்தார். (எ)

# சிகிச்சைக்கு வருவோருக்கு சுகாதாரக் கருத்தரங்கு

தென்மராட்சி, மே.9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றில் சிகிச்சை பெறு வோருக்கு சுகாதார கருத்தரங்குகளை நடத்த வைத்தியசாலை நிர்வாகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலை, சுகா தார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய வற்றின் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்தக் கருத்தரங்குகளை நடத்தவுள்ள னர். கடந்தவாரம் குடிதண்ணீர்ப் பாவனை, குடிதண்ணீரால் ஏற்படக்கூடிய நோய் கள், அவற்றைத் தடுக்கும் முறைகள் பற்றி துறைசார் உத்தியோகத்தர்களால் நோயாளர் களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டுள் ளன. (எ-207)

# தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக் கான அவசர கலந்துரையாடல் நாளை செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கலைக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பாதிக்கப் பட்ட தொண்டராசியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ம-313)

# 89 ஆவது கூட்டுறவு தினவிழா குடாநாட்டில் பெரிய அளவில்

89ஆவது கூட்டுறவு தினவிழாவை பெரிய அளவில் யாழ்.குடாநாட்டில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதனை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் 15ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

ஆண்,பெண் இருபாலாருக்கும் தனித் தனியாக நடைபெறவுள்ள இந்தப் போட்டி கள் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் மேற்பட்டவர்களுக்கும் தனித்தனியாக நடைபெறும். அத்துடன் மரதன், சைக் கிள் ஓட்டப் போட்டிகளும் இடம்பெறும்.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் மற்றும் உள்ளகப் போட்டி கள் அனைத்தும் கூட்டுறவாளர் வீரசிங் கம் மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் இரண் டாம் திகதி குருநாகல் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட கூட்டு றவு தினவிழாவுக்கு முன் ஏற்பாடாக மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடத் தப்படும். வெற்றிபெறும் போட்டியாளர் கள் மாகாண, தேசிய மட்டப் போட்டி களிலும் கலந்துகொள்ளலாம்.

இந்தப் போட்டிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர் கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தி யோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர் கள் உட்பட அனைவரும் கலந்துகொள்ள லாம்.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக் குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங் கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-313)

# நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி சபைகளுக்கு காசோலைகள்

யாழ்ப்பாணம், மே 9

நெல்சிப்- அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உப கருத்திட்டங் களுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக் கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக 13 உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கு ஆரம்ப அபி விருத்திக்கான அனுமதிக் கடிதங்கள் வழங் கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 3மணியளவில் இடம்பெற்றுள்ளன. வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி. ஜோன்சன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி யுள்ளனர். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, ஆளு நரின் செயலாளர் சி.ரங்கராஜன், உள்ளூ ராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஷ் மற்றும் வடமாகாண உள்ளூராட்சி சபை செயலாளர்கள், உள்ளூராட்சி அதி காரிகள்,மாகாண பிரதி பிரதம செயலாளர்கள் அமைச்சு செயலாளர்கள் கலந்துகொண் டனர். (9-302)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புரொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 12.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை- 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு- 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி- 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை- 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,**

தொ.பே இல:- 021 222 6944.

(3601)


## 3ஆம் ஆண்டு சிராத்த தினம்



லயன் செல்வி

Dr.நவமலர் கனகரத்தினம்

எமது கழகத்தின் முன்னைநாள் தலைவரும், யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னைநாள் பணிப்பாளரு மான வைத்திய கலாநிதி லயன் செல்வி Dr.நவமலர் கனகரத் தினம் அவர்களின் மூன்றாவது சிராத்ததினம் இன்று (09.05.2011) திங்கட்கிழமை லயன்/ லயன் சீமாட்டி, கணேச மூர்த்தி வத்சலன் ஆகியோரின் அனுசரணையுடன் நினைவு கூரப்படுவதால் தாங்களும் எமது பின்வரும் நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**முதலாம் நிகழ்வு:**
காலை: 9 யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் புற்று நோயாளர்களுக்கு சத்துணவு வழங்குதல்.

**2 ஆம் நிகழ்வு -**
நண்பகல் 12.30 - திருநெல்வேலி சைவச் சிறுவர் இல் லத்தின் சிறுவர்களுக்கு அன்றைய மதிய உணவு வழங் குதல்.

**நிகழ்வு அனுசரணை -**
(லயன்/லயன் சீமாட்டி கணேசமூர்த்தி வத்சலன் சுதுமலை மேற்கு, மானிப்பாய்). லயன் சேவையில்

மானி வட்ட லயன்ஸ் கழகம், மானிப்பாய்.

(3958)

# வரணி குடத்தனை வீதி பெரும் தேசம்

யாழ்ப்பாணம், மே.9

வரணி- குடத்தனை வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படு வதால் அந்த வீதியால் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள், வாகனங்களின் சாரதிகள் பெரும் சிரமங் களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 3 கிலோ மீற்றர் வரையுள்ள இந்த வீதி செப்பனிடப்படாததால் 15 கிலோ மீற்றர் தொலைதூரம் உள்ள சுற்று வீதிகளைப் பயன்படுத்த வேண் டிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)


## பாடசாலை சேவை

நிலாவரைச் சந்தியிலிருந்து இராச பாதை மற்றும் பருத்தித்துறைப் பிரதான வீதியூடாக அனைத்து உள்தெருக்களிலிருந்து கொக்குவில் இந்துக்கல்லூரி முதல் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்குமான பாடசாலைச் சேவை தரமான முறையில் குறித்த நேரத்தில் செய்து தரப்படும். ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுமே மாணவர்கள் அனுமதிக்கப்படு வார்கள்.

தொடர்புக்கு:
[illegible] கோவிந்தன்
[illegible] நல்லூர். T.P 0779411361,0759411360


## மரண அறிவித்தல்

# சின்னையா தம்பையா

**(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)**



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.01, அம்மன் வீதியில் வசித்தவருமான சின்னையா தம்பையா கடந்த 07.05.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-இராமாசிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரா சக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல் லாச்சி, நாகம்மா, கந்தையா, தம்பர், வேலுப்பிள்ளை, சின்னத் தங்கச்சி, சீதப்பிள்ளை, மாரிமுத்து, தங்கம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடராசா, காலஞ்சென்ற அன்ன லட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனனும் கேதாரநாதன், யோக நாதன், நாகேந்திரன், பகவதிதேவி, இராசேந்திரன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும் குகபாலசுந்தரி, பூமணி, ஜெயபா லினி, ரவிபாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தவ குமார், சிவகுமார், றோகினி, நந்தகுமார், தினேஸ்குமார், பகீரதன், தர்சினி, தட்சாயினி, சானுகா, சானுஜன், சாருஜன், பரத் மோஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2011) திங் கட்கிழமை புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்திலுள்ள அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.11 மணியளவில் தகனக் கிரியைக்காக மணற்காட்டு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தொ.பே:0772395758

(3931) (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது ஒரு திட்டமிடப்பட்ட இனப்படுகொலை

- சென்னையிலிருந்து தமிழ் நாகப்பன் -

சென்னை,மே9

இலங்கையில் ஈழத்தமிழர்கள்மீது நடத்தப்பட்டது ஒருதிட்டமிடப்பட்ட இனப்படுகொலைதான். ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையில் இருந்து இதை வெறும் போர்க்குற்றம் என்று மட்டும் சொல்லிவிட்டுப் போகக் கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் சென்னைப் பல்கலைக்கழக அரசியல், அறிவியல்துறைத் தலைவரும் காந்தி அமைதி மையத்தின் இயக்குநருமான மணிவண்ணன்.

சென்னை லலோயா கல்லூரியில் ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை - புவிசார் அரசியல் எனும் நெருப்பாற்றில் என்னும் தலைப்பில் சனிக்கிழமை மாலை கருத்தரங்கம் இடம்பெற்றது. தமிழர்களைக் காப்பாற்றுவோம் இயக்கும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.


இதில் கருத்துரை வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்பட்டது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலைதான் என்பதை இந்த உலகம் புரியும்வரை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். இருபது ஆண்டுகள் ஆனாலும் ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் நடத்தப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பாளர்களுக்கு நிச்சயம் தண்டனை வந்துசேரும். இதுதான் அரசியல் பணியாக இருக்கமுடியும். அரசியல் கட்டுமானத்துக்கு, ஒவ்வொரு கல்லாக எடுத்து வைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொல் வார்கள். அதைப்போல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஈழத்தில் நடந்த இனப்படு கொலையை உரியபடி இந்த உலகம் புரியும் வரை எடுத்துச்சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். இது நமது இனத்துக்கு மட்டுமல்லாமல் உலகத்தில் இதைப் போல வேறு எங்கு பாதிக்கப்படுபவர்களுக்கும் இதன் மூலம் அரசியல் விடிவு கிடைக்கும்.

ஆயுதரீதியாகத்தான் ஓர் இனத்தை அழித்தால்தான் அது இனப்படுகொலை என்பது இல்லை. ஆயுதமின்றி அரசியல் ரீதியாக குறித்த இனத்தை அழித்தொழிக்கும் முயற்சியும் இனப்போர்தான். இலங்கையில் 1956ஆம் ஆண்டில் தனி சிங்கள சட்டம் கொண்டுவந்ததும் மலையகத் தமிழர்களை குடியுரிமை அற்றவர்களாக ஆக்கியதும் இதன் அப்பட்டமான வெளிப்பாடுகள். இலங்கையில் ஓர் இனம் ஒன்றுபட்டு நின்றுவிடக்கூடாது என்பதற்காக எடுக்கப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைதான் இது. 1983ஆம் ஆண்டு தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட தாக்குதல் இதுவரை உலகெங்கும் நடந்திராத இனப்படு கொலைதான்.

அந்த நேரத்தில் இலங்கை அரச தலைவராக இருந்த ஜெயவர்த்தனா, தமிழரா, சிங்களவரா என்றால் நான் என்னுடைய மக்களைத்தான் காப்பாற்றுவேன் என்று சொன்னது இதை நிரூபிக்கும் பதிவு. இலங்கையில் கடந்த 60 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மீது இனப்போர் தொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்க இப்படி எவ்வளவோ சான்றுகளை சொல்ல முடியும்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மணிவண்ணன்




எனவே, கடந்த இரண்டு ஆண்டுகளாக மட்டும்தான் அங்கு தமிழ் இனப்படுகொலை நடத்தப்பட்டது என்பதாக மட்டும் புரிந்துகொள்ளக் கூடாது. மிகச்சமீபத்திய உதாரணம், வன்னிப் படுகொலைகள் முடிவுற்ற தருணத்தில், தி ஹிந்து நாளிதழின் ஆசிரியர் ராமுக்கு டெம்பிள் ட்ரீஸ் மாளிகையில் வைத்து மகிந்த கொடுத்த பேட்டியில், தன்னை அறியாமலேயே உண்மையை ஒப்புக் கொண்டு இருக்கிறார். ஒரு யுத்தியைக் கையாண்டு, தமிழ் மக்களைப் படுகொலை செய்தோம் என்பதை அவர் வேறு வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார்.

எனவே, இனப்படு கொலை என்பதை தமிழ் மக்கள் மட்டுமல்ல பன்னாட்டு அமைப்புகளும் சர்வதேசம் முழுக்க இதைச் சொல்லிப் புரிய வைக்கவேண்டும்.

அதே சமயம், ஐ.நா. குழு அறிக்கையில் குறைகள் இருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிறபோதும், அதில் சில முக்கிய அம்சங்களை நாம் புறக்கணித்துவிடமுடியாது. ஒன்று, மானுடத்துக்கு எதிரான போர் இது என்பதை ஒத்துக் கொண்டு இருக்கிறது. இரண்டாவது அனைத்துலக நீதிசார் கட்டுமானத்தின் மீதான தாக்குதலாக இருக்கிறது.

மூன்றாவது வன்னியில் உள்ள அனைத்துத்தரப்பு அப்பாவி மக்கள் மீதும் இத் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது. நான்காவது மனிதாபிமான மனித உரிமை நியமங்களை அப்பட்டமாக மீறி பொதுமக்களை பாதுகாப்பான பகுதி என அழைத்துவந்து படுகொலை நடத்தியிருக்கிறார்கள். ஐந்தாவது ஜனவரி முதல் மே மாதம் வரையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்தை வழங்காமல் வழங்க விடாமல் திட்டமிட்ட புறக்கணிப்பு நடத்தியிருப்பது ஆகிய விடயங்களை ஐ.நா. நிபுணர் குழு ஒப்புக்கொண்டு இருப்பதை நாம் வரவேற்க வேண்டும்.

வெறும் கண்ணீரிலும் சோகத்திலும் மூழ்கிவிடக்கூடாது. தொடர் ஆய்வுகள் நடைபெற வேண்டும்.

[illegible]ப்படுகொலைக்கு யார் [illegible]ல்லாம் காரணம் என் [illegible] உலகத்தின் முன்பு நிரூ [illegible] இனப்படு [illegible]தைச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும் என்று கூறினார்.

(ம)

## பொது இடத்தில் மது அருந்தியவருக்கு அபராதம்

நெல்லியடி,மே9

நெல்லியடி நகரப் பகுதியில் பொதுஇடத்தில் மது அருந்திய ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர்.

வடமராட்சியில் உள்ள நெல்லியடி நகரப்பகுதியில் வைத்து பொதுமக்கள் கூடும் இடமொன்றில் மது அருந்திய கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த குறித்த நபரை அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைது செய்தனர். பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(ம-319)

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரிக்கிறது சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, மே9

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கை சட்டபூர்வமானதல்ல. அந்த அறிக்கையை நிராகரிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் அறிக்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் மஹிந்த லொக்குகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முற்றுமுழுதாக நிராகரிக்கிறது.

ஐ.நா. செயலாளர் நாயகம் இந்தக் குழுவை நியமித்த பொழுது அந்த நடவடிக்கை சட்டத்துக்கு அமைவானது இல்லை என்ற நிலைப்பாட்டில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இருந்தது. இந்தக் குழு நியமிக்கப்படக் கூடாது என்று தெரிவித்து 2010 ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றியிருந்தோம்.

எனினும் அந்தக் குழு வெளியிட்ட அறிக்கை சட்டபூர்வமானதல்ல. அதுவே எமது நிலைப்பாடு. தற்போதைய நிலைமையின் கீழ் எந்தவித ஆதாரமும் இல்லாமல் பான் கீ மூன் இந்த அறிக்கையை முன்வைத்திருக்கிறார். இந்த அறிக்கையை கண்டிப்பதுடன் இதனை முற்றாக நிராகரிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-15)

## பேச்சு மூலம் 3 மாதங்களுக்குள் தீர்வை முன்வைக்க வேண்டும்

### அரசுக்கு காலக்கெடு விதிக்கிறது கூட்டமைப்பு

கொழும்பு,மே9

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சுக்களை மூன்று மாதங்களுக்குள் முடித்து தீர்வைக் காண வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலக்கெடு விதித்துள்ளது.

கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்குத் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசுக்கும் எமக்கும் ஐந்து கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்து விட்டன. எனினும், பேச்சின் போக்கை நோக்குமிடத்து உடனடித் தீர்வுக்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன.

எம்முடன் நடத்தும் பேச்சுக்களை இழுத்தடித்து தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க முயற்சிக்கின்றோம் என்ற செய்தியை சர்வதேசத்துக்கு விடுக்க அரசு முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

மாதம் ஒரு பேச்சு என்ற நிலையைத் தவிர்த்து ஓரிரு நாள்கள் தொடர் அமர்வாகப் பேச்சை நடத்தி அரசு தன் நிலைப்பாட்டை வெளியிடவேண்டும் என்று கேட்டுள்ளோம்.

பேச்சு, பேச்சு என்று இழுத்தடிக்காமல் விரைந்து தீர்வை முன்வைக்கவேண்டும் என்று வற்புறுத்தி மூன்று மாத காலக்கெடு விதித்துள்ளோம் - என்றார் அவர்.

(ஒ-ஐ)

## மாற்றுவலுவுள்ளோருக்கு புனர்வாழ்வு வழங்கும் திட்டம் தொடர்பாக ஆராய்வு

நாவற்குழி,மே9

சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுவலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர். நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து சமூக சேவைகள் அமைச்சின் உயரதிகாரிகள் வருகை தந்து இதில் கலந்து கொள்ளவுள்ளனர். யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் இந்தத் திட்டம் தொடர்பாகப் பயிற்சி பெற்ற சமூக சேவைகள் அதிகாரிகள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர்கள், சமூக சேவை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சி.பி.ஆர். நிகழ்ச்சித் திட்டம் யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வருட காலமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் மீளாய்வாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த வருடத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாகவும் ஆற்றப்படவுள்ள வேலைகள் தொடர்பாகவும் இதில் கலந்[illegible]ப்பட உள்ளதாகக் கூறப் படுகின்ற[illegible]

(ம-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. வடக்கின் சில பகுதிகளில் இன்று மீள் குடியமரும் 3 ஆயிரம் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், மே 9

வலி. வடக்கில் சில பகுதிகளில் மீள்குடியமர்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன. சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக வலி. வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறவுள்ள விசேட பூசை வழிபாடுகளுடன் மீள் குடியமர்வு இடம்பெறவுள்ளது.

இந்த மீள்குடியமர்வு நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலி. வடக்கில் கொல்லங்கலட்டி ஜே/225, நகுலேஸ்வரம்- ஜே/226, தெல்லிப்பழை- ஜே/228, தந்தை செல்வாபுரம்- ஜே/230, மாவிட்டபுரம்- ஜே/231, மாவிட்டபுரம் தெற்கு -ஜே/232, பளை வீமன்காமம் வடக்கு - ஜே/236, பளை வீமன் காமம் தெற்கு - ஜே/237, வறுத்தலை விளான் ஜே/241, ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு சமூகம் தருமாறும் அவர் கேட்டுள்ளார். (ம-9)

# விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது வாகனம் செலுத்தியோருக்கு அபராதம்

தெல்லிப்பழை, மே 9

பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையிலும் எச்சரிக்கையின்றியும் வாகனங்களைச் செலுத்திய மூவர் நெல்லியடிப் பகுதியில் வைத்து வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் எச்சரிக்கையின்றி பிழையான வகையில் ஒரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டார்.

இவர்கள் பின்னர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி இவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதேவேளை, காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற கரணவாய் கிழக்கு, கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-319)

# சங்கிலியன் மன்ற ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மே 9


நல்லூர் சங்கிலியன் மன்ற சன சமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டுப் போட் டிகளும் கலை நிகழ்வுகளும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

மரதன் ஓட்டம், வழுக்குமரம் ஏறுதல், தலையணைச் சமர், மெதுவான சைக்கிளோட்டம், முட்டியுடைத்தல், சங்கீதக் கதிரை, கயிறிழுத்தல் போட்டிகள் என்பன இருபாலாருக்கும் இடம்பெறவுள்ளன.

கலைப் போட்டிகளான பாட்டுக்குப் பாட்டு , தனிநடனம், பரதநாட்டி யம், கிராமிய நடனம் குழு ஆகியனவும் இடம்பெறும். விரும்புபவர்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் சங்கிலியன் மன் றத் தில் பதிவு செய்து கொள்ளலாம்.

போட்டிக்கான பிரவேசக் கட்டணங்கள் ஏனைய விவரங்கள் குறித்து மன்றத்தில் அறிந்துகொள்ள முடியுமென்றும், இது தொடர்பாக 28 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொண்டு மாறும் மன்றத்தின் தலைவர் இ.சந்திரகுமார் அறிவித்துள்ளார். (எ-7)

உயிர் காக்கும்...



உன்னத பணி: உள்ளூராட்சி வாரத்தையொட்டிய முன்னோடி நிகழ்வாக வேலணைப் பிரதேசசபை நலன்புரிச்சங்கம் அண்மையில் நடத்திய இரத்த தான நிகழ்வு இது. (த-7)

# மாற்று வலுவுள்ளோருக்கு விசேட தொழிற் பயிற்சிகள்

கொழும்புத்துறை, மே 9

யாழ்ப்பாணம் மாற்று வலுவுள்ளோருக்கான தொழிற் பயிற்சிகளை பிரதேச மட்டங்களில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையும் சுண்டுக்குளி ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தயாரிப்பு நிறுவனமும் இணைந்து இப்பயிற்சி நெறிகளை முன்னெடுக்கவுள்ளன.

இப்பயிற்சிகளில் பங்குபெற விரும்பும் மாற்றுவலுவுள்ளோர் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் ஜெய்ப்பூர் நிறுவன தலைமைக் காரியாலயத்தில் பெயர் விவரங்களைப் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாற்று வலுவுள்ளோரில் உள்ள விசேட திறமைகளுக்கமைய அவர்களுக்கான தொழிற் பயிற்சிகளை இதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-135)

# நவாலி, இடிகுண்டுப் பிரதேசத்துக்கு உடன் மின் இணைப்பை வழங்குக!

மானிப்பாய், மே 9

நவாலி - இடிகுண்டு பிரதேசத்துக்கு மின்சார இணைப்பை உடன் வழங்கி அம்மக்களின் மின்சார தேவையை உடன் நிறைவேற்றுமாறு அப்பகுதி மக்கள் மின்சார சபையினரைக் கேட்டுள்ளனர்.

அயற் பிரதேசங்கள் மின்சார ஒளி பெறும்போது கட்டுடை இடிகுண்டு பிரதேசமும் தூக்குணி வைரவர் ஆலயமும் இது வரை மின்னொளியைப் பெற முடியாமல் உள்ளதாகவும் மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தூக்குணி வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதால் இப் பகுதிக்கு விரைவில் மின்சார இணைப்பை வழங்கி உதவுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-302)

# செம்மணி வீதிக்கு 'காப்பெற்'

நல்லூர் செம்மணி வீதிக்கு 'காப்பெற்' போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நல்லூர் முத்திரைச் சந்தியில் இருந்து இந்த 'காப்பெற்' அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# நடு வீதிகளில் நின்று தள்ளாடுகின்றனர் மதுபோதையில் உங்கள் பிள்ளைகள்!

## குடாநாட்டு பெற்றோர்களே ஜாக்கிரதை

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே அண்மைக் காலத்தில் புகைத்தல் மற்றும் மதுபானப் பாவனையின் ஈடுபாடு அதிகரித்துக் காணப்படுகிறது.

பாடசாலை மாணவர்களின் வருகை மற்றும் ஒழுக்கம் போன்ற விடயங்களில் ஆசிரியர்கள் உரிய கவனம் எடுக்காமையே இத்தகைய நிலைமைக்குக் காரணம் என்று பலரும் குற்றம் சாட்டுகின்றார்கள்.

இதற்கு ஏற்ப கடந்த வாரம் வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலையின் மாணவர்கள் சிலர் குறிப்பாக 16 வயதுக்கு உட்பட்டவர்கள் வாடகைக்கு வான் ஒன்றில் காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் சென்று நல்ல மதுபோதையில் திரும்பி உள்ளனர். அவர்கள் நடக்க முடியாத நிலையில் தள்ளாடியபடி சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியில் காணப்பட்டனர். இவர்களைப் பார்த்த பலரும் அதிர்ச்சி அடைந்தனர்.

பெற்றோர்களும் பிள்ளைகளிடம் கொடுக்கும் பணம் உரிய தேவைக்குப் பயன்படுகின்றதா என்பதையும் கவனிக்க வேண்டியது அவசியமாகும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (ஒ-எ-68)

# பாடசாலை செல்லாது கிராம வலம் வரும் நாவற்குழி வீட்டுத்திட்ட மாணவர்கள்

தென்மராட்சி, மே 9

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தின் 14 வயதுக்கு குறைந்த பெருமளவு சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாமல் அப்பகுதியில் அலைந்து திரிவதாக மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியிலிருந்து பாடசாலை இரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் உள்ளதால் மிகவும் கஷ்ட நிலையில் உள்ள மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் அங்குள்ள சன சமூக நிலையத்தில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லாததால் ஏனைய மாணவர்களும் வீடுகளில் முடங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

மாணவர்களின் கல்வி நலனில் அக்கறை கொண்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-207)

# மாணவரிடையே வன்முறையற்ற தொடர்பாடல் விழிப்புணர்வு

வண்ணை, மே 9

சர்வதேச சமாதான தினத்தை முன்னெடுக்கும் பணியில் யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் சமாதான தினம் மற்றும் சமாதானக் கல்வி வன்முறையற்ற தொடர்பாடல்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு தரம் 5, 6, 7, 8 மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் தரம் 10, 11, 12, 13 மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் மேற்படி நிகழ்ச்சிகளை பணியக ஒருங்கிணைப்பாளர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.

அதன்படி இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இவ்விரு கருத்தமர்வுகளும் வெவ்வேறு பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

தரம் 5,6,7,8 மாணவர்களுக்கு மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கருத்தமர்வு நடைபெறும். அதில் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை ஆகியனவும் கலந்து கொள்ளவுள்ளன.

தரம் 10, 11, 12, 13 மாணவர்களுக்கு அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும் கருத்தமர்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் என்பன கலந்து கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரின் இறப்புச் சான்றிதழ்; வடக்கில் எவருமே விண்ணப்பிக்கவில்லை

யாழ்ப்பாணம்,மே 9

காணாமற்போனோரின் இறப்புச் சான்றிதழுக்கு இதுவரை எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இலங்கையில் பயங்கரவாத நாசகார குடியமைதிக்கெதிராகச் செயற்பட்டு காணாமற்போனோருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சட்டம் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி கொண்டு வரப்பட்டது.

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் 192 ஆம் இலக்கச் சட்டமாக அது அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் காணாமற்போனோரின் இறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தத்தமது கிராம உத்தியோகத்தர் ஊடாகப் பிரதேசத்தில் உள்ள பிறப்பு, இறப்புப் பிரிவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு விண்ணப்பிக்கும் பட்சத்தில் காணாமற்போனோரின் விவரங்கள் யாவும் உண்மையானவையா எனப் பதிவாளர் நாயக அலுவலகம் உறுதி செய்த பின்னர் பிரதேச செயலகங்களில் ஆட்சேபனைகளுக்காகக் காட்சிப்படுத்தப்பட்ட பின்னர் அதில் எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமல் இருக்கும் தருணத்தில் உரியவருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் என்று அந்தச் சட்டம் கூறுகிறது.

இந்தச் சட்டம் அறிவிக்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த நிலையிலும் வட மாகாணத்தில் காணாமற்போனோரின் இறப்புச் சான்றிதழுக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)

# ஆரியகுளம் முதல் யாழ். ஆஸ்பத்திரி வரை சைக்கிள்களில் செல்வோர் விழுந்து எழும்பும் நிலை

யாழ்ப்பாணம், மே.9

யாழ். ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தியில் இருந்து ஆஸ்பத்திரி வீதிச் சந்தி வரையான பருத்தித்துறை வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதால் பயணிகள் பாதிப்படைந்துள்ளனர்.

வாகனப் போக்குவரத்துக்கள் அதிகரித்துள்ள இந்த வீதி குன்றும் குழிகளாகக் காணப்படுவதால் பாடசாலைக்கு சைக்கிள்களில் செல்லும் மாணவர்கள் உட்பட அனைவரும் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வாகனங்களுக்கு விலகி வழி விட்டுக்கொடுக்க முனையும் போது சைக்கிள்களில் பயணிப்போர் அடிக்கடி விபத்துக்களில் சிக்க நேரிடுவதாகவும் கூறப்படுகின்றது.

யாழ். நகரில் வீதிகள் புனரமைக்கப்படுவதாக - வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதும் பெரும்பாலான வீதிகள் அதுவும் முக்கியமான வீதிகள் இன்னமும் சேதமுற்ற நிலையிலேயே காணப்படுகின்றன என்று பொது மக்கள் அங்கலாய்க்கின்றனர். (ஒ-எ-7)

**வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி**

# பண மோசடி செய்த நாவற்குழி வாசியை நீதிமன்றில் ஆஜர் செய்த பொலிஸார்

தென்மராட்சி, மே 9

வெளிநாடு அனுப்புவதாகக் கூறி இருவரிடம் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் பணம் பெற்று மோசடி செய்த நாவற்குழி வாசியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை யடுத்து சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்குகளை தனித்தனியாக விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை ஒவ்வொரு வழக்குக்கும் 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 50 ஆயிரம் பெறுமதியான ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (ஒ-எ-207)

**நம்பிக்கை..**



புதியன கொள்வனவு: அக்ஷய திருதியை தினத்தன்று பெரும் எண்ணிக்கையான மக்கள் நகையகங்களில் அலைமோதியதை காண முடிந்தது. அந்த வகையில் சங்கானை பஸ் நிலையப் பகுதியில் உள்ள நகையகம் ஒன்றில் மக்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர்.

# கோப்பாயில் பாதீனியப் பெருக்கம்

கோப்பாய் பகுதிகளில் மீண்டும் பாதீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இராச வீதியிலும் மற்றும் இப்பிரதேச விவசாய நிலங்களிலும் அண்மையில் பெய்த மழையினை அடுத்தே பாதீனிய களைகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயத்துக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமையும் இந்த பாதீனியச் செடிகள் வருடா வருடம் பிடுங்கி அழிக்கப்பட்டாலும் அவை மழை காலங்களில் மீண்டும் தலை தூக்குவதாக விவசாயிகள் கவலைதெரிவிக்கின்றனர். (எ-26)

# வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

மந்திகை, மே 9

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமிய மீள் எழுச்சித் திட்டத்தின்மூலம் பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களை வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளர் சோ. ஜெயவசீகரன் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக வத்திராயன் பிரதேசத்தில் மீனவர் இளைப்பாற்று மண்டபமும் பொதுநோக்கு மண்டபமும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் அப்பிரதேசத்தில் உள்ள வெள்ள வாய்க்காலும் புனரமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்மூலம் உடுத்துறைப் பிரதேசத்தில் மீனவர் இளைப்பாற்று மண்டபமும் பொதுநோக்கு மண்டபமும் அமைக்கப்படவுள்ளதோடு முத்தமிழ் சனசமூக நிலையமும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. கொடுக்கிழாய் வீதியும் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதேபோல ஆழியவளைப் பிரதேசத்திலும் மீனவர் இளைப்பாற்று மண்டபமும் பொதுநோக்கு மண்டபமும் அமைக்கப்படவுள்ளதோடு சனசமூக நிலையத்தின் பாலர் பாடாசாலையும் பொதுக்கிணறும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (எ-237)

# உதயபுரத்தில் மீள்குடியமர்ந்தோரின் அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 9

உதயபுரம் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களின் மின்சாரம், வீட்டுத்தோட்டம், வீதி புனரமைப்பு, குடிதண்ணீர் உட்பட மக்களின் தேவைகள் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு முன்னேற்பாடாக நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு உதயபுரம் செபஸ்தியார் கோயிலடியில் மக்களுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர், நல்லூர் பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)

# நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் திருத்தப்படாத நிலையில் வீதி

யாழ்ப்பாணம், மே 9

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கொட்டோடை அம்பன் வீதிக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டும் அதற்கான பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியினுடாக கடற்றொழிலுக்குச் செல்வோர் தலையில் வலைகளைச் சுமந்து செல்ல வேண்டியுள்ளது.

3.5 கிலோ மீற்றர் தூரமான இந்த வீதியில் வாகனங்களைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் வீதி மிகவும் சேதமடைந்துள்ளது.

எனவே கடற்றொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் நன்மை கருதி ஒதுக்கப்பட்ட நிதி மூலம் வீதியைச் செப்பனிட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

**சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான**

# பரீட்சைக்குத் தோற்றுவோர் அதிகரிப்பு; பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம்

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான பரீட்சைக்குத் தோற்றுவோர் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதால் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுவதாக யாழ். மோட்டார் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி சில மாதங்களின் பின்னர் பெறுபேறுகள் வெளியாவதால் பரீட்சார்த்திகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவது குறித்து மோட்டார் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம்தொடர்பாகமேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த ஆறுமாதத்துக்கு முன்னர் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு மாதாந்தம் சுமார் 200 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

தற்போது கடந்த 3 மாதங்களாக மாதாந்தம் 2 ஆயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இதனால் வினாத்தாள்களை மதிப்பீடு செய்து கொள்வதிலும் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

கடந்த 23.03.2011 ஆம் திகதியன்று பரீட்சை எழுதிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய திகதிகளில் நடைபெற்ற பரீட்சை பெறுபேறுகளும் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

காரைநகர், மே 9

காரைநகர் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள் என்பனவற்றில் கட்டாக்காலிக் கால்நடைகள் இரவில் தங்கி விடுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

தினமும் இரவில் கட்டாக்காலி ஆடுகள், மாடுகள் மேற்படி கட்டடத்தில் உள்ள முன் மண்டபங்கள், விறாந்தைகள் என்பவற்றில் படுத்துறங்குவதால் அப்பகுதிகள் கால் நடைக் கழிவுகள் நிறைந்த பிரதேசமாக காலையில் மாறிவிடு கிறது.

இதனால் இப்பிரதேசங்களை தினமும் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், யுவதிகளுக்கு விசேட பயிற்சி நெறிகள்

வவுனியா, மே 9

வவுனியா மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கான விசேட பயிற்சி நெறிகள் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகின்றன.

இளைஞர், யுவதிகளின் ஆளுமைகளை விருத்தி செய்யும் நோக்கில் இந்தப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென வவுனியா அரச அதிபர் திருமதி ரி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் மனோநிலை, வாழ்வாதாரம் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தலைமைத்துவம், முகாமைத்துவம், மக்கள் தொடர்பாடல் எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதான இந்தப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இவர்கள் சமூகத் தொண்டர்களாக தத்தமது பிரதேசங்களில் கடமைக்கமர்த்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்தப் பயிற்சி 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இம்முறை ஒரு சிறப்பு அம்சமாக இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

# வவுனியாவில் மிகச் சிறப்பான தேசிய விவசாய தின நிகழ்வுகள்

## ஜனாதிபதி மஹிந்த பிரதம விருந்தினர்

வவுனியா, மே 9

தேசிய விவசாய தினம் இம்முறை வவுனியா மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொள்வாரென வவுனியா மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள விவசாய தினத்தையொட்டி வவுனியாவிலுள்ள விவசாய பண்ணை வளாகத்தில் பெரும் எடுப்பிலான நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் அனைத்து விவசாயத்துறைசார் சம்மேளனங்கள், திணைக்களங்கள் எனப் பல்வேறு அமைப்புகள் பங்கேற்கவுள்ள இந்த நிகழ்வில் விவசாயத்துறை சார் கண்காட்சிகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

# ஒவ்வொரு மாதமும் உளநலச் சிகிச்சை

வவுனியா, மே 9

வவுனியா மாவட்டத்தில் உள்ள மெனிக்பாம் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள ஆனந்தகுமாரசாமி இடைத்தங்கல் முகாமுக்கு கடந்த வியாழக்கிழமை வவுனியா மாவட்ட உளநல வைத்திய நிபுணர் தலைமையில் சென்ற குழுவினர் உளநலப் பாதிப்புக்குள்ளான மக்களைப் பரிசோதித்து சிகிச்சை வழங்கினார்கள்.

இங்கேயுள்ள மக்களில் சிலர் கடந்த யுத்த அனர்த்தம் காரணமாக உளப் பாதிப்புக்குள்ளாகி எதுவித சிகிச்சையும் இதுவரை பெறாது இருப்பதாக வவுனியாவில் இயங்கும் அமைதித் தென்றல் நிறுவனத்தின் பங்குத்தந்தை தெரிவித்ததையடுத்தே வவுனியா பொதுவைத்தியசாலையின் உளநலப் பிரிவின் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவதாஸ் தலைமையில் 5 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினர் மேற்படி நோயாளிகளைப் பரிசோதித்து சிகிச்சைகள் வழங்கினார்கள்.

அத்துடன் சில நோயாளர்களை தொடர் சிகிச்சைக்காக வவுனியா பொதுவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த முகாம் மக்களின் நலன்கருதி விசேட உளநல சிகிச்சை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் மெனிக்பாம் சுகாதார இணைப்பு அலுவலக வைத்தியசாலையில் நடைபெற்று வருவதாகவும் உளநலவைத்திய நிபுணர் டாக்டர் எஸ். சிவதாஸ் தெரிவித்தார். (க-501)

# உணவகத்துக்கு அபராதம்

விசுவமடு, புன்னை நீராவிப் பகுதியில் சுகாதார முறைகளுக்கு ஒவ்வாத நிலையில் உணவு தயாரித்து விற்பனை செய்த மற்றும் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை செய்த உணவக உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளுக்கு ஒவ்வாத நிலையில் உணவு தயாரித்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# கிளிநொச்சியில் 15 வயது சிறுமி வன்புணர்வு; இளைஞரை பிணையில் செல்ல அனுமதி

கிளிநொச்சி, மே 9

கிளிநொச்சியில் 15 வயதுச் சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய இளைஞரை 2 லட்சம் ரூபா ஆள்பிணையில் செல்லுமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் குறித்த சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தித் தாய்மையடையச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர் ஒருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மீண்டும் இந்த வழக்கு கடந்த 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரித்த கிளிநொச்சி மாவட்ட நீதிபதி குறித்த இளைஞரை 2 லட்சம் ரூபா ஆள்பிணையில் செல்ல உத்தரவிட்டார். மேலும் பிரிவு கிராம சேவையாளரின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சிப் பொலிஸில் கையொப்பமிட வேண்டுமெனவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-6)


## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 121
திகதி - 07.05.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: O | அதிர்ஷ்ட இலக்கம்: 10 | வெற்றி இலக்கம்: 2 4 0 6 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை (ரூ.) | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O 10 2 4 0 6 8 | 16,273,639.00 | - |
| 1 பரிசு | 10 2 4 0 6 8 | 2,000,000.00 | - |
| 2 பரிசு | 2 4 0 6 8 | 100,000.00 | 04 |
| 3 பரிசு | 4 0 6 8 | 10,000.00 | 31 |
| 4 பரிசு | 0 6 8 | 1,000.00 | 292 |
| 5 பரிசு | 6 8 | 50.00 | 2871 |
| 6 பரிசு | 8 | 20.00 | 27572 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை (ரூ.) | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 2 4 0 6 | 1,000.00 | 29 |
| 8 பரிசு | 2 4 0 | 100.00 | 288 |
| 9 பரிசு | 2 4 | 50.00 | 2889 |
| 10 பரிசு | O | 20.00 | 11341 |
| 11 பரிசு | O 10 | 100.00 | 1240 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,250,060.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்பு திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 16,662,620.00



# நீங்கா நினைவுகளுடன்

1 ஆம் ஆண்டு நினைவு | 5 ஆம் ஆண்டு நினைவு | 11 ஆம் ஆண்டு நினைவு





**தில்லையம்பலம் செல்வராசா**
தோற்றம்: 12.06.1935
மறைவு : 20.04.2010

**திருமதி லீலாவதி செல்வராசா**
தோற்றம்: 07.07.1932
மறைவு : 15.12.2006

**செல்வி செல்வஅருளினி செல்வராசா**
தோற்றம் : 15.11.1961
மறைவு : 12.12.2001

தந்தையுமாகி அன்னையுமாகி ஐவர் எமை அறிமுகம் செய்தீர்களே
இல்லற வாழ்வில் சொல்லறம் ஒன்றே நல்லறம் என்றும் சோர்வின்றி வாழ்ந்தீர்கள்!
சுகமான வாழ்வுதனை எங்களுக்கு அளித்தீரே!
கனமாக இருக்கின்றது எம் கண் இமைகள் மூடுகையில்
வளமோடு நாம் பார்த்த வனப்புடல்கள் அழிந்தனவோ
மறாத நினைவோடு உம் ஆன்மா எம்முடனே நேசமுடன்
பிணைந்திருக்க நினைவாற்றல் தொடர்கிறது.

ஓராண்டு ஆகிவிட்ட அப்பாவின் பிரிவு நாளும்
ஐந்தாண்டு ஆகிவிட்ட அம்மாவின் பிரிவு நாளையும்
பதினோராண்டு ஆகிவிட்ட எமது சகோதரியின்
பிரிவான நாளையும் நினைவு கூருகின்றோம்.
உள்ளத்தில் ஒளியாக நாம் வாழ வழிகாட்டும்
தெய்வங்கள் நீங்களல்லவோ.

214/23, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
குடும்பத்தினர்.

(49,27)



# அந்திரேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி
**தணிகாசலம் கதிராசிப்பிள்ளை**

கடந்த 10.04.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரும் குடும்பத்தலைவியுமான திருமதி தணிகாசலம் கதிராசிப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்தியம் மற்றும் சபீண்டீகரணக் கிரியைகள் 10.05.2011 செய்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆவரங்காலிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று மதியபோசன நிகழ்வு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(49,25,21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் குழந்தைகளைக் கொன்று புதைத்த பெண் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கிளிநொச்சி, மே 9

கிளிநொச்சி, அக்கராயன் குளம் பகுதியில் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்து பின்னர் கொலை செய்து வீட்டுச் சமையலறைப் பகுதியில் புதைத்த பெண்ணை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி, அக்கராயன் குளம் சுபாஸ் குடியிருப்பு என்ற இடத்தில் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்து அவ்விரு குழந்தைகளையும் கொலை செய்தமை தொடர்பாக கைது செய்யப்பட்ட பெண்ணையே எதிர்வரும் 13 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் குறித்த குற்றச் செயல் தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டார்.

வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் தடயப் பிரிவு பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பவம் நடைபெற்ற இடத்தில் மேற்கொண்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட இரத்தக்கறை, பிளேட், மண்வெட்டி போன்ற சான்றுப் பொருள்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து குறித்த பெண்ணை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும். அத்தோடு குறித்த பெண்ணின் இரத்தமாதிரியை எடுத்துப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் சிறைச் சாலை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

கொலை செய்யப்பட்ட இரண்டு ஆண் குழந்தைகளினதும் சடலங்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ளன.

அதனை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு நீதிமன்றம் யாழ்.போதனா மருத்துவமனையின் சட்டவைத்திய அதிகாரிக்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

(க-6)

## தண்டப் பணம் செலுத்தினார்

கிளிநொச்சி நகரில் வழி அனுமதிப்பத்திரமின்றி தனியார் பயணிகள் பேருந்து ஒன்றினைப் பணியில் ஈடுபடுத்திய நபரிடமிருந்து ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து ஒன்றினை வழி அனுமதிப்பத்திரமின்றி கிளிநொச்சி நகரில் பணியில் ஈடுபடுத்திய பேருந்து உரிமையாளர் ஒருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரிடமிருந்து ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டும் விடுவிக்கப்பட்டார். (க-6)

## ஆச்சிரமத்தின் கணினிக் கல்லூரிக்கு விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர் ஆள்சேர்ப்பு

கிளிநொச்சி, மே 9

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் கணினிக் கல்லூரிக்கு கணினியுடன் தொடர்புபட்ட விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் ஆள் சேர்ப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கணினிக் கல்லூரியில் தங்கியிருந்து விரிவுரை வழங்கக் கூடியவர்கள் தமது சுய விண்ணப்பத்தை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

மகாதேவா ஆச்சிரம சைவச் சிறார் இல்லத் தலைவரும், வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் பிரதிப் பிரதம செயலாளருமான தி. இராசநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

மகாதேவா சைவச் சிறார் இல்ல ஆச்சிரமத்தில் கணினிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு முறையான கணினிக் கல்வியை வழங்கும் பொருட்டே கணினி விரிவுரையாளரும், பயிற்றுவிப்பாளர்களும் ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தி.இராசநாயகம் தலைவர், சைவச்சிறார் இல்லம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(க-302)

## மாலை மரியாதை...



நல்ல வரவேற்பு: மன்னார் மற்றும் மடுக்கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் உபகரணங்களை வழங்கும் நிகழ்வின்போது வருகை தந்த இராணுவ உயர் அதிகாரிகள் மாலை மரியாதைகளுடன் வரவேற்கப்படுகின்றனர். (601)

# இந்திய அரசின் வீட்டுத்திட்டம்; செயலகத்தில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே 9

இந்திய அரசின் நிதியுதவியுடன் அமையவுள்ள வீட்டுத் திட்டப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் 250 வீடுகள் முதற்கட்டமாக அமைக்கப்படவுள்ள நிலையில் இவற்றுக்கான இடங்களைத் தெரிவு செய்து அப்பணிகளை விரைவு படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணியளவில் மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 100 வீடுகளும் அறிவியல் நகர் பகுதியிலும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலும் 50 வீடுகளும், புளியம் பொக்கணைப் பகுதியிலும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிலும் 50 வீடுகளும், சோரன்பற்று பகுதியிலும், பூநகரி பிரதேச செயலர் பிரிவிலும் 50 வீடுகளும் அமைப்பதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் வெடி பொருள்கள் அகற்றப்பட்டமை தொடர்பான சான்றிதழ் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் வீடுகள் அமைவதற்கான இடங்கள் துப்புரவு செய்யப்பட வேண்டியுள்ளதுடன் வீதிகளும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மின்சார சபை, பிரதேச சபை ஆகியவற்றின் அதிகாரிகளும் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர். (க-6)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு நீதிமன்றத்தில் அபராதம்

முல்லைத்தீவு, மே 9

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு குமாரசுவாமிபுரம் பகுதியில் பதின்மூன்று போத்தல் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையில் செல்லுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு குமாரசுவாமிபுரம் பகுதியில் பதின்மூன்று போத்தல் கசிப்பை அவரது வணிக நிலையத்தில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மூன்றாம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிவான் இதற்கு முன்னரும் குறித்த நபர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், மீண்டும் குறித்த நபர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவித்து இவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார். (க-6)

# உள்ளூராட்சி மன்றங்களும் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து தொற்று நோய்களை ஒழிக்கலாம்

### வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

வவுனியா, மே 9

உள்ளூராட்சி மன்றங்களும் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து செயற்பட்டால் மட்டுமே எமது பிரதேசங்களில் தொற்று நோய்களைக் குறைக்க முடியும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மு.மகேந்திரன்.

கடந்த வாரம் வவுனியா தமிழ்ப் பிரதேச சபையில் புதிதாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர், உபதலைவர், பிரதேச சபைச் செயலாளர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பணிப்பாளர் தொடர்ந்து தெரிவிக்கையில்:

எந்தவொரு வேலைத் திட்டத்தையும் கிராம மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது. ஆனால் இதனைப் பெறுவது சுலபமான காரியம் அல்ல. எனவே அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து திட்டமிட்டு சேவை செய்வதன் ஊடாக அதனை இலகுவில் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவித்தார்.

வவுனியா தமிழ்ப் பிரதேச சபையின் செயலாளர் த.அறிவரசன் உரை நிகழ்த்தும் போது:

பிரதேச சபையின் சுகாதார வேலைத் திட்டங்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் உள்ளதாகவும், தொடர்ந்தும் அவர்களது சேவையின் ஊடாக பல்வேறு வேலைத் திட்டங்களை மக்களுக்கு வழங்க முடியும் எனவும் கடந்த காலங்களில் தொற்று நோய் தடுப்பு வேலைத்திட்டங்கள் உணவு கையாளும் நிலையங்களின் சுகாதார மேம்பாடு, கழிவுகள் குப்பைகள் அகற்றும் செயற்றிட்டம் போன்றவை எவ்வித தடங்கலும் இன்றி செயற்படுத்த முடிந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த காலங்களில் சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சில தடைகள் ஏற்பட்டதுடன் வளங்கள் குறைவாக இருந்ததாகவும் இனிவரும் காலங்களில் அவற்றைச் சரியான முறையில் திட்டமிட்டு செய்து முடிக்கப்படும் எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(க-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
09 மே 2011 திங்கட்கிழமை

## இப்படியும் அழிவா...



கடலரிப்புக்கு உள்ளாகி வரும் வாழைச்சேனை, நாசிவன்தீவு முகத்துவாரப் பகுதி.

# அறுபது தமிழ் பேசும் அதிகாரிகள் நிர்வாக சேவைக்கு நியமிக்கப்படுவர்

## பொது நிர்வாக அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை நிர்வாக சேவையில் 60 தமிழ் பேசும் அதிகாரிகளை போட்டிப் பரீட்சைமூலம் நியமிப்பதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன். செனவிரட்ண தெரிவித்துள்ளார். பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நாடாளுமன்றக் குழு கூட்டம் கடந்த வியாழக்கிழமை அமைச்சர் ஜோன் சென விரட்ண தலைமையில் நடைபெற்றபோது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா ஏற்கனவே இலங்கை நிர்வாக சேவைகள் ஆள்தேர்வுப் போட்டிப் பரீட்சையின் போது பெறுபேறுகளின்படி தமிழ் பேசும் அதிகாரிகள் எவரும் நியமனம் பெறாதிருப்பதைச் சுட்டிக்காட்டினார். உத்தேச நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன் செனவிரட்ண, தமிழ் பேசும் அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்காக தனியான போட்டிப் பரீட்சையை நடத்த அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. விரைவில் வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்- என்றார். (ச)

# திருகோணமலை நகர சபையில் 5 கோடி 75 லட்சம் வருமான நிலுவை

திருகோணமலை நகரசபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் 5 கோடி 75 லட்சம் ரூபா நிலுவையாக உள்ளதென நகரசபை உறுப்பினர் சிவசுப்பிரமணியம் நந்தகுமார் நேற்று முன்தினம் சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். வரியாக 2 கோடி 57 லட்சம் ரூபாவும் வாடகை நிலுவையாக 97 லட்சமும் சந்தைகள், வர்த்தக நிறுவனங்கள் என்பனவற்றின் அனுமதிப்பத்திரங்கள், கேளிக்கை விடுதிகள் என்பனவற்றின் நிலுவை 2 கோடி 19 லட்சம் ரூபா்வாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்த சூழ்நிலைகளில் வரிகளைச் செலுத்த முடியாத நிலையில் வரிசெலுத்துபவர்கள் இருந்து வந்துள்ளனர். எதிர்காலத்தில் நீர்வழங்கல், வீதி மின்னிணைப்பு, வீதிப் புனரமைப்பு என்பனவற்றை மேற்கொள்ள பெருமளவான நிதிகள் தேவைப்படுகின்றது. (ச)

# விளையாட்டு மைதானத்தைப் புனரமைக்க கல்முனை மாநகர சபையிடம் கோரிக்கை

அம்பாறை, மே9

நற்பிட்டிமுனை தமிழ்ப் பிரிவில் சேதமடைந்து காணப்படும் விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்துத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் தமிழரசுக்கட்சி உறுப்பினர் ஏ.அமிர்தலிங்கம் கல்முனை மாநகர சபையிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தச் செயலமர்வு மாநகர மேயர் எம்.இஸட்.மசூர் மௌலானா தலைமையில் நடைபெற்ற போதே மைதானத்தைப் புனரமைக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

இவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:

இந்த மைதானம் மிக நீண்ட காலமாகப் பராமரிப்பின்றிக் காணப்படுவதால், இளைஞர்கள், மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடவும், விளையாட்டுப் பயிற்சிகள் பெறவும் உகந்த நிலையில் இல்லாமலிருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

ஏற்கனவே சில அமைச்சர்கள் இப்பிரதேசத்துக்கு வருகை தந்த போதெல்லாம் சில மாதங்களுக்குள் இந்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்துத் தருவவோமென வாக்குறுதிகளை அளித்துவிட்டுச் சென்ற போதிலும், அவை காற்றில் பறந்து விட்ட வாக்குறுதிகளாகவே அமைந்துவிட்டன.

நற்பிட்டிமுனை தமிழ் பிரிவிலுள்ள மாணவர்கள், விளையாட்டுக் கழகங்களின் நலன் கருதி, பழமை வாய்ந்த இந்த விளையாட்டு மைதானத்தை நமது கல்முனை மாநகர சபை புனரமைத்துத்தர வேண்டும்.

இதற்கமைய முதற்கட்டமாக இந்த மைதானத்தில் கிரவலிட்டு சமப்படுத்தும் நடவடிக்கையையாவது சபை உடனடியாக மேற்கொள்ள முன்வர வேண்டுமெனக் கோருகின்றேன்- என்றார். (ச-30)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகரத்தினம் தங்கராசா



தென்மயிலை, தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் தங்கராசா கடந்த 05.05.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - விசாலாட்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லையா- இலட்சுமி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பராசக்தி, நேசராணி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் ஜெயபாலகிருஷ்ணன், ஜெயசுப்பிரமணியம், ஜெயரட்ணம், வீரபத்மன் ஆகியோரின் தாயும் இராசரத்தினம், நடராசா, மகேஸ்வரி, ரோகினி, சசிகலா, சரஸ்வதிதேவி ஆகியோரின் மாமியும் லாவண்யா, ராம்குமார், சித்திரகலா, ராஜசுதர்சனா, ஜெயசுதா ஜெயசங்கர், காலஞ்சென்ற சிவகௌரி மற்றும் கீதா, றஜிதா, ரமேஸ், ஜெயஜீவன், ஜீவனா, ஜெயசஞ்ஜீவன், ஜெயந்தன், ஜெனனி, ஜெனுசன், விபிகா, தனுஷன் ஆகியோரின் பேர்த்தியும் விதுரன், நித்தியா, ஜதுர்சன், பிரவீனன், பிரவீனா, பிரியங்கா, குமிலினி, திவ்வியா, கார்ணிக்கா, ராகவி, ராகஜன், ராகரன், லணா, டிலுக்ஷன், திவாகர், திலக்ஷானா, ஜெனிக்கா, ஜெசிக்கா, கரிகரன், அபி, அனிட்டா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: கருமாரி மோட்டர்ஸ்
0777 364067, 0777 797550
ஜெயபாலகிருஷ்ணன்- 077 6501849.
அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(3982) (38)



## உத்தியோகபூர்வ முடிவுகள்

## சுவிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 607
திகதி 07/05/2011

சுப்பர் இலக்கம்: 06
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 49 70 71

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 13,805,807.20 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனு 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 08 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 243 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனு 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 498 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 11,907 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனு 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 6,891 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 173,125 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 27,758 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,868,000.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த புதன்கிழமை ரூ 14,089,005.60

தேசிய லொத்தர் சபை



## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

2011.05.06

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2390

வெற்றி எழுத்து: S
வெற்றி எண்கள்: 1 9 8 6 9 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து/இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S 1 9 8 6 9 0 | ரூபா.12,348,391/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 1 9 8 6 9 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 9 8 6 9 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 11 |
| 3 பரிசுகள் | 8 6 9 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 127 |
| 4 பரிசுகள் | 6 9 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1317 |
| 5 பரிசுகள் | 9 0 | ரூபா. 100/= | பரிசுகள் 12900 |
| 6 பரிசுகள் | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 128418 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 1 9 8 6 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | 1 9 8 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 130 |
| 9 பரிசுகள் | 1 9 8 | ரூபா. 100/= | பரிசுகள் 1316 |
| 10 பரிசுகள் | 1 9 | ரூபா. 50/= | பரிசுகள் 12751 |
| 11 பரிசுகள் | S | ரூபா. 20/= | பரிசுகள் 51386 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,622,230.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக ஆசிரியர் இடமாற்றத்தை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

## கிழக்கு தமிழாசிரியர் சங்கம் மகஜர்

திருகோணமலை,மே 9

மேலதிக ஆசிரியர் இடமாற்றத்தை மாகாண ஆசிரியர், மாணவர் நலன் கருதி டிசெம்பர் மாதம் வரை ஒத்திவைக்குமாறு கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் மாகாண ஆளுநரைக் கோரியுள்ளது.

சங்கத் தலைவர் ஆர்.ஜெரோம் மகஜர் மூலம் ஆளுநருக்கு இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார். மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, கிழக்கு மாகாண முதலமைச்சர், மாகாணக் கல்வி அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் உள்ள மேலதிக ஆசிரியர்களைப் பற்றாக்குறையாக உள்ள வலயங்களுக்கு இடமாற்றம் செய்து ஆசிரியர் சமமின்மையைச் சமப்படுத்தும் நடவடிக்கையில் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இது உண்மையிலேயே பாராட்டத்தக்க விடயமாகும். எனினும், அதனைச் செயற்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட காலம் பொருத்தமற்றதாகும்.

பொதுவாக வருட இறுதியிலேயே இவ்வாறான இடமாற்றங்கள் இடம்பெறுவது வழமை. ஆனால் வழமைக்கு மாறாக இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இந்த இடமாற்றம் இடம்பெறுமானால் பல சிக்கல்களைத் தோற்றுவித்துவிடும். அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகத்தினர் சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகிவிடுவர். எனவே இந்த இடமாற்றத்திட்டத்தை டிசெம்பர் மாதம் வரை ஒத்திவைக்க வேண்டுமென்று எமது சங்கம் கோருகின்றது.

எமது சங்கம் இது தொடர்பாக பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றது.

* பற்றாக்குறை நிலவும் வலயங்களுக்கு டிசெம்பர் வரை எவ்வித ஆசிரியர் நியமனங்களையும் வழங்காதிருத்தல்.

* பற்றாக்குறை வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர் நியமனம், கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனம், பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் நியமனம், பட்டதாரி ஆசிரியர் நியமனம் ஆகியவற்றை வழங்கி பற்றாக்குறையை நீக்குதல்.

* கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் அனைத்திலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. மாகாணக் கல்வி அமைச்சு மத்திய கல்வி அமைச்சோடு தொடர்புகொண்டு ஓர் உடன்படிக்கையை மேற்கொண்டு அந்தந்த வலயங்களில் உள்ள தேசிய பாடசாலைகளின் வெற்றிடங்களை அந்தந்த வலயங்களில் மேலதிகமாகவுள்ள மாகாணப் பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டே நிரப்புதல். இதன் மூலம் மேலதிக ஆசிரியர்களின் எண்ணிக்கை வலயங்களில் குறைக்கப்படும்.

* டிசெம்பர் வரை இடமாற்றத்திட்டத்தை ஒத்திவைக்கும் போது கணிசமான ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுச் சென்றுவிடுவர். அதனால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் ஆசிரியர் சமநிலை ஏற்பட்டுவிடும்.

எனவே இந்த இடமாற்றத்தை டிசெம்பர் வரை ஒத்திவைப்பதன் மூலம் தற்போது ஆசிரியர் மத்தியில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலையைத் தணிக்கலாம். மழை வெள்ளத்திற்குப் பின்னர் இரண்டாம் தவணையில் கல்வி நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

எனவே கல்வி அதிகாரிகள் ஆசிரியர்களின் நலன்களிலும் அக்கறை செலுத்துவது அவசியமாகும். அதேபோன்று ஆசிரியர்களும் கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையை உணர்ந்து அர்ப்பணிப்புடன் மாணவர்களுக்குச் சேவையாற்ற முன்வரவேண்டும். அதற்கு ஆசிரியர்களின் நலன்கள், சலுகைகள் என்பன கல்வி அதிகாரிகளினால் வழங்கப்பட வேண்டும்.

அதன் மூலமாகவே மாணவரின் கல்வி வளர்ச்சியை ஆசிரியர் ஊடாக மேம்படுத்த முடியும். ஆசிரியராயினும், மாணவராயினும் அதிகாரம், சட்டங்களால் கல்வி வளர்ச்சியை எட்டிவிட முடியாது. பரஸ்பர புரிந்துணர்வின் மூலமே கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் - இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 200 ஊழியர்களை நிரந்தரமாகத் தீர்மானம்

கிழக்கு மாகாணத்தில் கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகளில் தொண்டர் அடிப்படையில் நியமனம் பெற்ற 200 ஊழியர்களை நிரந்தரமாக்க கிழக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண அமைச்சரவையின் ஊடக பேச்சாளர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

அத்துடன் சுகாதாரத் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள 636 சுகாதார தொழிலாளர்கள், 363 சாதாரண தொழிலாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மத்திய அரசைக் கோருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆரையம்பதி மகா வித்தியாலயத்தை ஆண்கள் வித்தியாலயமாகவும், ஆரையம்பதி இராம கிருஷ்ண சங்கம் தமிழ்க் கலவன் பாடசாலையை பெண்கள் பாடசாலையாகவும் மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கிழக்கு மாகாண அமைச்சர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கிழக்கு மாகாண அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்தத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று விவசாயக் குளங்கள் புனரமைப்பு

## கிழக்கு சுகாதார அமைச்சர் முயற்சியால் நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு, மே 9

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று விவசாயக் குளங்களின் புனரமைப்புப் பணிக்கென 6.5 மில்லியன் ரூபாவை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சு ஒதுக்கியுள்ளது.

கோறளைப்பற்று வடக்கு ஆனைசுட்ட கட்டு காரமுனை குளத்தின் புனரமைப்புக்கு 4 மில்லியன் ரூபாவும், கோறளைப்பற்று மேற்கு மாஞ்சாலைக் குளம் புனரமைப்புக்கு 1.5 மில்லியன் ரூபாவும், கோறளைப்பற்று மத்தி பாளைக்கட்டுகுளப் புனரமைப்புக்கு ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் விடுத்த வேண்டுகோளுக்கமைய கிழக்கு நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை இந்தநிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார்.

ஆனைசுட்ட கட்டு கரைமுனைகுளப் புனரமைப்புத் தொடர்பாக அந்தப்பகுதி மக்கள் அமைச்சர் சுபைரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய கடந்த வியாழக்கிழமை அமைச்சர் உதுமாலெப்பையை அமைச்சர் சுபைர் அப்பகுதி மக்களுடன் சென்று சந்தித்துரையாடினார்.

இதன்போதே இந்த மூன்று குளங்களினதும் புனரமைப்புக்குமுரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், நாரமுனைக்குச் செல்லும் மியான்குள வீதி புனரமைப்புப் பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பொருட்டு ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. (ச)

## எதிர்ப்பு....



தருஸ்மன் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் கையெழுத்திடும் வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நுவரெலியா பொது பஸ்தரிப்பு நிலையத்தில் தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரட்நாயக்கா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொண்டு கையெழுத்திடுகின்றனர். (ச)

# பாதையைப் புனரமைத்துத் தருமாறு கோரி தெனியாயவில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

தெனியாய,மே 9

தெனியாய,பட்டாந்துற வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி பிரதேச மக்களும், பாடசாலை மாணவர்களும் நடத்திய எதிர்ப்புப் போராட்டம் காரணமாக கடந்த வியாழக்கிழமை தெனியாய காலி பிரதான வீதியில் சுமார் 4 மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்புப் போராட்டம் தெனியாய ஓலகந்த பிரதேசத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 1,500 பேர் கலந்து கொண்டனர்.

தெனியாய நகரிலிருந்து பெரலபனாத்தர வீதியை இணைக்கின்ற வீதியை பட்டாந்துற வீதி ஆகும். 7 கிலோ மீற்றர் நீளமுள்ள இந்த வீதியில் இரண்டு பாடசாலைகளையும் மூன்று கிராமங்களையும் ஊடறுத்து சுமார் 3,000 மக்கள் பயணம் செய்கின்றனர்.

இந்த வீதி நீண்ட நாள்களாக செப்பனிடப்படாத காரணத்தினால் வாகனங்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப் படுகின்றது.

அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களிலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததும் ஒரு காரணமாக அமைகிறது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இங்கு பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்று குடை சாய்ந்ததால் 26 மாணவர்கள் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புதையல் தோண்டிய நால்வர் கைது

மாத்தளை, கலேவெல பிரதேசத்தில் புதையல் தோண்டிய நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர். கலேவெல, அலுத்கம பிரதேசத்தில் புதையல் தோண்டுவதாகக் கிடைத்த தகவலின்படி இந்தப்பிரதேசத்தை சுற்றிவளைத்த பொலிஸார் நான்கு சந்தேக நபர்களுடன் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்படும் பல உபகரணங்களையும் கண்டெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ச)

# தோட்டப் பகுதியில் தொழில்நுட்ப நிலையம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

நுவரெலியா,மே9

தோட்டப் பகுதி மக்களுக்காக 35 தகவல் தொழில்நுட்ப நிலையங்களை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் முன்வைத்திருந்தார்.

மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்ட வாறு கல்வி அறிவுள்ள சமூகமொன்றை உருவாக்கும் திட்டத்தின்கீழ் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினூடாக தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு 270 கனிணி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதோடு இதற்கென 20 கோடி ரூபா ஒதுக்கப்பட உள்ளது.

10 வருடகாலத்தில் தோட்டப் பகுதிகளில் 450 சமூக அபிவிருத்தி நிலையங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது வரை 45 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்ணீர் நிறமாற்றம்: அதிகார சபை விசாரணை

கொழும்பு, மே 9

பிட்டிவில பகுதியிலுள்ள கால்வாயிலிருந்து களனி கங்கைக்கு பாயும் தண்ணீரில் ஏற்பட்டுள்ள நிறமாற்றம் தொடர்பிலும் அதில் அடங்கியுள்ள மூலப்பொருள்கள் தொடர்பிலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினரும், பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

பிட்டிவில பகுதியிலுள்ள கால்வாயிலிருந்து களனிகங்கைக்கு பாய்கின்ற தண்ணீரில் நிறம் மாறிக் காணப்படுகின்றது என பிரதேசவாசிகள் நீர் அதிகாரசபைக்கு அறிவித்திருந்தனர்.

களனிகங்கையிலிருந்து பெறப்படும் தண்ணீர் பரிசோதனை இயந்திரத் தொகுதிக்குள் ஊற்றப்பட்டபோது நீரில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனாலும் நீரை மாசுபடுத்துவது சட்டவிரோதமாகுமென அம்பத்தல தண்ணீர் பரிசோதனை நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

களனிகங்கையில் தண்ணீர் மாசுப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மத்திய சுற்றாடல் அதிகார சபையால் பல மாதிரிகளையொத்த தண்ணீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (ச)

# பிளேக் தமிழ் மக்களுக்கு மீண்டும் தவறாக உபதேசம் செய்யக்கூடாது

**ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் தெரிவிப்பு**

கொழும்பு, மே9

போர் முடிவடைந்தவுடன் உடனடியாகவே அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் என்ற பிரசாரத்தை அப்போதைய அமெரிக்க தூதர் ரொபர்ட் பிளேக் முன்னெடுத்தார். ஆனால் இன்று போர் முடிந்து இரண்டு வருடங்களாகி, இத்தனை அழிவுகளுக்குப் பின்னரும்கூட தமிழ் மக்களால் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அறிகுறியைக் கூடக் காணமுடியவில்லை

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

ஜ.ம.மு. தலைமையகத்தில் நடைபெற்ற வாராந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் நடைபெற்ற காலப்பகுதி முழுவதும் பிளேக் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றியே உபதேசித்து வந்தார். 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் அரசு செல்லும் என்ற ஒரு தோற்றத் தையும் அவர் ஏற்படுத்தியிருந்தார்.

அமெரிக்க அரசு இலங்கையில் போருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருந்தது. இந்த நிலைப்பாட்டை சமாளிப்பதற்காகவே பிளேக் இத்தகைய கருத்துகளை தொடர்ந்து தெரிவித்து வந்தார். ஆனால் இன்று இவ்வளவு அழிவுகளுக்குப் பின்னரும்கூட இந்த நாட்டில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அறிகுறியைக்கூட தமிழ் பேசும் மக்களால் காண முடியவில்லை.

போரின்போது ஐ.நா. சபை பொதுமக்களின் இழப்பைத் தவிர்ப்பதில் தீர்மானகரமாகச் செயலாற்றவில்லை என்பதை இன்று உலகம் அறிந்துகொண்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் மூலம் இறுதி நேரத்தில் போரை நிறுத்துவது போன்ற சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை காலம் கடந்த செயலாகும்.

அவ்வேளையில் போர் நிறுத்த முடியாத ஒரு கட்டத்தை அடைந்திருந்தது. அது சாத்தியமாகி இருந்தாலும்கூட அதன் மூலம் வன்னி மக்களைப் பாதுகாத்திருக்க முடியாது. வேண்டுமென்றால், எஞ்சியிருந்த சில விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான காலம் அப்போது கடந்திருந்தது.

போர்க் காலத்தில் நாங்கள் மக்கள் கண்காணிப்புக் குழுவை அமைத்து செயற்பட்டோம். விக்கிரமபாகு, சிறிதுங்க ஆகியோருடன் இணைந்து அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்களுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினோம்.

அப்போது அமெரிக்காவின் 'சுதந்திரக் காவலர் மனித உரிமை விருது' எனக்கு அளிக்கப்பட்டது. அப்போது தூதுவராக இருந்த பிளேக் இதற்குக் காரணமாக இருந்தார். இந்த விருது எங்கள் செயற்பாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உண்மையில் இதன் பிறகுதான் எனக்கு பெருமளவில் அச்சுறுத்தல்கள் அதிகரித்தன.

இவ்வேளையில் அமெரிக்கா யுத்தத்திற்கான நிபந்தனையற்ற ஆதரவு என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. ஆனாலும் தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் தாங்கள் அக்கறை கொண்டுள்ளோம் என்று காட்டுவதற்காகவே இந்த விருது எனக்கு வழங்கப்பட்டதாக நான் தெரிந்து கொண்டேன். அதனால்தான் இந்த விருது வழங்கும் நிகழ்வைப் பகிரங்கமாக நடத்துவதற்கு நான் உடன்படவில்லை.

போரினால் மரணமடைந்த அப்பாவி மக்களின் உயிர்களை ஒருபோதும் மீட்டுக் கொண்டு வர முடியாது. எனவே போருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியவர்களுக்கு இன்று இலங்கைத் தமிழ்மக்கள் குறித்த தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது.

இவர்களுக்கு இன்று ஒரேயொரு சாத்தியமான வழி மட்டுமே இருக்கின்றது. அதுதான் ஒரு நியாயமான அரசியல் தீர்வு.

இது தொடர்பில் அமெரிக்காவும், இந்தியாவும் இலங்கை அரசுடன் தீர்மானகரமான செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவுக்கான துணை இராஜாங்கச் செயலாளர் ரொபர்ட் பிளேக் தனது முன்னைய அரசியல்தீர்வு உபதேசத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் இதுவாகும். இதை நடைமுறைப்படுத்தாமல் மீண்டும் தமிழர்களுக்கு ரொபர்ட் பிளேக்கும்,அவரது அரசும் உண்மைக்கு புறம்பான உபதேசங்களை செய்யக்கூடாது- என்றார் . (ச)

**திறப்பு....**



இரண்டாயிரத்து அறுநூறாவது புத்த ஜெயந்தியை முன்னிட்டு பொல்லேகல மானல்வத்து மகா விகாரையில் கட்டப்பட்ட சம்புத்த ஜெயந்தி மாநாட்டு மண்டபத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைத்தார். (ச)

## வருடாந்தம் 2லட்சம் சிறார்கள் பாடசாலைகளிலிருந்து விலகல்

கொழும்பு, மே9

வருடாந்தம் சுமார் 2 லட்சம் சிறார்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றனர் என நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர் சரத் அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

10-14 வயதுக்குட்பட்டவர்களே அதிகமாக பாடசாலைகளிலிருந்து விலகின்றனர். சில வேளைகளில் 5 ஆம் வகுப்பு சிறுவர்களும் விலகுகின்றனர் பெற்றோர் சிலருக்கு போதிய கல்வியறிவின்மை காரணமாக அவர்கள் தமது பிள்ளைகள் 5 ஆம் வகுப்பு வரை கற்றால் போதுமானது எனக் கருதுகின்றனர்.

பெண்களால் மாத்திரம் தனியாகக் கொண்டு நடத்தப்படும் குடும்பங்களிலும், தாய்மார்கள் மத்தியகிழக்கு போன்ற நாடுகளில் வேலை செய்யும் குடும்பங்களிலும் இந்தப்பிரச்சினை அதிகம் காணப்படுகின்றது.

இதனால் பல சமூகப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பாடசாலைகளிலிருந்து விலகுபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடிந்தால் சிறுவர் தொழிலாளர்கள், சிறுவர் கடத்தல் மற்றும் ஏனைய வகையான சிறுவர் துஷ்பிர யோகங்களையும் கட்டுப்படுத்த முடியும்.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு என்பன இணைந்து நடத்தவுள்ளன - என்றார். (ச)

## உயர்தர அனுமதியின்போது பாடசாலைகளில் பணம் வசூல்; ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே9

உயர்தரத்தில் மாணவர்களை அனுமதிக்கும்போது நடைமுறை சட்டத்துக்கு முரணான வகையில் மாணவர்களிடமிருந்து ஒருசில பாடசாலை அதிகாரிகள் பணம் அறவிடுகின்றனர் என ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு உயர்தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும்போது பாடசாலைகள் வசதிகள் சேவைக் கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் மற்றும் அங்கத்துவக் கட்டணம் தவிர்ந்த எந்தவொரு கட்டணத்தையும் அறவிட முடியாது என ஆசிரியர் சங்க பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2008 - 17 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கட்டண அறவீடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த சுற்றுநிருப விதிமுறைகளை மீறிச் செயற்படுபவர்கள் மீது கல்வி அமைச்சு சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## பெற்றோர் சொல் கேளாத சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைப்பு

கொழும்பு, மே 9

பெற்றோர் சொற்படி கேட்காது வீதிகளில் அலைந்து திரிந்த மூன்று சிறுவர்களைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்களை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைத்த சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை புத்தளம், கியுல, விவசாயக் குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட மூன்று சிறுவர்களும் 12, 13 மற்றும் 16 வயதுடையவர்கள் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவதினம் குறித்த பிரதேசத்தில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒழுங்கீனமாக நடந்து கொண்டிருந்த இந்தச் சிறுவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அவர்களின் பெற்றோரை வரவழைத்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் தங்களின் சொல் கேட்பதில்லை என்றும் பாடசாலைக்குச் செல்லுமாறு கூறினால் அதைக் காதில் வாங்கிக்கொள்வதில்லை என்றும் பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த மூன்று சிறுவர்களையும் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார், நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்களை புனர்வாழ்வுக்காக கல்கந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநகர் நோத்சீ லிமிடெட் (வடகடல்) நிறுவனத்தில் "வலை விற்பனை நிலையம்" நிறுவனத்தின் தலைவர் ஆறுமுகம் பரந்தாபனினால் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. (313)

# திட்டமிட்ட செயற்பாடுகள் அனைத்தும் மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் அமைய வேண்டும்

யாழ்ப்பாணம்,மே 9

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் திட்டமிட்ட செயற்பாடுகள் அனைத்தும் பொதுமக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் அமைந்தால் மேலதிக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு முன்வரும்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு மன்றம், சபை சார்ந்த உத்தியோகத்தர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமைகளில் ஈடுபடுதல் அவசியமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த ஆறாம் திகதி இடம்பெற்ற 'நெல்சிப் திட்டத்துக்காக' தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அனுமதிக் கடிதங்களைக் கையளிக்கும் நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

திட்டமிட்ட வகையில் அரசால் எதிர்பார்ப்பிலான அபிவிருத்திப் பணிகளுக்காகப் பொதுமக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் உலக வங்கியிடம் கூடியளவு நிதியைக் கடனாகப் பெற்ற வழங்குகின்றனர்.

பொருளாதாரத்தை நோக்கியதாக இந்த அபிவிருத்திப் பணிகள் இடம்பெற வேண்டும். இதற்குப் பிரதேச ரீதியாக அமுல்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் கூடியளவு பங்களிப்பான சேவையை வழங்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளின் தேவைகள் அதிகரித்துள்ளன. இதனை நாம் முற்றுமுழுதாகப் பெற வேண்டுமெனில் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் இதனை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி மூலத்தைக் கொண்டு கிராமம் மற்றும் நகரங்களின் அபிவிருத்திகளை ஓரளவேனும் நிறைவேற்றுவோமானால் இன்றும் மேலதிகமாக நிதி ஒதுக்கீடுகளை அரசிடம் கோருவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்-. என்றார். (ம-313)

# தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் சட்டவிரோத செயற்பாடுகள் குறைந்தன

யாழ்ப்பாணம்,மே 9

சட்டவிரோத மதுபாவனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு நீதிமன்றத்தால் வழங்கப்படும் குற்றப்பணங்கள் மற்றும் தண்டனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் யாழ். மாவட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் மதுவரித் திணைக்கள அத்திட்சகர் எஸ்.சோதிநாதன்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக உரும்பிராய், ஏழாலை, நாவாந்துறை, குருநகர், மடம் வீதி, கொழும்புத்துறை ஆகிய இடங்களில் கசிப்பு உற்பத்தியாளர்கள் அதிகமாக இருந்தனர்.

இவ்வாறான செயலைக் கட்டுப்படுத்த பொலிஸார் மற்றும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேடுதலில் கசிப்பு உற்பத்தியாளர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் கள் உற்பத்தியாளர்களும் தமது வருமானங்களுக்காகச் சங்கங்களிடம் அனுமதி பெறாமல் வீட்டில் வைத்தே கள் விற்பனையாலும் ஈடுபட்டார்கள்.

இவ்வாறான குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தால் அபராதப் பணம் விதிப்பதுடன் சிறைத்தண்டனையும் வழங்கப்படுகிறது.

இதனால் தற்போது சட்டவிரோத மதுபாவனை மற்றும் உற்பத்தியாளர்கள் குறைவடைந்துள்ளார்கள்.

எனினும் இவற்றை மீறிக் குற்றச் செயல்களில் ஈடுபடுவர்கள் மற்றும் பொது இடங்களில் வைத்து மதுபானம் அருந்துபவர்கள், புகைத்தலில் ஈடுபடுபவர்கள் மீது அதிவேகமாகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு மதுபாவனையாளர்கள் அனுமதிக்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்களில் மதுபானங்களை வாங்குதல் வேண்டும்.

இவற்றுக்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கினால் சட்ட விரோத மதுபான உற்பத்தியாளர்கள் மற்றும் பாவனையாளர்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரும் நடவடிக்கை எடுக்க முடியும்.- என்றார். (ம-313)

# கல்வியைப் புகட்டினால் மட்டும் போதாது பண்பாடுகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,மே 9

பாடசாலை மட்டுமல்லாது பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களுக்குக் கல்வியை மட்டும் புகட்டினால் போதாது. அத்தோடு, முக்கியமாக விழுமியமான பண்பாடுகளையும் கற்றுக் கொடுத்தல் அவசியமாகும்.

இதன்மூலம்தான் இளைய சமுதாயத்தை நல்வழிப்படுத்த முடியும். இல்லையெனில் தவறான வழிப்போக்கில் இளைய சமுதாயம் உருவாகக் கல்வித் துறை சார்ந்த சமூகங்கள் காரணமாக அமைந்துவிடும்.

இவ்வாறு தெரிவித்தார் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

யாழ். சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 3ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்வில் ''விழுமியப் பண்பாடுகளும் கல்வியும்'' எனும் தலைப்பில் உரைநிகழ்த்தும் போதே அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

நமது ஐந்து புலன்களும் என்ன செய்கின்றன என்பதைச் சரியாகத் தெரிந்துகொண்டே தவறுகளைச் செய்கின்றோம்.

உன்னதமான கல்வியானது மனிதனுடைய மனதையும் புலன்களையும் சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு உறுதுணையாக உள்ளது.

அத்துடன் மேலதிகமாக விழுமியமான பண்பாடுகளைக் கற்பித்தல் அவசியமானதாகும்.

இதன்மூலம்தான் சிறந்த எதிர்காலச் சந்ததியினரை உருவாக்க முடியும். இவற்றைக் [illegible] விழுமியமான பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இளைய சமுதாயத்தை வழிநடத்த வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான சமுதாயத்தின் மூலம்தான் நமது கலாசாரங்களையும் பாரம்பரியத்தையும் பேணிப்பாதுகாக்க முடியும்.

முக்கியமாக உண்மை பேசுதல், அன்பு காட்டுதல், பெரியோரை மதித்தல், இறைவனை வணங்குதல், பெற்றோரை மதித்தல் போன்ற நற்பண்புகளைக் கற்றுக் கொடுத்தல் காலத்தின் தேவையாகவும் உள்ளது- என்றார். (எ-313)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மே 9

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இந்தச் சங்கத்தின் தலைவர் வ.யோகானந்தசிவம், உப தலைவர் க.நாகப்பு, செயலாளர் மா.ஜெயக்குமார், உப செயலாளர் தி.கஜந்தன், பொருளாளர் வே. தவநிருபசிங்கம் ஆகியோரும்-

நிர்வாக சபை உறுப்பினர்களாக நா.மீனேஸ்வரன், சி.அருணன், தெ.தயாளன், ச.கணநாதன்,சி.சிங்கராசா, யோ.கௌகீசன் ஆகியோரும் கௌரவ உறுப்பினராக மா.கணநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313)

* * *

வரணி,மே 9

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாகிகள் தெரிவு கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன் தலைவர் இ.கந்தசாமி, உபதலைவர் வே.இரசத்தினசிங்கம், செயலாளர் ஆர். சுதாகர், உபசெயலாளர் சி.அருணாசலம், பொருளாளர் எஸ்.சுரேஸ்குமார் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக த.தர்மகுலசிங்கம், வே.கணநாதன், ஆ.சாந்தகுமார், கி.சத்தியசீலன், ஆ.நடராசா, க.சரோசாதேவி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (313-122)

## லக்கியப் போட்டிக்கு பிண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே 9

இந்த ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டிகள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளன.

இதனை முன்னிட்டு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கு விண்ணப்பங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகக் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ம-319)

## மானிய விலையில் தென்னங்கன்றுகள்

யாழ்ப்பாணம்,மே 9

வடமாகாணக் காணி நிர்வாகத் திணைக்களத்தினால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் குடும்பம் ஒன்றுக்கு ஐந்து தென்னங்கன்றுகள் வீதம் ஒரு நாற்று எழுபது ரூபா விலையில் வழங்கப்படவுள்ளது. ஆர்வமுடைய பயனாளிகள் தமது கிராம சேவை உத்தியோகத்தரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
உதிரி வருமானங்கள் கைக்குக் கிடைக்கலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியம் நல்லவிதமாக முடிவிற்கு வரும். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்குவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளை பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். புதிய அனுபவம் பெறலாம்.

**இடபம்:**
வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். சிலரை கிண்டல் பேசி, அதில் இன்பம் காண்பீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சில வேலைகளை தவறாகச் செய்து விட்டு மீண்டும் செய்யலாம். வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

**மிதுனம்:**
என்றோ நீங்கள் செய்த உதவி ஒன்றுக்கு, இன்று பதில் உதவி பெறலாம். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். உங்களுக்குப் பிடித்த விடயம் ஒன்று குடும்ப உறுப்பினர்களுக்குப் பிடிக்காமல் போகலாம். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடக்கலாம்.

**கடகம்:**
இறைவழிபாட்டின் மூலம் அமைதி பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் சிரமங்களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பார்த்தபோது, கிடைக்காத ஒன்று இப்போது கிடைக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்காக கடுமையாக அலைய நேரிடலாம்.

**சிம்மம்:**
சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும். பயணங்களால் செலவுகள் இருந்தாலும் அனுகூலம் உண்டு. ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை உறவினர்கள் கொடுக்கலாம். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள்.

**கன்னி:**
பணவரவுகளில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகும். நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று இன்று நல்லவிதமாக முடிவுக்கு வரும். உறவு பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திக்கலாம்.

**துலாம்:**
தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். வரவுக்கேற்ற செலவுகளைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உங்களின் அனுபவம் ஒன்றை குடும்பத்தினருக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, முக்கியமான நபர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:**
எதிலும் அக்கறையுடனும், விழிப்புடனும் செயற்பட வேண்டிய நாள். வேண்டாத சிலரால் பிரச்சினைகள் உருவாகலாம். உடல்நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். எந்த விடயத்திலும் யாருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுக்க வேண்டாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். வெறுப்பு குடிகொள்ளும்.

**தனுசு:**
காலை நேரத்தில் இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். பிரியமான சிலரின் சந்திப்பு நிகழும். உங்களின் விருப்பம் ஒன்றை மற்றவர்களிடம் வெளிப்படுத்துவீர்கள். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். சிலருடன் முக்கிய விடயங்கள் குறித்து ஆலோசிப்பீர்கள்.

**மகரம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்ப உறுப்பினர்கள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட்டு நடக்கலாம். நீண்டநாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைப் பார்க்கலாம்.

**கும்பம்:**
அவசரப்பட்டுச் செய்த காரியம் ஒன்றால் இழப்புகளைச் சந்திக்கலாம். சில வேலைகளை முடிக்க நீண்ட நேரம் காத்திருக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். கனவுத் தொல்லையுண்டு.

**மீனம்:**
உறவினர்கள் வழியில் சிரமங்களைச் சந்திக்கலாம். எந்த வேலையும் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும். உங்களின் செலவில் மற்றவர்கள் காரியம் சாதிக்கலாம். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்வீர்கள். கடன் வசூலாகும்.

# ஊடகவியலாளர் கொலைப்பட்டியல் தொடர்ந்தும் நீளாமல் இருக்கட்டும்

**உலக ஊடக சுதந்திரதினம் கடந்த 3ஆம் திகதி கொண்டாடப்பட்டது. கடந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையின் ஊடகவியலாளர்கள் மற்றும் அந்தக் கொலைகளுக்கான பின்புலங்கள் தொடர்பான ஆய்வுகளின் சில பக்கங்கள் இந்தவேளையில் இங்கு விரிகின்றன.**

**இந்தத் தொகுப்புரையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோரின் பெயர்ப் பட்டியலை அடக்குவது சற்றுச் சிரமமானது என்பதால் அது தவிர்க்கப் பட்டுள்ளது.**

**இந்தத் தொகுப்புரைக்குச் சுதந்திர ஊடக அமைப்பின் செயலாளரும் ஊடகவியலாளருமான சீதா ரஞ்ஜினியின் கருத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.**

பண்பாடு, கலாசாரங்கள் நிலவும் நாடொன்றின் சுபீட்சம், சுதந்திரமான கருத்து வெளிப்பாடுகளிலேயே தங்கியுள்ளது. இனவாத, யுத்தவாத, சதி மார்க்கங்கள் கொண்ட அநீதிமிக்க நிர்வாகத்தின் மூலம் அத்தகைய நாடொன்றில் சுபீட் சத்தை ஏற்படுத்துவதென்பது வெறும் கனவாகவே முடியலாம். மனிதாபிமான மனித நேயம் என்ற பெயரில் ஒரு போதும் உண்மையை மறைத்து விட இயலாது. சுளகினால் சூரியனை மறைத்து விடமுடியாது என்றொரு முதுமொழியும் வழக்கில் உள்ளது. உண்மைக்கு - சத்தியத்துக்கு, பொய் புரட்டுக்களை, புனைக்கதைகளை, அநீதிகளை, சதிகளைச் சுட்டுப் பொசுக்கிப் பிரகாசிக்கும் ஆற்றலும் சக்தியும் உண்டு. அதனால்தான் உலகின் பெருமளவு நாடுகளில் இன்று கருத்துச் சுதந்திரம், இனவாதம், அடக்கு முறை, சதிவலைப் பின்னல்களுக்கு எதிராகப் பெரும் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. மேன்மேலும் உருப்பெற்ற வண்ணமுள்ளன. கருத்துக்களை வெளிப்படுத்துவோர் போன்றே கருத்துக்களை உலகுக்கு அறிவிக்கும் ஊடகங்களும் அடக்கப்படுகின்றன. இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக உலக நாடுகள் இன்று போர்க்கொடி தூக்கியுள்ளன. உலக ஊடகச் சுதந்திர தினத்தைத் கொண்டாடும் இந்த வேளையில் கடந்த காலத்தைச் சற்றுத் திரும்பிப் பார்ப்பது - கருத்து வெளிப்பாட்டுக்கு விடுக்கப் பட்டுள்ள அச்சுறுத்தல்களை எண்ணிப் பார்ப்பது பொருத்தமாக அமையும்.

'ஸ்ரீ லங்கா' என்று அழைக்கப்படும் எமது இலங்கை நாட்டில் கருத்து வெளிப்பாடுகள் நசுக்கப்பட்டமைக்கு மூல காரணியாக உள்ளது பதவிப் பேராசையேயாகும். இந்த நாட்டு வரலாறு இதற்கு நல்ல சான்று பகர்கின்றது. அரச நிர்வாகிகள் பிறரது வார்த்தைகளுக்கு ஏமாறுதல், பிற கருத்துக்களைப் பொறுத்துக் கொள்ளாமை, கருத்தாடல்களுக்கு இடமளிக்காமை போன்ற காரணிகளைப் போன்றே சிவில் மற்றும் வெளியார் ஆக்கிரமிப்புக்களும் இதற்குக் காரணம் என்பதற்குச் சாட்சியங்கள் உள்ளன.


இவை பண்டையகால முடியாட்சி அல்லது மன்னராட்சி யுகமாகக் கொள்ளத்தக்கதாகும். அந்த யுகம் என்றோ முடிவுக்கு வந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஜனநாயக நாடாகக் கொள்ளப்படும் இலங்கையில் கருத்துத்தடை என்பது ஒரு சிறிய விடயம் அல்ல என்பதைக் கடந்த காலம் முழுவதிலும் நடந்த சம்பவங்களை அலசிப் பார்ப்பதன் மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

கருத்துக் கொலை மற்றும் ஊடக அடக்கு முறையில் பாரதூரமான குற்றம் மனிதப் படுகொலையாகும். இந்த மனிதக் கொலைகள் மற்றும் அவை நடந்த விதங்களை ஆராயும் போது, ஊடக அடக்கு முறையின் கொடூரத்தன்மை வெளிப்படும். அவையனைத்தும் நடந்தேறுவதற்குக் காரணியாக அமைந்த சமுதாய அரசியல் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்வதற்கும் அது உதவும்.

அந்தச் சமுதாய அரசியல் அடித்தளத்துக்கு அமைய இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது மனிதப்படுகொலை 1981 ஆம் ஆண்டு ஜூன் 03 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தது. நவரத்தினம் என்ற படப்பிடிப்பாளர் அன்று யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். சுதந்திரத்தின் பின்னர் இந்த நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு எதிராக- அவர்களது இதயத்தையொத்த யாழ். பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் திகதி தீயிட்டுக் கொழுத்தப்பட்ட கொடூரமான கருத்து வெளிப்பாட்டுக் கொலை நிகழ்த்தப்பட்டது. அது தற்செயலாக நிகழ்ந்தது அல்ல. திட்டமிடப்பட்ட நாச வேலையே அது. வடக்கில் அன்று நிகழ்ந்த இந்தக் கொடூரமான அடக்குமுறையின் காரணமாக தமிழ் மக்களின் இதயமாகவும் மூளையாகவும் கருதப்பட்ட அந்த நூலகத்திலிருந்த 97 ஆயிரம் வரையான பெறுமதிமிக்க நூல்கள் தீக்கிரையாகிப் போனதாகத் தகவல்கள் தெரிவித்திருந்தன. அன்றைய இரவு நடந்த சம்பவத்தின் பின்னர் தமிழ் மக்கள் வெந்து வெதும்பி வேதனைப்பட்டுத் துவண்டு போனார்கள். யாழ்ப்பாணத்தில் 1981 ஆம் ஆண்டு ஜூன் 04 ஆம் திகதி நடக்கவிருந்த அபிவிருத்திச் சபைத் தேர்தல் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் நோக்கில் மே 31 ஆம் திகதியிலிருந்தே தெற்கிலிருந்து காடையர் குழுக்களைக் கொண்டு யாழ்.பொது நூலகத்தைத் தீயிட்டுப் பொசுக்கும் சதி செயற்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் ஆத்மாவையே ரணமாக்கி அன்று மேற்கொள்ளப்பட்ட இந்த அடக்குமுறைக்குச் சமமாக தமிழ் இளைஞர் களது அரசியல் குழுக்களின் எழுச்சியும் பலம் பெற்றது.

அரச வானொலி மற்றும் ஏரிக்கரை நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஊடக நிறுவனங்களும் அதன் பின்னரே தோற்றம் பெற்றன. ஒரு விதத்தில், போரியல் பின்புலமொன்றில் உருவான ஊடகக் கலாசாரமொன்றுக்கு உரிமை கோரும் இலங்கையின் ஊடக அடக்குமுறை கலாசாரமும் கூட அதற்கே தாழ் பணிகிறது. கிடைத்துள்ள அடிப்படைத் தரவுகளுக்கு அமைய 1981 இல் இருந்து 2009 ஆம் ஆண்டு வரையில் நிகழ்ந்துள்ள ஊடக மனிதக் கொலைகளின் எண்ணிக்கை 114 ஆகும். இலங்கையை மட்டுமல்ல முழு ஊடக உலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஊடக நீரோட்டத்தின் முக்கிய பத்திரிகையாசிரியரான 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையே இலங்கையில் நிகழ்ந்த இறுதியான ஊடகவியல் மனிதப்படுகொலையாகக் கருதப் படுகிறது. ஆனாலும் இறுதிக்கட்ட யுத்தம் நிகழ்ந்த வன்னியில் எறிகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகிப் பலியான பொதுமக்களோடு அந்தப் பிரதேசத்தில் ஊடகப் பணியில் ஈடுபட்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Cartoon courtesy Michel Cambon WAN-IFRA

ஊடகவியாலளர் இருவரும் படுகொலையுண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஊடகவியாளர்களைப் போன்றே ஊடகப் பணியாளர்கள் கருத்து வெளிப்படுத்தும் தொடர்புத்துறை சார் கலைஞர்கள், கலாசார செயற்பாடுகளை மேற்கொண்டோர் சிலரும் அடங்குவர்.

அந்த வகையில் 1981 முதல் 2009 வரையில் படுகொலை செய்யப்பட்டோரின் விவரம் கீழ் வருமாறு:

ஊடகவியாலளர்கள்-54
ஊடகப் பணியாளர்கள்-29
உரிமையாளர்கள்/ பங்குதாரர்கள்-04
கலை கலாசார செயற்பாட்டாளர்கள்-27
மொத்த எண்ணிக்கை-114

1988 காலப்பகுதியில் ஜே.வி.பிக்கு எதிரான அடக்குமுறையின் போதே கலை, கலாசாரச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட இந்த 27 பேரில் பெருமளவிலானோர் படுகொலையுண்டனர். குண்டுகளுக்கு இரையாகி சிங்கள மற்றும் முஸ்லிம் எழுத்தாளர்கள் இருவரும் ஊடகவியலாளர்கள் சிலரும் கொலையுண்டுள்ளனர்.

எவ்வாறான போதிலும் கொலையுண்டுள்ள 114 பேரில் 80 பேரின் கொலை இனவாதப் பிரச்சினை யுத்தம் மற்றும் அதனோடு சார்ந்தவையாகவே உள்ளன. இதில் அதிகூடிய 60 பேர் தமிழர்களாவர். இந்தக் காரணத்துக்காகக் கொல்லப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்கள், ஊடகப்பணியாளர்கள், கலைஞர்களின் எண்ணிக்கை 14 ஆகும். இவர்களுள் சிலர் குண்டுத் தாக்குதல்களுக்கு இரையாகியுள்ளனர். படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் இனத்தவர்கள் 6 பேரும் மேற்குறித்த காரணத்துக்காகக் கொலையுண்டுள்ளதாகக் கருதப்பட்டாலும் அமைச்சர் அஷ்ரப் மற்றும் ஊடகவியாளர் நியமத்துல்லாஹ் ஆகியோரின் கொலைகள் தொடர்பாக அவிழ்க்கப்படாத முடிச்சுக்கள் உள்ளன.

கருத்துச் சுதந்திரம் மீதான அடக்குமுறையோடு சம்பந்தப்படும் 1981 முதல் இன்று வரையான சமுதாய, அரசியல் படுகொலைகள் பற்றி ஆராய்ந்தால் இன்னும் பல பக்கங்களை நிரப்ப முடியும்.

இறுதியாக 1991 ஆம் ஆண்டில் பிரேரிக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட உலகப் பொதுசன ஊடகத்தினம் கொண்டாடப்படும் இந்த வேளையில், காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் பெயர் கொலைப்பட்டியலில் இடம்பெறாதிருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். பிரதித் எக்னலிகொட காணாமற் போய் ஆண்டொன்றும் மாதங்கள் நான்கும் கடந்துவிட்டன. ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் மீதான அடக்குமுறைக்கு அண்மைக்கால வரலாற்றில் நல்ல தொரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட யுத்தம் இன்றில்லை. யுத்தமயப் பின்புலத் தில்

**'ஸ்ரீ லங்கா' என்று அழைக்கப்படும் எமது இலங்கை நாட்டில் கருத்து வெளிப்பாடுகள் நசுக்கப்பட்டமைக்கு மூல காரணியாக உள்ளது பதவிப் பேராசையேயாகும். இந்த நாட்டு வரலாறு இதற்கு நல்ல சான்று பகர்கின்றது. அரச நிர்வாகிகள் பிறரது வார்த்தைகளுக்கு ஏமாறுதல், பிறகருத்துக்களைப் பொறுத்துக் கொள்ளாமை, கருத்தாடல்களுக்கு இடமளிக்காமை போன்ற காரணிகளைப் போன்றே சிவில் மற்றும் வெளியார் ஆக்கிரமிப்புக்களும் இதற்குக் காரணம் என்பதற்குச் சாட்சியங்கள் உள்ளன.**

நின்று தம்மைப் பிரபலப்படுத்திக் கொள்வதற்கென்றே பிறந்துள்ள நம்நாட்டு ஊடகங்கள் இன்று அந்தரித்துப் போயுள்ளன. அவற்றிற்கு இன்று யுத்தத்தின் பின்னரான தகவல் வெளிப்பாடுகளைத் தேடிப் பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று அரசுக்குச் சொந்தமான ஊடக நிறுவனங்களை விட வரலாற்றில் இதற்கு முன்னர் என்றும் இல்லாதவாறு முக்கிய ஊடகங்கள் சிலவற்றின் உரிமையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக அரசியலில் நேரடியாகவே இணைந்து கொண்டுள்ளமையும் சவாலொன்றாக இருக்கக் கூடும். அவை அனைத்துக்குமிடையில் கண்டும் காணாதவாறு, கேட்டும் கேட்காதவாறு உணரப்பட்டாலும் உணராதவாறு நாம் ஆற்ற நேர்ந்துள்ள பணியானது வெறும் தொழிலொன்று மட்டுமேயல்ல.

இந்த நாட்டு மக்களின் மனச்சாட்சியை வெளிப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சியே என எண்ணுவதற்குத் தற்போது காலம் கனிந்துள்ளது. அப்போது இந்தக் கொலைப் பட்டியல்கள் இன்னும் [illegible] தற்கு அ[illegible]

**தொகுப்பு: சரா**

# தவறும் தண்டனையும்



எந்தப் பதவியில் நாம் இருந்தாலும் எமக்குத் தெரியாமல் கூட அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அது மட்டுமன்றி எமது சொந்தத் தேவைக்குத் துளியளவும் கூடப் பயன்படுத்தக் கூடாது. இதனால் என்ன விளையும் என்பதற்கு இராமயணத்திலிருந்து ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம்.

இராமர் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. ஒருநாள் இராமர் அரச சபையில் உட்கார்ந்திருந்தார். அந்த சமயத்தில் ஒரு நாய் தலையில் அடிபட்டு இரத்தம் ஒழுக அரச சபைக்கு வந்தது. எல்லோரும் ஆச்சரியமாக அதைப் பார்த்தார்கள் இராமர் அந்த நாயைப் பார்த்து ''நீ இங்கே வந்த காரியம் என்ன? என்ன நடந்தது? எதுவாயிருந்தாலும் பயப்படாமல் கூறு'' என்று சொன்னார். உடனே நாய் மெதுவாகச் சொல்ல ஆரம்பித்தது.

''இராமரே நான் தெருவில் போய்க்கொண்டிருந்தேன். அப்போது வேதசாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கற்ற பெரியவர் ஒருவர் எந்தக் காரணமும் இல்லாமல் கையில் வைத்திருந்த தடியால் என் தலையில் அடித்துவிட்டார். அதனால்தான் இரத்தம் வருகிறது. இதை விசாரித்து தகுந்த தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டும் என்றது.

உடனே இராமர் காவலர்களை அழைத்து ''அந்தப் பெரியவர் எங்கிருந்தாலும் தேடி அழைத்துக் கொண்டு வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

அவர்களும் இராமரின் உத்தரவுப்படி அந்தப் பெரியவரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தனர். ''என்ன நடந்தது? '' என்று விசாரித்தார் இராமர்.

''நான் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். குறுக்கே இந்த நாய் வந்தது. அவசரமாகப் போய்க் கொண்டிருந்த எனக்கு வழிவிடாமல் குறுக்கே புகுந்து இடைஞ்சல் செய்ததால் எனக்குக் கோபம் வந்து தடியால் அடித்துவிட்டேன். தர்ம சாஸ்திரங்கள் படித்த எனக்கு கோபம் வந்ததும் நான் என் நிலை இழந்ததுத் தப்புத்தான். எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் நான் அதைக் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறினார் அந்தப் பெரியவர்.

சரி இப்ப இவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று யோசித்த இராமர் அதை அந்த நாயிடமே கேட்டார்.

அதற்கு அந்த நாய் ''இவரை ஏதாவது ஒரு கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக நியமித்து விடுங்கள். அதுதான் இவருக்குச் சரியான தண்டனை'' என்றது. இதைக் கேட்டதும் இராமர் முகத்தில் புன்னகை. ஆனால் அங்கேயிருந்த மற்றவர்களுக்கெல்லாம் ஆச்சரியம்.

''அது எப்படி? தப்புச் செய்தவருக்குத் தண்டனையைக் கொடுக்காது தர்மகர்த்தா பதவியைக் கொடுக்கச் சொல்கிறது இந்த நாய்'' என்று சந்தேகித்து நாயிடமே இந்த சந்தேகத்தைக் கேட்டனர். இதற்கு அந்த நாய் பின்வருமாறு பதில் கூறியது.

''நான் முற்பிறப்பில் ஒரு கோயிலுக்கு தர்மகர்த்தாவாக இருந்தேன். எவ்வளவோ கவனமாக, எச்சரிக்கையாகத்தான் என்னுடைய கடமைகளைச் செய்து வந்தேன். இருந்தாலும் சில சமயங்களில் என்னையும் மீறிக் கோயில் சொத்தை நான் அனுபவிப்பதற்குக் காரணமாகிவிட்டேன். ஒரு கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக இருக்கிறவர் எப்படியும் இந்தப் பாவத்திலிருந்து தப்பிக் கொள்வது கஷ்டம். அதனால்தான் நான் இந்தப் பிறவியில் நாயாகப் பிறந்து இப்படிக் கஷ்டப்படுகிறேன். இதே நிலைமை இந்த ஆளுக்கும் ஏற்பட வேண்டும். அதற்காகத்தான் அவரையும் ஒரு கோயிலுக்குத் தர்மகர்த்தாவாக நியமிக்கும் படி கேட்டுக் கொண்டேன்'' என்றது அந்த நாய்.

நமக்குத் தெரியாமல் கூட இதிலிருந்து மற்றவர் சொத்துக்களை அனுபவித்தாலும் அடுத்த பிறப்பில் நாயாகப் பிறந்து கஷ்டப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.

கோயில் வாசலில் இரண்டு நாய்கள் பேசிக் கொண்டிருந்தன. அப்போது ஒரு நாய் போன ஜென்மத்தில் நான் மனிதனாகத்தான் இருந்தேன். ஒரு கோயில் பூசாரி பேச்சைக் கேட்டு அவரோடு சேர்ந்து கொண்டேன். கடவுளின் நகைகளையெல்லாம் அபகரித்து என்னிடம் கொடுத்தார். நான் எடுத்துக் கொண்டு வந்தேன். திருடியது அவர்தான்; ஆனால் எடுத்துக் கொண்டு வந்தது நான். இருந்தாலும் தற்போது பூசாரி மட்டும் என்னிடம் மாட்டினார் என்றால் கடித்துக் குதறிவிடுவேன்'' என்றது.


''அவசரப்பட்டு அப்படிச் செய்துவிடாதே! பதிலுக்கு அவரும் உன்னைத் திருப்பிக் கடித்தாலும் கடித்துவிடுவார். ஏனென்றால் அவரும் இப்போது ஒரு நாயாகத்தான் இருக்கிறார்'' என்றது மற்ற நாய். ''அது எப்படி உனக்குத் தெரியும்'' என்று கேட்டது முதலில் கூறிய நாய். அந்தப் பூசாரி நான்தானே என்றதாம் மற்ற நாய்.

கோ. சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜே' பறவை

காக்கைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவகை வண்ணப் பறவைகள் 'ஜே' என்று அழைக்கப் படுகின்றன. இந்தப் பறவைகள் ஓக் மரத்தின் பழங்கள், விதைகள் ஆகியவற்றை விரும்பி யுண்ணும் இயல்புடையன. இதனால் ஓக் மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்ற பிரிட்டன் ஐரோப்பா, ஆசியா மற்றும் ஜப்பான் ஆகிய இடங் களில் இவற்றைக் காண முடியும். இந்தப் பற வைகள் காக்கைக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது நினைப்பதற்குச் சற்றுக் கடினமான விடயமாகத்தான் உள்ளது. ஏனென்றால் இவை வண்ண நிறங்களில் காட்சியளிப்பதே இதற்குக் காரணமாகும்.


-ராஜன்

இவற்றின் கறுப்பு நிற இறக்கைகளின் மீது பளபளப்பான நீலநிறம் காணப்படுகின்றது. உடற்பாகம் இளம் சிவப்புக் கலந்த மண்ணிறத்தில் அமைந்துள்ளது. அத்துடன் வாலுக்குக் கீழ்ப் புறத்தில் வெள்ளை நிறம் காணப்படுகின்றது. இவற்றின் தலை யின் மேற்புறத்தில் கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் அமைந்த கிரீடம் ஒன்றும் காணப்படுகின்றது. மேலும் கறுப்பு நிறத்திலான மீசையொன்றும் இவற்றிற்கு உண்டு.ஜே பறவைகள் மரங்களுக்கிடையில் வசிப்பதையே பெரிதும் விரும்புகின்றன. அதனால் பூங்காக்கள், தோட்டங்கள் ஆகிய இடங்களில் இவற்றைப் பார்க்க முடியும்.

இவை நாம் உண்ணும் உணவுகளை இலையுதிர் காலத்தில் சேகரித்து மழைக் காலத்துக்காகச் சேமித்து வைக்கின்றன. இடையில் காலநிலை குளிராகவோ அல்லது போதியளவு உணவு பெற முடியாமலோ இருப் பின் இவை தாம் உணவு சேகரித்து வைத்த மறைவிடங்களுக்குச் சென்று அவற்றை உண்கின்றன. ஜே பறவைகள் ஓக் மரங்கள் பெருகுவதற்குப் பெரிதும் துணை நிற்கின்றன. ஏனென்றால் ஓக் மரத்தின் பழங்களும் விதைகளும் சேமித்து வைக்கப்பட்ட இடங்களை இவை மறந்து அவற்றை உண்ணாது விட்டுவிடும். அந்த வேளையில் இவை முளைக்க ஆரம்பித்து மரங்களாக வளருகின்றன. ஆண், பெண் பறவைகள் இரண்டும் தமது குஞ்சுகளுக்கு உணவூட்டுகின்றன. தாம் சேகரிக்கும் பூச்சிகளைத் தமது கூடுகளுக்குக் கொண்டு சென்று அவற்றிலுள்ள கடினமாக பகுதிகளை அகற்றிவிட்டு சுவையான பாகங்களைக் குஞ்சுகளுக்கு வழங்குகின்றன. பகல் வேளைகளிலேயே ஜே பறவைகள் தமக்குரிய உணவைத் தேடுகின்றன.


அத்துடன் ஏனைய பறவைகளின் கூடுகளிலுள்ள முட்டைகள் மற்றும் குஞ்சுகளைக் கொள்ளையிட்டு அவற்றையும் தமது குஞ்சுகளுக்கு உணவாக வழங்குகின்றன. எதிரிகளைக் கண்டவுடன் இந்தப் பறவைகள் தமது இறக்கைகளைச் சுருக்கிப் பின் விரிவடையச் செய்கின்றன. இதன்மூலம் தம்மைப் பெரிதாகக் காண்பித்து எதிரிகளைப் பின் வாங்கிச் செல்ல வைக்கின்றன. பறவைகளுக்கு எப்போதுமே எதிரிகள் அதிகம். தமது எதிரியைக் கண்டவுடன் ஜே பறவைகளே முதலில் சாக்... சாக் என்ற பீதி கலந்த ஒலியை எழுப்பி ஏனைய பறவைகளை உசார்ப்படுத்தி விடுகின்றன. இதைப்போன்றே சிறு கழுகு களைக் கண்டதும் சிக்... சிக் என்று ஒலியெழுப்புகின்றன. இந்த ஒலி ஏனைய பறவைகள், அணில் போன்றவற்றை உசார் நிலையில் இருக்க உதவுகின்றது.

## நாய்கள் பற்றிய தகவல்

* மனிதர்களை விடப் பத்து மடங்கு கேட்கும் சக்தியும், மோப்ப சக்தியும் நாய்களுக்கு உண்டு.
* நாய்களின் ஆயுட்காலம் 15 ஆண்டுகள்.
* நாயைக் கிரேக்கர்கள் தெய்வமாகக் கருதுகின்றனர்.
* நாய்க்கு இதயத் துடிப்பு ஒரே சீராக இருக்காது. 70 முதல் 120 வரை மாறுபடும்.
* ஜேர்மனியின் டாபர் மேன் நாய்தான் உலகப்புகழ் பெற்றது.
* நாயின் நாக்கு நீளமானது. அதைக் கொண்டே தன் உடலைத் தூய்மையாக வைத்துக் கொள்கிறது.

ஜிந்து

## மண் புழு



மண்புழுக்கள் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்காதவை.
இவை நிலத்தை மென்மையாக வைத்துக் கொள்கின்றன.
காற்று மாசுபடுதலைத் தடுக்க வல்லவை.
இதற்குக் கண்களோ காதுகளோ எழும்புகளோ இல்லை.
ஆனால் ஒளியையும் அதிர்வையும்
உணரும் ஆற்றல் கொண்டவை.
இவை இறப்பர் போன்ற அமைப்புக் கொண்டவை.
இதன் பின் துண்டத்தை வெட்டி விட்டால்
மீண்டும் வளர்ந்து கொள்ளும்.

பபி.

## காண்டா மிருகம்



முரட்டுத் தோலைப் பார்த்தாயா?
முகத்தில் கொம்பைப் பார்த்தாயா?
உருண்டு கிடக்கும் பாறைபோல்
உருவம் பெரிது பார்த்தாயா?
கோட்டுப் போட்டு மூடிவைத்த
கொழுத்த உடலைப் பார்த்தாயா?
தோட்டா கொண்டு சுட்டாலும்
துரத்தும் காண்டா மிருகம் இது
புலியும் அஞ்சும் பலம் இருக்கும்
புல்லைத் தின்றே வாழுமாம்
வலிய வந்த சண்டையிலே
வெற்றி சூடி நிற்குமாம்!

சா.பபிதா,தரம் 8 ஏ,
யா/கோண்டாவில் இராம கிருஸ்ண
மகாவித்தியாலயம்.

## தேவதை

[தொடர்ச்சி]

அந்த வேதாளம் இரவு நேரம் ஊருக் குள் வந்து திருமணம் ஆகாத பெண்கள் யாராவது வந்தால் அவர்களை அடித்து இரத்தம் குடித்துக் கொன்று வந்தது.



திருமணம் ஆகாத பெண்களை விட்டு விட்டு வேறு யாரையும் தொடுவதும் இல்லை; இந்த வேதாளம் கண்ணுக்குத் தென்படுவதும் இல்லை. இந்த விடயம் ராஜாவுக்குத் தெரிந்ததால் வேதாளத் தைக் கொல்ல ஆள்களை அனுப்பினார். ஆனாலும் அதைக் கொல்ல முடியவில்லை. ராஜா குழம்பிப் போய் சோர்வாக இருந்த போது ராஜாவின் மனக்கவலையை மீனா அறிந்தாள்.

ஒரு நாள் ராஜகுமாரி ரொம்பத் தைரி யமாக இரவு நேரம் அரண்மனைப் பின் பக்க வாசல் வழியாக வேதாளத்தைப் பார்க் கப் புறப்பட்டாள். கொஞ்சத்தூரம் போய் ஊரைக் கடந்ததும் வெள்ளிக் கொலுசை மாட்டி "சலக் சலக்" என்று சத்தம் வரு கின்ற மாதிரி நடக்க ஆரம்பித்தாள். உடனே பக்கத்தில் இருக்கின்ற ஒரு மரத்தில் இருந்த அந்த வேதாளம் பாய்ந்து வந்து நின்றது. ராஜகுமாரி மீனாவுக்கு அதைப் பார்த்ததும் பயமாகிவிட்டது. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு வேதாளத்தைப் பார்க்காத மாதிரி உட்கார்ந்திருந்தாள். அந்தநேரம் ராஜகுமாரியின் கண்ணைப் பார்த்த வேதாளம் மின்னல் தாக்கியதுபோல் தடுமாறியது.

அதே வேளையில் ராஜகுமாரி சுதாகரித்தபடி, தனது இடுப்பில் இருந்த கத்தியைத் தூக்கி வேதாளத்தின் நெஞ்சில் எறிந்தாள். வேதாளத்தின் நெஞ்சு பிளந்து இரத்தம் சீறியது.

வேதாளம் சாகப்போகும் நேரத்தில் ராஜகுமாரியைக் கூப்பிட்டு "தேவியாரே! நான் வேதாளம் இல்லை; பக்கத்து நாட்டு அரக்க வம்சத்தவன். உங்கள் ஊரில் செல்வச் செழிப்போடு மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதைச் சீர்குலைக்க எங்கள் ராஜாவால் வேதாள வேடம் போட்டு அனுப்பப்பட்டவன் " என்று கூறியது. இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவன் உயிர் பிரிந்தது. நாடே ராஜகுமாரியைப் புகழ்ந்தது. வீரத்திருமகள் என்று அவளை முடிசூட்டி இளவரசி ஆக்கினார்கள். "என்னடா பேரன்; அந்த ராஜகுமாரி மாதிரி நீயும் நன்றாகப் படித்து வீரமா, நல்ல தைரியத்தோடு, எதற்கும் பயப்படாமல் இருக்கவேணும் என்ன?" என்று தாத்தா கேட்க, "கொர்...கொர்" என்ற குறட்டையுடன் கணேஷ் தூங்கிக் கொண்டிருந்தான்.

விடிபற்காலை ஐந்து மணிக்கு படிப்பதற்காக கணேஷை எழுப்பி விட்டார். கணேஷும் எழுந்து முகம் கழுவிவிட்டு வந்து புத்தகத்தை எடுத்தவாறு தாத்தாவிடம் கேட்டான் "என்ன தாத்தா! இரவு நீங்கள் ஏதோ ராஜா, ராஜகுமாரி, வேதாளம் என்று சொன்னீர்கள். ஆனால் எனக்கு முழுக்கதையும் ஏன் சொல்ல வில்லை?" என்று. தாத்தா கலகலவென்று சிரித்து விட்டார்.

[முற்றும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிவாரக் கோயில்களைத் தன்னகத்தே கொண்ட சிறப்பு வாய்ந்த வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கம் செட்டியார் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்று 1787 ஆம் அண்டு தொடங்கப் பட்ட ஆலய கட்டப்பணிகள் 1790 ஆம் ஆண்டு நிறைவு பெற்றன.

1790 ஆம் ஆண்டு வாலம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கான பிரிவாரக் கோயில்களையும் அமைத்து சித்திரை மாதம் பூர்வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிசேகமும் செய்வித்தார்.

அதனைத் தொடர்ந்து நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெறவும் ஒழுங்குகளைச் செய்தார். ஆலயத்தினைத் தானே இனிது பரிபாலித்த பின்னர் தனது புத்திரர்களான ஸ்ரீகோபால செட்டியார், ஸ்ரீ கந்தப்புச் செட்டியார் ஆகியோரிடம் ஆலயத்தினை ஒப்படைத்தார்.

1805 ஆம் ஆண்டு தொடக்கம் கோபாலச் செட்டியார், பொன்னுச்சாமிச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியாரின் மனைவி கண்ணம்மா ஆச்சி, அதனைத் தொடர்ந்து அவர்களின் புதல்வர்களினாலும் பரிபாலிக்கப்பட்டதாக வரையப்பட்டுள்ள சாசனங்கள் கூறுகின்றன.

ஈழத்துச் சைவசமய வரலாற்றில் சிறப்புக்குரிய ஆலயமாக இருந்து வரும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தனக்கே உரிய பல சிறப்பம்சங்களைக் கொண்டமைந்துள்ளது. இந்தக் கோயில் ஏனைய பரிவாரக் கோயில்களை யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு இடங்களில் கொண்டமைந்தமை சிறப்பு வாய்ந்த விடயமாகும். வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் பரிவாரக் கோயில்களாக வேம்படிப் பிள்ளையார் கோயில், வண்ணை மேற்கில் உள்ள ஐயனார் கோயில், காளிகோயில், கற்கட்டு வைரவர் கோயில், பண்ணை முத்து மாரி அம்மன் கோயில் ஆகியன ஆகம முறைப்படி கட்டப்பட்டவைகளாகும்.



இந்தக் கோயில்களில் வேம்படிப் பிள்ளையார் கோயிலைத் தவிர ஏனைய கோயில்கள் யாவும் எல்லைக் கோயில்களாக வும் காவல் தெய்வங்களாகவும் கருதப்படுகின்றன. வைத்தீஸ்வரன் கோயிலின் ஆரம்ப கர்த்தாவான ஸ்ரீமான் வைத்திலிங்கச் செட்டியாரின் தந்தையாரான கோபாலச் செட்டியார் சோழ நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்த காலந்தொட்டே பூசித்து வந்த விநாயகப் பெருமான் குடிகொண்டிருக்கும் இடமே வேம்படிப் பிள்ளையார் கோயிலென தற்பொழுது அனைவராலும் வணங்கப்பட்டு வருகின்றது. இதற்கு கோயில் அமைத்த பெருமை வைத்திலிங்கச் செட்டியாரையே சாரும். அது மட்டுமன்றி இந்த கோயிலமைந்திருக்கும் இடம் வியாபாரத்தாபனமாக இருப்பதனால் அதனைக் கடைத்தெருப் பிள்ளையார் கோயிலென்றும் அழைக்கப்படலாயிற்று.

வைத்தீஸ்வரன் கோயில் உற்சவங்கள் நடைபெறும் விசேட காலங்களில் பரிவாரக் கடவுளான விநாயகருக்கு அபிஷேகம் செய்த பின்னரே ஏனைய கிரியைகள் இடம்பெறுவது வழமையான ஒன்றாகும். வண்ணார் பண்ணை மேற்கில் அமைத்துள்ள ஐயனார் கோயில் ஸ்ரீ பூரணை புட்கலை சமேத ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் அல்லது அரிகரபுத்திர ஐயனார் என்று அழைக்கப்படுகின்றன. வைத்தீஸ்வரன் கோயிலின் சிவன் மகோற்சவத்தின் போது பூர்வாங்கமாகச் சில கிரியைகள் பரிவாரக் கோயில்களில் இடம்பெறுவது இந்தக் கோயிலின் பாரம்பரியமாகும்.

மாசி மாதத்தில் கொடியேற்றம் ஆரம்பமாகும் முன்னர் வரும் தை மாதத்தில் வைத்தீஸ்வரன் கோயிலின் உள்ள பூரணை புட்கலை சமேத எழுந்தருளும் அரிகரபுத்திர ஐயனார் சுவாமி யானை வாகனத்தில் ஐயனார் கோயிலுக்குச் சென்று காப்புக்கட்டும் நிகழ்வு நடைபெறும்.

பிடாரி அல்லது பத்திரகாளி என்றும் அழைக்கப்படுகின்ற மற்றுமொரு பரிவாரக் கோயிலான காளி கோயில் வண்ணை மேற்கில் ஐயனார் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது. சிவன் மகோற்சவத்தின் முன்னர் வரும் மாசிப் பருவத்திற்கு சிவன் கோயிலில் இருக்கும் காளி அம்பாள் எழுந்தருளி பரிவாரக்கோயிலான காளி கோயிலுக்கு இடப வாகனத்தில் ஊர்வலமாகச் சென்று காப்புக் கட்டி வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அதுமட்டுமன்றி நவராத்திரி திருவிழாவின் இறுதி நாளான விஜயதசமி அன்று சிவன்கோயிலின் சந்திரசேகர மூர்த்தம் குதிரை வாகனத்தில் பரிவாரக் கோயிலான காளிகோயிலுக்கு வந்து வாழை வெட்டி திரும்பும் நிகழ்ச்சியும் இங்கு நடைபெறுகின்றது.


பண்ணையில் அமைந்துள்ள மாரியம்மன் கோயில் வைத்தீஸ்வரன் கோயிலின் எல்லைக் கோயிலாக மட்டுமன்றி அங்கிருந்து மக்கள் அனைவரையும் காக்கும் தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது. இதனை மீனாட்சி அம்மன் கோயில் எனவும் அழைப்பது வழக்கம். எனினும் இங்கு குடியிருக்கும் தெய்வம் மாரியம்மன் ஆகும். இதனால் பிள்ளை முத்துமாரியம்மன் கோயில் என அனைவராலும் அழைக்கப்படுகின்றது.

கொடியேற்றத்திற்கு முதல் வரும் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் பண்ணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் விசேட அபிஷேகப் பூசைகள் இடம்பெறுவதுடன் வைத்தீஸ்வரன் கோயிலில் அமைந்துள்ள முத்துமாரி அம்மனுக்கும் விசேட உற்சவமும் நடைபெறும்.

**சோபனா**

(தொடரும்)

# நோய்தீர்க்கும் அத்திமரத்தின் கீழ் அமர்ந்து முப்பிணி தீர்க்கும் அத்தியடிப்பிள்ளையார்



(சென்றவாரத் தொடர்ச்சி)

அறங்காவலர் சைவப்பெருமகனார் வீரகத்தியின் மறைவினை அடுத்து பொதுமக்களும், பக்தர்களும் ஒன்று சேர்ந்து ஆலயப் பணிகளை முன்னெடுத்து வந்தனர். 'இறைவனை நம்பினோர் கைவிடப்படார்' என்பதுபோல் சீரும் சிறப்பும் தொழில் வளங்களும், ஆன்மிக நலன்களும் நிறைந்து விளங்கின. கோயில் வழிபாட்டுப் பொருள்கள், வீதிவலம் வரும் வாகனங்கள் கட்டுமானங்கள் என்பவற்றை அன்பளிப்பாக அள்ளி வழங்கினர்.

இவர்களில் பாவட்டங்காட்டு பொன்னம்பலம் என்ற வர்த்தகர் குறிப்பிடத்தக்கவர். இவர் வர்த்தக நடவடிக்கைகளுக்காகத் தென்னிலங்கைக்குச் சென்று வரும் போதெல்லாம் கிடைக்கும் இலாபத்தில் பெரும் பகுதியை பிள்ளையாரின் திருப்பணிக்கே உதவி வந்தார். இவரது முயற்சியால் அர்த்த மண்டபம், மகா மண்டபம், சபா மண்டபம் என்பவை உருவாகின. பல வருடங்களாக அலங்காரத்திரு விழாவாக நடந்துவந்த வருடாந்த திருவிழா இவரது காலத்திலேயே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பெருந் திருவிழாவாக நடைபெறத் தொடங்கியது. இவர் வழங்கிய கொடிமரம் தற்போது பெரும் திருவிழா காலத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

இந்தக் கோயிலில் 1970 ஆம் ஆண் டுப் பகுதியில் ஓர் அற்புதச் சம்பவமொன்று இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இங்கு வைத்து வழிபட்டு வந்த ஐம்பொன்னினால் செய்யப்பட்ட பிள்ளையார் எழுந்தருளி விக்கிரகம் திருட்டுப் போனது. அதிர்ச்சியும் கவலையும் அடைந்த மக்கள் விநாயகரிடம் வேண்டுதல் புரிந்து வந்தனர். அந்த வேளையில் யாரும் ,எதிர்பாராத வண்ணம் 3 ஆம் நாள் ஆலயத்திற்கு அருகில் உள்ள வாய்க்காலில் அந்த விக்கிரகம் மறைத்துக் கட்டியபடி போடப்பட்டிருந்தது.

திருடப்பட்ட ஐம்பொன் விக்கிரகத்தை குடாநாட்டுக்கு வெளியே கொண்டுசென்றபோது திருடியவருக்கு தொடர் இரத்த வாந்திபேதி ஏற்பட்டு தான் செய்த தெய்வக் குற்றத்துக்கான தண்டனைதான் இந்த நோய் என்பதை உணர்ந்து திருப்பிக்கொண்டு வந்து போட்டதாகவும் கூறப்படுகிறது.

பிற்பட்ட காலத்தில் திருடியவரே இந்த அற்புதத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

1975 ஆம் ஆண்டு இந்தக் கோயிலின் வளர்ச்சியின் வரலாற்றில் துரித முன்னேற்றம் ஏற்பட்டது. பொது மக்கள் இணைந்து பராமரித்துவந்த அத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு நிர்வாக சபை ஏற்படுத்தப்பட்டு அதன் பொறுப்பில் திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அத்தியடியைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான க. குணரத்தினம் இந்தக் கோயிலின் திருப்பணிகள் பலவற்றை தம் செலவிலேயே மேற்கொண்டார்.

விநாயகப் பெருமான் எழுந்தருளி வெளிவீதியுலா வருவதற்குரிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய சித்திரத்தேர் மற்றும் சப்பரத்தையும் அமைத்து வெள்ளோட்ட விழா நடத்தி வெகுசிறப்பாக மஹா கும்பாபிஷேகத்தையும் யானை முகத்தானின் அருட்கடாட்சத்துடன் செய்து முடித்தார். பின்பு பொறுப்பேற்ற ஆலய சபையினர் ஆலயத்தின் தெற்கு வீதியில் கணபதி கலாசார மண்டபத்தை அமைத்து அன்னதானம், விழாக்கள், திருமணங்கள் போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

மூர்த்தி தல தீர்த்த சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் பரிவாரமூர்த்தி, மனோன்மணி அம்மன், முருகன், வள்ளி, தெய்வானை, தெட்சணாமூர்த்தி, மகாலட்சுமி, வைரவர், நாகதம் பிரான், சிவன் பார்வதி, ஸ்ரீசங்கர நாராயணன் ஆகிய தெய்வங்களுக்கு சிற்றாலயங்கள் அமைத்து விசேட பூஜைகள் விசேட தினங்களில் நடை பெறுகின்றன.

தமது குறைகள் தேவைகளை எடுத்தியம்பி வேண்டுதல் புரியும் அடியவரைத் தனது துதிக்கையால் அணைத்து ஆசியருள் பொழிந்துவரும் ஆடல் அழகன் அத்தியடியானின் ஆலயத்தில் சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி, கார்த்திகை, பூரணை போன்ற மாதாந்த திருவிழாக்களும், சிவராத்திரி, நவராத்திரி, கந்த சஷ்டி, திருவெம்பாவை, கார்த்திகை தீபம், பிள்ளையார் கதை முதலிய சிறப்பு தின பூஜைவழிபாடுகளும் நடைபெறுகின்றன.

இந்த ஆலயத்தின் மஹோற்சவம் வருடாந்தம் சித்திரைப் புதுவருட பூஜை வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

இந்த ஆலத்தின் மஹோற்சவம் வருடாந்தம் சித்திரைப் புதுவருடப்பிறப்பன்று தேர்த்திருவிழா அமையும் படியாக 10 தினங்கள் முன்பு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெறும்.

தற்போதைய திருப்பணிச் சபையினரின் ஏற்பாட்டில் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கமைய கோபுரம் இல்லாத குறையை நீக்கும் பொருட்டு உள்ளூர், வெளிநாட்டு அடியவர்களின் உதவியுடன் பஞ்சதள ராஜகோபுரம் அமைக்கும் பணிகள் கடந்த பங்குனி உத்தர நாளில் அடிக்கல் நட்டு நடைபெற்று வருகின்றன.

**எஸ்.யேசுதாஸ்**

மருத்துவ குணம்மிக்க வேப்பமரம் போல் அத்தி மரத்தின் வேர், பட்டை இலை, பழம் என்பனவும் சில நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாகப் பயன்படுகின்றன. இந்த நோய் தீர்க்கும் அத்தி மரத்தடியில் அமர்ந்து அடியவரின் குறைகளையும், முப்பிணிகளையும் தீர்த்து வரும் அத்தியடிப் பிள்ளையாரின் பெருங்கருணையைப் போற்றி மகிழ்வோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளவாளர் நிலையம் திறந்து வைப்பு

வலிகாமம், மே.9

வலிகாமம் வலய விசேட கல்வி வளவாளர் நிலையத்தின் திறப்பு விழா வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன் தலைமையில் வெள்ளிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைக்க வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன் கட்டடத்தை திறந்து வைத்தார்.

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி வளவாளர் நிலையத்தின் இணைப்பாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர்(விசேட கல்வி) என்.முருகானந்தன் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 11.05.2011 விநியோகிக்கப்படும்.
விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். மீண்டும் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

* றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை
* துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
* P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி

T.P.: 021 222 2867, 0776090926

(3902)(25-50)

## வாகன சேவை

6000 கிலோ வரை பொருள்கள் ஏற்றி இறக்கக் கூடிய கன்ரர் ரக வாகனம் தனியாரின் விநியோக சேவையில் ஈடுபடுத்தச் சங்கம் தீர்மானித்துள்ளது. எனவே
வாகன சேவை தேவையானவர்கள் பின்வரும் முகவரிக்கு உடன் தொடர்புகொள்ளவும். (சி-578271)

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## VISA - வீசா
Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC**, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

## விவசாய சம்மேளனத்துக்கு லான்ட் மாஸ்ரர்

வரணி, மே 9

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்துக்கு லான்ட் மாஸ்ரர் ஒன்று கமத் தொழில் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேச விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைக்கு தம்மிடம் தொடர்பு கொண்டு லான்ட் மாஸ்ரரைப் பெற்று பயன்பெறுமாறு மேற்படி விவசாய சம்மேளனச் செயலாளர் க.தியாகராசா கேட்டுள்ளார். (எ-122)

## பாலை மரங்களை திருடிய நபர் சிக்கினார்!

கொழும்புத்துறை, மே 9

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் வீட்டுக் கூரை அமைப்பதற்கு வைத்திருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பாலை மரங்களை திருடிய நபர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

வளன்புரம் பகுதியைச் சேர்ந்த குறித்த திருட்டு நபர் திருடிய மரவகைகள் வெவ்வேறு இடங்களில் விற்றும் மறைத்தும் வைத்திருந்தமை தெரியவந்தது. அதையடுத்து அவரிடம் இருந்து ஒரு தொகுதி மரங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த நபருடன் மேலும் பலர் இணைந்து திருட்டில் ஈடுபட்டமையால் அவர்களை பிடிப்பதற்காக பொலிஸார் தொடர்ந்தும் விசாரணை செய்து வருகின்றனர். (எ-135)

## பெண்ணுக்கு எரிகாயம்

மண்ணெண்ணெய் விளக்கு சரிந்து தீப்பற்றிக் கொண்டதில் வயோதிபப் பெண் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இதேயிடத்தைச் சேர்ந்த சிவபாலன் சரஸ்வதிப் பிள்ளை (வயது 65) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்கானார்.

## கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்
## புதிய நிர்வாக சபைத் தெரிவு

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் நிர்வாகசபை உறுப்பினர் உட்பட நான்கு பேர் மீது ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களால் நம்பிக்கையில்லா தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு 30.04.2011 இல் நிர்வாகம் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. புதிய நிர்வாகசபையில்

| | |
|---|---|
| தலைவர்: | திரு.செ.செல்வகுமாரன் |
| உபதலைவர்:- | திரு.பு.ஜீவானந்தன் |
| செயலாளர்:- | திரு.ச.செல்வகுமார் |
| உபசெயலாளர்:- | திரு.இ.குகானந்தன் |
| பொருளாளர்:- | திரு.இ.இந்திரராசா |

நீக்கப்பட்ட நிர்வாக சபை உறுபினர்களுக்குப் பதிலாக தொழிற்சங்க உறுப்பினர்களிலிருந்து நான்கு உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டன. உறுப்பினர்களாக

திரு.இரா.தர்மராசா
திரு.ச.ரவீந்திரலால்
திரு.அ.சிவானந்தன்
திரு.இ.குமரர்

ஆகியோர் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட் டுள்ளனர்.

செ.செல்வகுமாரன்,
தலைவர்.

(சி-578232)

ச.செல்வகுமார்,
செயலாளர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**ஆனந்தம் வசந்தன்**
(கண்ணன்- டென்மார்க்)

தோற்றம்
22.08.1964
மறைவு
20.04.2010

திதி: ஸப்தமி

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம் -என்றும்
உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி...
இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல உசன் முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(49,22,24)

உசன், மிருசுவில். (3920) குடும்பத்தினர்.

## பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, அரசடி வீதி, இல.39 இல் அமைந்துள்ள **"மாதவன் வளவும் குசவன் புலமும் குசவன் வளவும்"** நில.பர.02 குளி 12ஆம் கிணற்றில் அரைவாசியும் இது நில அளவையாளர் **வி.சிறிகரன்** அவர்களது 1990.05.06/220ஆம் இலக்கப்படத்தில் துண்டு, 01 எனக் காட்டப்பட்டுள்ளது.இவ்வாதனத்தில் சொரியலாய் 1/40 பங்குக்கு அதே முகவரியைச் சேர்ந்தவரும் தற்சமயம் டென்மார்க்கில் வதியும் **திரவியநாதன் உருத்திரதீசன் மனைவி கௌரி** என்பவர்களாகிய நாம் பிரசித்த நொத்தாரிஸ் **க.சிவசுப்பிரமணியம்** முகதாவில் 2004.03.25ஆம் திகதி 2934ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சொந்தக்காரராவோம் என்றும் இதனால் பொது மக்களுக்கு பகிரங்க அறிவித்தல் கொடுக்கிறோம்.

இக்காணியை மோசடி உறுதியை தயாரித்து விற்பதற்கு ஒரு பகுதியினர் எத்தனிக்கிறார்கள் என்றும் இக்காணியை கொள்வனவு செய்வதால் வரும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளி ஆகமாட்டோம் என்றும் பகிரங்க அறிவித்தல் கொடுக்கிறோம்.

(3950)

திரு.திரவியநாதன் உருத்திரதீசன்,
திருமதி உருத்திரதீசன் கௌரி.

## நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | நான்காம் ஆண்டு |
|---|---|
| தோற்றம் 05.06.1939 | தோற்றம் 01.12.1971 |
| மறைவு 20.04.2010 | மறைவு 10.07.2007 |
| சின்னத்துரை சற்குணம் | சற்குணம் றேனுகா |
| திதி: ஸப்தமி | |





பாசத்தின் இருப்பிடமே பண்பின் சிகரமே எம் குடும்பத் தெய்வங்களே முருகன் திருவடி பணிந்தீர்கள்
இனிய உங்கள் முகம் எங்கள் நெஞ்சை விட்டகலாது பாசமுடன் இணைந்து பண்புடனே வாழ்ந்தீர்கள் கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே கடிதில் எமைப்பிரிந்து எங்கு சென்றீர்கள் மறக்கத்தான் முடியவில்லை உங்கள் நினைவுகளை துறக்கவும் முடியாது கலங்குகின்றோம். இங்கே நாம் உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்லத்துரை வீதி,
உரும்பிராய் தெற்கு, (3919)
உரும்பிராய். (49,21,26)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.



## ஆயிரங்காலத்துப் பயிர் - திருமணம் போஸ்கோ

இந்தியாவில் இருந்து தற்போது இறக்குமதி செய்யப்பட்ட அழகிய அழைப்பிதழ்கள்

# திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

இல.610/3(252) பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக) தொ.பே: 021 222 0370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொலிஸாரின் சேவை மக்களுக்குக் கிடைக்கிறதா...?

யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் பயிற்றப்பட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைகளுக்கு அமர்த்தப்பட்ட போதும் பொதுமக்கள் எந்தவிதத்தில் பயன்பெறுகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தமிழ் மக்களின் நன்மைகருதி அரசினால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பெரியதொரு எதிர்பார்ப்பை நோக்கியதாக இருந்தது.

ஆனால் தற்போது இணைக்கப்பட்ட சேவையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களும் தம்மை சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தர்களாக இனம் காட்ட முயற்சிப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தற்போது யாழ்.மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் கொடுப்பதற்காகச் செல்லும் மக்களிடம் ''சிங்கள மொழியில்'' மட்டும் முறைப்பாடுகள் எழுதி வாங்கப்படுகின்றன. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதைக் கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளமுடியாமல் கையொப்பங்களை மட்டும் வைக்க வேண்டிய நிலையில் தான் மக்கள் உள்ளனர்.

ஆனால் முறைப்பாடுகளை மேற்கொள்ளும் போது தமிழ் பொலிஸ் உத்தியோத்தர்களும் கடமையில் இருந்தும் அதனைக் கண்டும் காணாதது போல் அரைகுறை தமிழ்மொழி கலந்த சிங்கள மொழியில் நகைப்புடன் கூடிய உரையாடல்களைத் தான் மேற்கொள்ளுகின்றார்கள்.

பொதுமக்களுக்குக் கடமை உணர்வுடன் சேவைகளைப் பயனுள்ளதாகப் பொலிஸ் உத்தியோகத் தர்கள் வழங்க வேண்டியது கட்டாயத் தேவை யாக உள்ளது.

வலி.வடக்கு பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று இதற்கு எடுத்துக்காட்டாகும்.

அந்தப் பொலிஸ் நிலையத்தில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ள போதும் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காகச் செல்லும் பெண்களிடம் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி சிறிதளவேனும் மதிப்புக் கொடுக்காமல்தான் சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தர் எனும் பாணியில் அரைகுறைத் தமிழில் கதைத்து நீண்ட நேரம் காத்திருக்க வைத்த பின்னரே முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டு தன்னை அனுப்பியதாகப் பாதிப்படைந்த பெண் ஒருவர் தெரிவித்தார்.

சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்றால் மக்கள் கட்டாயம் அடிபணிந்து போவார்கள் என்று நினைக்கிறார்கள் போலும். இவ்வாறு இருக்கும் நிலையில் இன்னும் மேலதிகமாக இரண்டாம் கட்ட நடவடிக்கையாக தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இதில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அரசின் தன்னியக்கமான செயற்பாடுகள் வளர்ச்சி அடைந்துகொண்டு சென்றாலும் அது மக்களை எந்தவிதத்தில் சென்றடைகின்றன என்பது பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமான தேவையாகும். என்ன பிரச்சினைகளாக இருந்தாலும் பொலிஸாரி னால் தான் தீர்க்க முடியும் எனும் அளவுக்கு யாழ்.மாவட்ட மக்கள் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டார்கள். ஆனால் பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்தான் அதிக மாகிக் கொண்டு இருக்கின்றன. இது தொடர்பாக மனித உரிமை ஆணைக் குழுவி னால் யாழ்.மாவட்ட சிவில் சமூகத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ''தமிழ் மொழியில்'' விசாரணைகள் மேற்கொள்ளப் படுவதுடன் பதிவு களும் அவ்வாறே எழுதப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

நாம் அதற்காக தீர்வைப் பெற்று நிச்சயம் அதனை நடைமுறைப்படுத்தவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தின் முன்னாள் பொலிஸ் பொறுப்பு அதிகாரி கடமையில் இருந்தபோது-

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் முறைப்பாடுகள் பதிவுகளாக்கப்பட்டன எனவும் ஆனால் தற்போது தனிச் சிங்கள மொழியில் மட்டும் முறைப்பாடுகள் பதியப்படுவதாகவும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த வருடம் பொலிஸ் உத்தியோகத்தர் ஆள் சேர்ப்பின்போது 300 இற்கும் மேற்பட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயிற்சிபெற்று வெளியேறி தற்போது சேவையில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவர்களில் அதிகமானோர் அலுவலகத்தில் கடமைக்கு அமர்த்தப்படாமல் கோயில் திருவிழாக்கள், வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பொது நிகழ்வுகள் என்று வெளிக்களப் பணிகளுக்கே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இருந்தும் அலுவலகப் பணிக்காகச் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களும் தம்மைத் ''தமிழர்'' என்று அடையாளம் காட்டத் தயங்குவது என்ன நியாயம்.

இவ்வாறு பொதுமக்களுக்குத் தனித்துவமான பாதுகாப்பான சேவை வழங்க வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர்களே தமது கடமைக்கு அப் பால் வழி தவறிச் செல்வது வேதனைக்குரிய விடயமாகும். இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நியாயமான தீர்வை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**சோபனா**

## 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்

அன்னை மடியில்
08 - 11 - 1946



அம்பிகை அருளடியில்
09 - 04 - 2011

ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞரும், நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை முன்னாள் உபசெயலாளருமான
'பாவாணர்', 'கலைஞானச்சுடர்'

### டானியல் தேவமதுரம்

பாங்குறு வதனமும் பவளவாய் சிரிப்புமாய்
பக்திமை பொதிந்த புலவர் பெருமகனே!
தீங்கவிகள் பாசுரங்கள் தேமதுரத் தமிழினிலே
திக்கெட்டும் துதிபாட தரணிதனைத் துறந்தீரோ?
ஏங்குகிறோம் என்றும் எண்ணங்கள் அலைமோத
எம்முயிர்த் தந்தைபோல. எமக்கு எவருளரோ?
நீங்காத சோதியாய் நின்னாத்மா நிறைவுடனே
நீள்சடையான் பாகத்தாள் நிறைகழலில் நித்தியமே!

கவியாக்கம்: தேமதுரன் தே. சுகிர் நாகேந்திரா

09.04.2011 அன்று இறைபதம் இணைந்த எமது குடும்பத் தலைவர் டானியல் தேவமதுரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.05.2011 சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.05.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்களும் கலந்துகொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'கேந்திரவதிகை', இல.7, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
(3072)
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 25.04.2011 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இசைஞானபூபதி செந்தில்வேல் கேசவமூர்த்தி



தோற்றம்
16.08.1952

மறைவு
25.04.2011

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (09.05.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் நாளை (10.05.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புக் கரம் நீட்டி வரவேற்கின்றோம்.

138/5, கோயில் வீதி, நல்லூர்.
(40)(3984)
குடும்பத்தினர்

## திறப்பு விழா அழைப்பு

இன்று (09.05.2011) திங்கட்கிழமை
நண்பகல் 12 மணியளவில்

**TELESOON**

என்னும் நிறுவனத்தின்
(கையடக்கத் தொலைபேசிகளை புதிதாகவும் அதன் உதிரிப்பாகங்களையும் அத்துடன் அனைத்து வகையான தொலைபேசி திருத்தல் வேலைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.)
மற்றும் ஓர் கிளையை அதன் சேவையை விரிவுபடுத்தும் முகமாக சுன்னாகம் சந்தியில்
யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை பேராசிரியரும்
பீடாதிபதியுமான **க.தேவராஜா**
அவர்கள் நாடாவெட்டி ஆரம்பித்து வைக்கின்றார்.

31 C.காங்கேசன்துறை வீதி.
சுன்னாகம்.
(40)(3987)
நிர்வாகத்தினர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கோட்டத்தின் முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற

### சண்முகராசா பாஸ்கரன்

அவர்களையும்,

யா/யாழ்ற்ரன் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற

### தியாகராசா சோமசேகரம்



அவர்களையும், வாழ்த்தி பாராட்டி மகிழ்வடைகின்றோம்.

(40)(3989)

கல்விக் கோட்டம், காரைநகர்.

கோட்டக் கல்விப் பணிப்பாளரும்
கோட்டப் பாடசாலை அதிபர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுப் பொருள்களும் அழகுசாதனப் பொருள்களும்
ரூபா 2950/- இருந்து
டயிரஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை, லிப்டி பிளாசா
2439422


## வலுவிழந்தோருக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 9

வலுவிழந்தோருக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய அம்பிலிம்பிக் போட்டி இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியிலுள்ள வலுவிழந்தோர் சங்கப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. விசேட தேவைக்குட்பட்டோரின் ஆற்றல்கள் மற்றும் திறமைகள் தொடர்பாகச் சமுதாயத்தின் விழிப்புணர்வு அடைவதற்கும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தேசிய மட்டத்தில் திறமைகளைக் கொண்டு வருவதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்றும் நபர்கள் தேவையான மூலப் பொருள்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் போட்டியாளரின் அனுமதிக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313-121)

## இளம் பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், மே 9

தனிமையில் சென்ற இளம் பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன், ஈவினை பிள்ளையார் ஆலய வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆள்கள் நடமாட்டம் குறைந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-86)

## இலக்கிய நூல்களுக்கு விருது வழங்கல்

நெல்லியடி, மே 9

இலங்கை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் இலக்கிய நூல்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

சிறுகதை, கவிதை, நாவல், காவியம், சிறுவர் இலக்கியம், ஆய்வு சமயம், நாடகம், பல்துறை மொழிபெயர்ப்பு ஆகிய துறைசார்ந்த நூல்களுக்கு விருது வழங்கப்படவுள்ளது.

2010இல் வெளிவந்த துறை சார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப் படவுள்ளதால் நூல்களை வெளியிட்ட நூலாசிரியர்கள் தமது நூலின் பிரதிகள் இரண்டை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சி.சிவதாசன், செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை இல.58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு தபால்மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-319)


### அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1291 சிக்பபு

விருச்சிகம்

03 11 12 46

06-05-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 239,140 | 20/- | 4,782,800/- |
| 2 இலக்கங்கள் | 22,000 | 40/- | 880,000/- |
| 1 இல. + லக்கினம் | 21,733 | 60/- | 1,303,980/- |
| 2 இல. + லக்கினம் | 1,961 | 200/- | 392,200/- |
| 3 இலக்கங்கள் | 584 | 1000/- | 584,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,252,980/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 631 | | 614,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 286,104 | | 9,866,980/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,067,450/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி

32 43 44 45

ஜக்பொட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 628 | 500/- | 314,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 631 | | 614,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 500,000/-


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்

எங்கள் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் எமது பாடசாலைக்கு கணினிகள், நிழற்பிரதி இயந்திரம், பல்லூடகத் தெறிகருவி மற்றும் றோணியோ அச்சு இயந்திரம் என்பவற்றை அன்பளிப்புச் செய்து பாடசாலையின் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவிவரும் எங்கள்



மாண்புமிகு கௌரவ அமைச்சர்
உயர்திரு.
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு)
(பொதுச் செயலாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)
அவர்களையும்

எங்கள் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் எப்போதும் பக்கபலமாக செயற்படும் எங்கள் ஊர்காவற்றுறை பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர்

**ம.ஜெயகாந்தன்**
(காந்தன் தோழர்) அவர்களையும்

பாராட்டி வாழ்த்துவதுடன் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



பாடசாலைச் சமூகம்,
தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

(...0294)(39)

### வீடு விற்பனைக்கு

உரும்பிராய் மேற்கு புதிரயர் கோயிலடி டிப்போ ரோட்டுக்கு முன்னொழுங்கையில் உள்ள வீடு வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ளவும்: தொ.பே: 021 222 3863, 0777030811

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



1st BIRTHDAY

கரவெட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி பகீரதன் வாசுகி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**ப.திலக்ஷன்**
முதலாவது பிறந்த தினத்தை இன்று (09.05.2011) திங்கட்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பப்பா, அக்கா, சித்தி, சித்தப்பா, அப்பம்மா, சித்தப்பா, மாமா, மாமி அனைவரும் பல்லாண்டு காலம் பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.

கிரான் காளி கோயிலடி,
கரவெட்டி.

அன்புடன்
அப்பா

(40-20-25)(104)


### சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2221 திகதி 07-05-2011

ஆங்கில எழுத்திற்கும் I

வெற்றி எண்கள் 22 33 42 64

போனஸ் இல: 41

ஜக்பொட் பரிசு ரூ. 10,546,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 193719 | 20/- | 3,874,380/- |
| 2 இல | 13795 | 100/- | 1,379,500/- |
| 3 இல | 292 | 1,000/- | 292,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8158 | 40/- | 326,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 593 | 1,000/- | 593,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,546,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 9234 | 100/- | 923,400/- |
| 2 இல + போனஸ் இல | 422 | 500/- | 211,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 358 | 200/- | 71,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,389,700/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 226617 | | 10,989,700/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 303174654-0-34 |
| கம்பஹா | 303156740-3-40 |
| பொலன்னறுவை | 303158410-9-22 |
| கண்டி | 303155929-0-03 |
| புத்தளம் | 303153239-7-17 |
| மாத்தறை | 303154623-9-39 |
| இரத்தினபுரி | 303157552-2-47 |
| கம்பஹா | 303157447-1-25 |
| குருநாகல் | 303152456-8-09 |
| பதுளை | 303158932-8-22 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.11,075,875/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## 3 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



லண்டனில் வசிக்கும்
மல்க்கன் - டோட்டி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**ம.மக்ரிமன்**
தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (09.05.2011) திங்கட்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, பெரியப்பா (டோகா), பெரியம்மா தங்கை தியாக்குட்டி அனைவரும் இறை அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

றட்சன் - சாந்தி
82, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபோதாபாத் மாளிகையில் கைப்பற்றப்பட்ட ஓசாமாவின் வீடியோ நாடாக்கள் வெளியீடு

வாஷிங்டன்,மே9

ஓசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட அபோதாபாத் மாளிகையில் கைப்பற்றப்பட்ட 5 வீடியோக்களை அமெரிக்கா சனிக்கிழமை வெளியிட்டது.

போர்வையை உடலில் போர்த்தி, தரையில் அமர்ந்தபடி, ஒரு கையில் ரிமோட் கன்ட்ரோலை வைத்துக்கொண்டு பின்லேடன் தொலைக்காட்சி பார்ப்பது போன்று ஒரு வீடியோவில் பதிவாகியிருக்கிறது.

தொலைக்காட்சியிலும் அவரது படமே ஓடிக் கொண்டிருக்கிறது. தாடியும் தலைமுடியும் நரைத்தது போன்று அந்த வீடியோவில் அவர் காணப்படுகிறார்.

தொலைபேசியைச் சுற்றிலும் செல்லும் வயர்கள் அருகிலுள்ள கட்டுப்பாட்டுப் பெட்டியுடன்இணைக்கப்பட்டிருக்கின்றன.

மற்றொரு வீடியோவில் அவர் நீண்ட அங்கியும் தலைப்பாகையும் அணிந்திருக்கிறார். முடிக்கு சாயம் பூசியும், தாடியை ட்ரிம் செய்தும் காணப்படுகிறார். வேறொரு வீடியோவில் அவர் பேசுவதற்கு ஒத்திகை பார்ப்பது போலத் தெரிகிறது.

அவரது வீடியோவை அவரே தயாரித்திருக்கிறார் எனக் கூறப்படுகிறது. எனினும் எந்த வீடியோவிலும் ஓடியோ இல்லை. இந்த வீடியோக்களை அமெரிக்க உளவுத்துறை அதிகாரி ஒருவர் பென்டகனில் சனிக்கிழமை வெளியிட்டார்.

அபோதாபாத் வீட்டில் ஒரு கணினி இருந்திருப்பதும் இந்த வீடியோ மூலம் தெரியவந்திருக்கிறது. தொலைக்காட்சிக்காக சாட்டிலைட் டிஷ் ஒன்றும் அந்த வளாகத்தில் இருந்ததை சிஐஏ அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

பல்வேறு தொலைபேசி எண்களைக் கொண்ட ஆவணங்களும் அங்கு கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

ஆப்கானிஸ்தான் குகையிலும் காடுகளிலும் பின்லேடன் வசித்து வருகிறார் என்றும், நாட்டு நடப்புகளும் அன்றாடச் செய்திகளும் அவருக்கு உடனடியாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் கூறப்பட்டு வந்தது.

ஆனால், போதுமான தகவல் தொடர்பு வசதியுடன் அவர் இருந்திருக்கிறார் என்பது இப்போது தெரியவந்திருக்கிறது.

# பின்லேடனைக் கொன்ற படைக்கு ஒபாமா பாராட்டு

பாகிஸ்தானில் இஸ்லாமாபாத்துக்கு அருகில் தங்கியிருந்த அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனை கடந்த திங்கட்கிழமை அவருடைய வீட்டுக்கே சென்று சுட்டுக்கொன்ற அமெரிக்க கொமாண்டோ சிப்பாய்களை ஜனாதிபதி பராக் ஒபாமா வெள்ளிக்கிழமை இரவு நடந்த நிகழ்ச்சியில் நேரில் பாராட்டினார்.

ஆப்கானிஸ்தானில் பணியாற்றிவிட்டுத் திரும்பிய அமெரிக்க சிப்பாய்களையும் பின்லேடனைக் கொன்ற சிப்பாய்களையும் அந்த நிகழ்ச்சியில் சந்தித்த ஒபாமா அமெரிக்க சிப்பாய்களின் ஈடு இணையற்ற தியாகம், வீரம், அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவை காரணமாக இது சாத்தியமாயிற்று என்றார்.

''மிகச் சிறப்பாக உங்கள் பணியைச் செய்து முடித்தீர்கள், அமெரிக்க மக்கள் சார்பாகவும் உலக சமுதாயத்தின் சார்பாகவும் உங்களுக்கு என்னுடைய வணக்கங்கள்'' என்று பின்லேடனைக் கொன்ற படையினரைப் பார்த்து ஒபாமா கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதியால் வழங்கப்படும் மிக உயரிய பாராட்டுப் பத்திரத்தையும் அப்போது அந்தச் சிப்பாய்களுக்கு வழங்கினார். அபோதாபாத்துக்கு எப்படிப் போனார்கள், பின்லேடன் தங்கியிருந்த வீட்டை எப்படி அணுகினார்கள், உள்ளே இருந்தவர்கள் தடுத்தார்களா, பின்னர் தாக்குதலை நடத்தி முடித்துவிட்டு எப்படி அங்கிருந்து வந்தார்கள் என்று அந்தப் படையினர் சார்பில் ஜனாதிபதி ஒபாமா, துணை ஜனாதிபதி ஜோ பிடேன், பாதுகாப்பு அமைச்சர் றொபர்ட் கேட்ஸ் ஆகிய பிரமுகர்களுக்கு சிரேஷ்ட அதிகாரிகள் சுருக்கமாக விவரித்தார்கள்.

# ஓசாமா பாகிஸ்தானில் இருந்தது முஷாரப்புக்கு முன்பே தெரியும்

## ஆப்கான் உளவுத்துறை முன்னாள் தலைவர் தகவல்

லண்டன், மே 09

ஓசாமா பின்லேடன் பாகிஸ்தானில்தான் பதுங்கியிருக்கிறார் என்ற விடயம் நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே அப்போதைய ஜனாதிபதி முஷாரப்புக்குத் தெரியும் என ஆப்கானிஸ்தான் உளவுத்துறையின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தீவிரவாதி ஓசாமா பின்லேடன் பாகிஸ்தானிலுள்ள அபோதாபாத் நகரிலுள்ள ஒரு மாளிகையில் பதுங்கியிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இது குறித்து ஆப்கானிஸ்தான் உளவுத்துறை முன்னாள் தலைவர் அம்ருல்லா சிலே ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளித்துள்ளார். அதில் பின்லேடனும் அவரது கூட்டாளிகளும் பாகிஸ்தானின் மலைப் பகுதியிலேயே பதுங்கி இருக்கின்றனர் என்ற விடயம் கடந்த 2005ஆம் ஆண்டிலேயே எங்களுக்குத் தெரியும். இதை முஷாரப்பும் அறிவார்.

2007ஆம் ஆண்டு அபோதாபாத்திலிருந்து மிக குறைந்த தூரத்திலுள்ள மான்ஷெரா நகரில் பின்லேடன் தங்கியிருந்தார். அங்கு 2 வீடுகளில் அல்-குவைதா தீவிரவாதிகள் பாதுகாப்பாகத் தங்கியிருந்தனர்.

அப்போது பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் பதவி வகித்து வந்தார். முஷாரப்புக்கும், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹர்சாய்க்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதை முஷாரப் ஏற்கவில்லை. பின்லேடன் பாகிஸ்தானில் இல்லை எனக் கோபத்துடன் மறுத்துவிட்டார். இதையடுத்து அந்தப் பிரச்சினைக்கு அப்போது முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

# நைஜீரியாவில் 16 பேர் சுட்டுக்கொலை

அபுஜா,மே9

நைஜீரியாவில் 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். நைஜீரியாவின் வட பகுதியில் கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கிறார்கள். இவர்கள் சயவா என்ற அமைப்பை ஏற்படுத்தி தனி நாடு கேட்டுப் போராடி வருகிறார்கள்.

இவர்களை ஆளும் முஸ்லிம் அரசு ஒடுக்கி வருகிறது. இந்த நிலையில், கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் டாப்வா பலிவா என்ற நகரில் வெள்ளிக்கிழமை இரவு மர்ம நபர்கள் புகுந்து 16 பேரைச் சுட்டுக் கொன்றார்கள்.

20 வீடுகளுக்குத் தீ வைத்துவிட்டுத் தப்பி ஓடிவிட்டார்கள். கொல்லப்பட்ட அனைவரும் சயவா கிறிஸ்தவ அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.



இந்தோனேசியாவில் ஆரம்பமாகிய 18ஆவது ஏசியான்(அசோசியேஷன் ஒவ் சவுத் ஈஸ்ட் ஏசியன் நேஷன்ஸ்) நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் சிங்கப்பூர் சிரேஷ்ட அமைச்சர் ஜெயக்குமார் (இடது), பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அகினோ(நடுவில்), தாய்லாந்து பிரதமர் அபிசிட் வெஜாஜிவா ஆகியோர் பாரம்பரிய உடையணிந்து கலந்துகொண்டனர்.

# ஜாவா தீவில் மழை மண்சரிவால் 17 பேர் பலி இருவரைக் காணவில்லை

ஜகர்த்தா,மே9

ஜாவா தீவில் பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவால் 17 பேர் பலியாயினர். இந்தோனேசியாவுக்குச் சொந்தமானது ஜாவா தீவு. மேற்கு ஜாவா மாகாணத்திலுள்ள கருட் என்ற இடத்தில் வெள்ளிக்கிழமைமாலை பெய்த பலத்த மழையால், நிலச்சரிவு ஏற்பட்டது.

நிலச்சரிவால் மணலும், கற்களும் சிகாகாசோ ஆற்றினுள் விழுந்தன. இதனால், ஏற்பட்ட வெள்ளத்திற்கு 17 பேர் பலியாயினர்; இருவரை காணவில்லை. நான்கு பேர் காயமடைந்தனர். காணாமல் போனவர்களைத் தேடும் பணி நடக்கிறது.

கடந்தாண்டில், இதுபோன்று ஏற்பட்ட பலத்த மழை, வெள்ளம் ஆகியவற்றுக்கு பாபுவாவிலுள்ள தெலுக் வோண்டமா என்ற இடத்தில் 148 பேர் பலியாயினர்.

# ஓசாமா கொல்லப்பட்டதை நம்ப 66சதவீத பாகிஸ்தானியர் மறுப்பு

## இணையதள கணிப்பீட்டில் தகவல்

இஸ்லாமாபாத், மே9

கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் அமெரிக்கப் படையினரால் சர்வதேச தீவிரவாதி ஓசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று வெளியான தகவலை நகர்ப்புறத்தைச் சேர்ந்த 66 சதவீத பாகிஸ்தானியர்கள் நம்ப மறுக்கின்றனர் என ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த யுகோவ் என்பவர் இணையதளம் மூலம் கருத்துக்கணிப்பொன்றை நடத்தினார்.

மே 4ஆம், 5ஆம் திகதிகள் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பில் ஆயிரத்து 39 பாகிஸ்தானியர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தக் கருத்துக்கணிப்பு குறித்து யுகோவ் கூறியதாவது:-

இந்தக் கருத்துக்கணிப்புக்கு விடையளித்திருப்பவர்கள் கராச்சி, இஸ்லாமாபாத், லாகூர் ஆகிய பெரு நகரங்களில் வசிக்கும் படித்த மக்கள்.

அவர்களில் 66 சதவீதம் பேர், அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டவர் பின்லேடன்தான் என்பதை நம்ப மறுக்கின்றனர். படித்தவர்கள் மத்தியிலேயே இந்தச் சூழ்நிலை இருக்கும்போது படிக்காத கிராமத்தினரைப் பற்றி கேட்கவே வேண்டாம்.

பின்லேடன் ஓர் உண்மையான முஸ்லிம் தலைவரில்லை என்று கருத்துக் கூறியவர்களில் 48 சதவீதமானோர் தெரிவித்திருந்தனர். 35 பேர் அவர் ஒரு கொலைகாரர் என்று குறிப்பிட்டிருந்தனர். எனினும், 45 சதவீதமானோர் இந்தக் கருத்தை மறுத்திருந்தனர்.

பாகிஸ்தான் மீது பின்லேடன் போர் பிரகடனம் செய்திருந்தார் என 35 சதவீதமானோரும், அவ்வாறு அவர் செய்யவில்லை என 45 சதவீதமானோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. க்கும் அல்-குவைதா அமைப்புக்கும் தொடர்புள்ளது என்பதை நம்பவில்லை என்று அரைவாசிக்கும் மேற்பட்டோர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதலை பின்லேடன்தான் நடத்தினார் என்பதை 25 சதவீதமானோர் மட்டுமே ஒத்துக்கொண்டனர். 75 சதவீதமானோர் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

அமெரிக்கா முஸ்லிம்களுக்கு எதிராக போர் தொடுக்கிறது என்றும், முஸ்லிம் மதத்தை அது மதிக்கவில்லை என்றும் 74 சதவீதமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானுக்குள் அனுமதியின்றி அத்துமீறிச் சென்று பின்லேடனை வீழ்த்திய அமெரிக்காவின் செயலை 75 சதவீதமானோர் ஆதரிக்கவில்லை.

இந்தக் கருத்துக்கணிப்பில் பதிலளித்த பாகிஸ்தானியர்களில் 61 சதவீதமானோர் தலிபான்களை தாங்கள் ஆதரிக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

எனினும், பெரும்பாலானவர்கள் தலிபான்கள் பாகிஸ்தானுக்குள் இருந்து செயற்படுவதை ஆதரிக்கவில்லை.

பின்லேடன் கொல்லப்பட்டவுடன் அதை அமெரிக்கா மகிழ்ச்சியுடன் கொண்டாடியதை 50 சதவீதமானோர் எதிர்க்கின்றனர்.


அமெரிக்காவின் இந்தச் செயல் அந்த நாட்டின் மீது மேலும் வெறுப்பை அதிகரித்து அந்த நாட்டுக்கெதிரான வன்முறையில் இன்னும் அதிகமாக ஈடுபடுவதற்கு தூண்டிவிட்டுவிடும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
09 மே 2011 திங்கட்கிழமை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





## கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா

## திரு. முருகேசு சந்திரகுமார்

எமது பாடசாலையை 1AB வகைப் பாடசாலையாகத் தரம் உயர்த்துவதற்கான
நடவடிக்கையை மேற்கொண்ட
பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ திரு. K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும்
எமது பாடசாலையின் பழைய மாணவருமான

**கௌரவ திரு. முருகேசு சந்திரகுமார்**

அவர்களையும்
வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலர் ஆகியோரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.
மேலும் பாடசாலையின் விளையாட்டு மைதானத்துக்கான காணிக்கொள்வனவுக்காக ரூபா 5 லட்சத்தினை மகேஸ்வரி நிதியத்தின் ஊடாகவும் கீழைத்தேய வாத்திய இசைக்கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1 லட்சத்தினை நிதி ஒதுக்கீடு செய்வதாக உறுதியளித்தமைக்காகவும் கௌரவ அமைச்சர் **திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.முருகேசு சந்திரகுமார்** அவர்க்ளையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ மீசாலை வீரசிங்கம்**
**மகா வித்தியாலயம்**

(சி/578293)(28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழீழம்தான் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும்

இலங்கையில் துயரத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தமிழ் ஈழம் தான் என்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. ஆரம்பிக்கப்பட்டு 18 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் ஆரம்ப விழா, சென்னையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகமான தாயகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்



டிக்க வேண்டும் என்றார்.

மேலும், தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாபெரும் அரசியல் சக்தியாக உருவெடுப்போம். எந்தப் பலனையும் எதிர்பாராமல் மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ம.தி.மு.க. தொடர்ந்து பணியாற்றி வருகிறது. தமிழகம் உட்பட நாடு முழுவதும் ஊழல், லஞ்சம் போன்றவை பெருகிவிட்டன. இவற்றிலிருந்து தமிழகத்தை மீட்டெடுக்க வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு.

எத்தனை எதிர்ப்புகளை எதிர்கொண்டாலும் ம.தி.மு.க. துவண்டுவிடாது. எங்களின் தன்னலமற்ற பணி தொடரும். தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாபெரும் அரசியல் சக்தியாக ம.தி.மு.க. உருவெடுக்கும் என்றார் வைகோ.

இந்த நிகழ்வில் ம.தி.மு.க. பொருளாளர் ரா.மாசிலாமணி, துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, சட்டத்துறைச் செயலாளர் ஜி.தேவதாஸ் உட்படக் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மகளிர் அணியினர், அதிகமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

(வ)

# பாபர் மசூதி வழக்கு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணை

டில்லி,மே.9

பாபர் மசூதி வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து பல்வேறு முஸ்லிம் மற்றும் இந்து அமைப்புகள் தாக்கல் செய்த மனுக்களின் மீது உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணை நடைபெற உள்ளது.

இதேவேளை அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தை 3 பகுதிகளாகப் பிரித்து முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் நிர்மோஹி அகாராக்களுக்கு வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் முன்பு தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மத அமைப்புகள் உச்சநீதிமன்றத்தை அணுகியுள்ளன. நிர்மோஹி அகாரா, அகில பாரத இந்து மகாசபா, ஜமைத் உலமா- ஐ-ஹிந்த் மற்றும் சன்னி மத்திய வக்ஃப் வாரியம் ஆகியவை தாக்கல் செய்த மனுக்களை நீதிபதிகள் அப்டாப் ஆலம் மற்றும் ஆர்.எம்.லோதா ஆகியோர் கொண்ட குழு விசாரணை செய்யவுள்ளது.

பகவான் ராம் விராஜ்மன் சார்பிலும் ஒரு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படாமல், நம்பிக்கையின் அடிப்படையில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது அதை ரத்துசெய்ய வேண்டும் என வக்ஃப் வாரியமும், ஜமைத் உலமா-ஐ-ஹிந்த் அமைப்பும் தங்கள் மனுக்களில் குறிப்பிட்டுள்ளன.

ராமர் பிறந்த இடத்தில் அந்தக் கட்டடம் இருந்தது என தவறாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாக்.அமைச்சரின் வீடு அருகே குண்டுவெடிப்பு

இஸ்லாமாபாத், மே.9

வடமேற்கு பாகிஸ்தானில் பெஷாவரின் புறநகரில் மாகாண அமைச்சர் ஒருவரின் வீட்டுக்கு வெளியே குண்டு வெடித்ததில் பொலிஸார் உட்பட 4 பேர் காயமடைந்தனர்.


கைபர் பக்துன்கவா வேளாண் அமைச்சர் அர்பாப் அயூப் ஜனின் வீட்டுக்கு வெளியே அந்தக் குண்டு வெடித்தது. அவர் ஆளும் அவாமி தேசிய கட்சியைச் சேர்ந்தவர்.

குண்டுவெடிப்பு நிகழ்ந்தபோது வீட்டில் அமைச்சர் இருந்தாரா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

அமைச்சரின் இல்லத்துக்கு வெளியே சோதனைச் சாவடி ஒன்றில் காவல் பணியில் இருந்த பொலிஸ் காவலர்கள் உள்ளிட்ட 4 பேர் இந்த தாக்குதலில் காயமடைந்தனர்.

ரிமோட் மூலம் அந்த வெடிகுண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## என்றும் நினைவில் நிற்பவர்...



ரவீந்திரநாத் தாகூரின், 150வது பிறந்த நாளை முன்னிட்டு டில்லியில் நடைபெற்ற விழாவில், பிரதமர் மன்மோகன், காங்.,தலைவர் சோனியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தாகூர் பெயரில் சர்வதேச விருது பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு

நோபல் பரிசு பெற்ற கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் பெயரில், சர்வதேச அளவிலான விருது வழங்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது என்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

தேசிய கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் 150 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் பிரதமர் டில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

உலகளாவிய ரீதியில் சகோதரத்துவம் தழைக்க பாடுபடுபவர்களுக்கு இந்த சர்வதேச விருது வழங்கப்பட உள்ளது. முதலாவது விருது, 150ஆம் ஆண்டு விழா நிகழ்வின் இறுதியில் வழங்கப்படும்.

விருதுக்குரியவர்களை தேர்ந்தெடுப்பதற்காக, எனது தலைமையில் தேர்வுக்குழு அமைக்கப்படும். பன்முகத்திறமை வாய்ந்தவர் கவிஞர் தாகூர். இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, தாகூரின் படைப்புக்களை அனைத்துத் தரப்பு மக்களிடமும் பரவலாகக் கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவரது படைப்புக்கள் மத்திய கலாசாரதுறை சார்பில் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும். அவரது ஓவியங்களும் டிஜிட்டல் மயமாக்கப்படும் என்று பிரமதர் கூறினார்.

# ஸ்பெக்ரம் ஊழல்: விசாரணைக்காக அதிகாரிகள் மொரிஷியஸ் பயணம்

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேட்டில் பெற்ற பணம் மொரிஷியஸில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்துவதற்காக அதிகாரிகள் அடுத்த வாரம் மொரீஷியஸ் செல்ல உள்ளனர்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு குறித்த வழக்கு விசாரணை மேல் நீதிமன்றம் மற்றும் டில்லி, பாட்டியாலா சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றங்களில் நடைபெற்று வருகின்றன.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு மூலம் பெற்ற பணம் மொரிஷியஸ் உள்ளிட்ட நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும், முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து மத்திய அமுலாக்கப் பிரிவு அதிகாரிகளும், சி.பி.ஐ அதிகாரிகளும் இது குறித்து விசாரிப்பதற்காக எதிர்வரும் 15 அல்லது 16ஆம் திகதியில் மொரிஷியஸ் செல்லவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மொரிஷியசில் உள்ள சில முக்கிய நிறுவனங்களிடமும் இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளனர்.

# காஷ்மீருக்குள் ஊடுருவுவதற்கு தயார் நிலையில் தீவிரவாதிகள்

ஜம்மு காஷ்மீருக்குள் ஊடுருவுவதற்காக நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் எல்லைப் பகுதியில் காத்திருப்ப தாக உள்துறை அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏறத்தாழ 700 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள், எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில், 100 இடங்களில் பதுங்கியிருப்பதாகவும், ஊடுருவுவதற்கு தக்க சமயத்துக்காக காத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகள் அனைவரும் பாகிஸ்தானில் பல்வேறு வகையான தீவிரவாத பயிற்சிகளைப் பெற்று இந்தியாவில் புகுந்து நாச வேலைகளில் ஈடுபடுவதற்காக காத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்குமாறு பலமுறை பாகிஸ்தானிடம் எமது அதிகாரிகள் கூறி வந்தபோதிலும் அதை பாகிஸ்தான் ஒருபோதும் பொருட்படுத்துவதில்லை. மேலும் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கு பாகிஸ்தான் ராணுவமே உதவி வருகிறது என்பது தான் வேதனையான விடயம்.

தற்போது பின்லேடன் விவகாரத்தால் பாகிஸ்தான் ராணுவம், அரசு மற்றும் ஐ.எஸ்.ஐ. ஆகியவை மீது அந்த நாட்டு மக்கள் கடுமையான கோபத்துடன் உள்ளனர். அவர்களை திசை திருப்ப இந்தியாவில் தீவிரவாதிகள் மூலம் நாச வேலைகளை பாகிஸ்தான் தூண்டி விடலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இந்த நிலையில் நூற்றுக் கணக்கான தீவிரவாதிகள் ஊடுருவக் காத்துள்ளதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதியில், உள்துறை அமைச்சகம் அதிகரிக்கச் செய்து விட்டுள்ளது.

(வ)

# ராஜபக்ஷவை விசாரணை செய்யக் கோரி புதிய நீதிக் கட்சி ஆர்ப்பாட்டம்

## 300 பேர் கைது



பெரம்பூர்,மே.9

இலங்கையில்இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதியை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யுமாறுகோரி புதிய நீதிக்கட்சி சார்பில் நேற்று முன்தினம் ஆழ்வார்பேட்டை இலங்கை தூதரகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் பொருளாளர் ஏ.சி.எஸ். ரவிக்குமார், பொதுச் செயலாளர் வெள்ளைச்சாமி ஆகியோர் தலைமை வகித்தனர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 பெண்கள் உட்பட 300 பேர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது ராஜபக்ஷவைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதையடுத்து பொலிஸார் 300 பேரையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை பஸ்களில் ஏற்றி அருகில் உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஆர்.டி.சேதுராமன், மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.ஏ.ராஜாராம், மனோகரமூர்த்தி, நடராஜன், லோகநாதன், ராஜமாணிக்கம், நவமணி, சி.பி.ராதாகிருஷ்ணன், ஜானகிராமன், ஏ.வி.மணி, துரைராஜ், பிரகாஷ் முதலியார் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
09 மே 2011 திங்கட்கிழமை

# ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

பகுதி - 09

வீதிகளின் பக்கத்தில் அழிந்ததங்குமிடங்கள், சிதறிக்கிடந்த பொருள்கள் மற்றும் இறந்த மிருகங்களுக்கிடையே இறந்த அல்லது படுகாயத்துக்குள்ளானவர்கள் விழுந்து காணப்பட்டனர். நூற்றுக்கணக்கான சேதமடைந்த வாகனங்களும் வீதியில் கிடந்ததோடு, வல்லிபுரம் ஆஸ்பத்திரியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் வண்டிகள் பாரிய சேதத்துக்குள்ளாகியிருந்தன.

89. ஏ 35 வீதியில் யுத்த சூன்ய வலயத்துக்கு அப்பால் அமைந்திருந்த மஞ்சள் பாலத்தைக் கடந்த பிரதேசம் இங்கிருந்த நிலைமையைவிட மிக மாற்றமானதாக இருந்ததோடு அங்கு சிறிய அளவிலான செல்தாக்குதலே நடைபெற்றிருந்தது. முரண்பாடாக, அரசின் பிரகடனப்படுத்தப்பட்ட சூன்ய வலயத்துக்கு வெளியே அமைந்திருந்த புதுக்குடியிருப்பு அங்கு அதிக எண்ணிகையிலான தமிமீழ விடுதலைப்புலியினர் மற்றும் குறைவாக பொதுமக்கள் இருந்தபோதிலும், செல்தாக்குதலுக்கு உள்ளாகியதாகத் தெரியவில்லை.

### 4. புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி மீது இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்

90. இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதி அளவில் புதுக்குடியிருப்பை தாம் கைப்பற்றுவோம் என 55 ஆவது மற்றும் 58 ஆவது படைப்பிரிவுகள் வெளியிட்டிருந்த முனைப்பின் ஓர் அங்கமாக இந்தப் பிரதேசத்தில் யுத்தம் உக்கிரமடைந்தது. வன்னியில் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி மாத்திரமே எஞ்சியிருந்த நிரந்தர ஆஸ்பத்திரி என்பதோடு அரசும் தமிழீழ விடுதலைப் புலியும் அது நடுநிலையானது என்பதை ஏற்றுக் கொண்டிருந்தனர். ஐந்து வைத்தியர்களை உள்ளிட்ட மருத்துவப் பணியாள்தொகுதியினர் அதிக சிரமத்தை எதிர்நோக்கியதோடு மட்டுப்பட்ட அளவிலேயே மருந்து வகைகளும் இருந்தன. முதலாவது யுத்த சூன்ய வலயம் மீதான தாக்குதல் யுத்தத்தின் ஒரு திருப்பு முனையாக இருந்ததோடு, பொதுமக்களிடையே சேதம் அதிகரித்த வண்ணம் இருந்தது. யுத்த சூன்யப் பிரதேசத்தில் காயமடைந்த நூற்றுக்காணக்கான பொதுமக்கள் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் இருந்தனர். தினம்தோறும் 100க்கும் அதிகமான புதிய நோயாளிகள் அவர்களுள் அனேகர் யுத்த சூன்ய வலயத்தில் இருந்து வந்து கொண்டிருந்தனர். பலர் படுகாயம் அல்லது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய ஷெல் வெடிக்காயங்களுக்குள்ளாகியிருந்தனர். அதிகமாக கைக்குழந்தைகள், சிறுபிள்ளைகள் மற்றும் முதியோரைக்கொண்ட காயமடைந்தோர் எங்கெல்லாம் இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் நிறைந்து காணப்பட்ட னர்.

(34)

91. 2009 ஜனவரி 29 ஆம் திகதி விடுதலைப்புலிகளினால் வெளியேற அனுமதிக்கப்படாத தேசிய ஊழியர்கள் இன்றி எஞ்சியிருந்த இரண்டு ஐ.நா. சர்வதேச ஊழியர்களும் வவுனியாவுக்குப் பயணமாயினர். ஐ.சி.ஆர்.சி. பிறிதொரு வாகனத் தொடரை அனுப்பியதோடு அது 200 காயமடைந்தோரை அங்கிருந்து அகற்றியது. இதனையடுத்து உடனே, ஜனவரி 29 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கும் இடைப்பட்ட வாரத்தில் தினமும் பல் குழல் எறிகணைகள் மற்றும் ஏனைய பீரங்கிக் குண்டுகள் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியைத் தாக்கியதோடு, அவற்றுள் 9 சரியாக ஆஸ்பத்திரியில் விழுந்தன. ஏற்கனவே காயமடைந்திருந்து ஆஸ்பத்திரியில் இருந்தவர்கள் உள்ளிட்ட காயமடைந்தவர்கள் மற்றும் பணியாள்கள் பலரும் அங்கு கொல்லப்பட்டனர். சத்திர சிகிச்சைக்கூடமும் தாக்கப்பட்டது.

2009 பெப்ரவரி 4 ஆம் திகதி ஆஸ்பத்திரி தாக்கப்படும் போது அங்கு ஐ.சி.ஆர்.சி. இன் சர்வதேச உறுப்பினர்கள் இருவரும் இருந்தனர். ஷெல்கள் இலங்கை இராணுவ நிலைகளின் திசையில் இருந்து வந்துகொண்டிருந்தன.

92. புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியின் ஜி.பி. எஸ். நிர்ணய எல்லைகள் இலங்கை இராணுவத்துக்கு நன்கு தெரிந்திருந்ததோடு, ஆளில்லாத விமானங்களுக்குத் தெளிவாகத் தெரியும் விதத்தில் ஆஸ்பத்திரி மீது சின்னங்கள் இடப்பட்டிருந்தன. 2009 பெப்ரவரி 01 ஆம் திகதி, 'காயமடைந்தோர், நோயாளிகள், மருத்துவப் பணியாள்தொகுதியினர் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டனவாகும். எச்சந்தர்ப்பத்திலும் அவற்றின் மீதுநேரடித் தாக்குதல் மேற்கொள்ளப்படக்கூடாது'. என்பதை வலியுறுத்திப் பகிரங்க அறிக்கையொன்றை ஐ.சி.ஆர்.சி.வெளியிட்டது.

93. இதற்குப் பதிலளித்த மனித வள மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, ஐ.சி.ஆர்.சி. 'வேண்டுமென்றே தெரியாததுபோல் அல்லது அப்பாவியாக' இருக்கிறது எனக்குற்றம் சாட்டியது. ஆரம்பத்தில் ஆஸ்பத்திரி மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அரசு நிராகரித்தது, ஆயினும் 2009 பெப்ரவரி 02 ஆம் திகதி, ஸ்கைநியூஸ் உடனான நேர்காணலின் போது பாதுகாப்புச் செயலாளர் பின்வரும் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவர்கள் (அறிக்கைகள்) புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியை பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்றால், ஆஸ்பத்திரியோ வேறு எதுவுமோ அங்கு இருக்கமுடியாது. அதனை நாம் வாபஸ் பெற்றுள்ளோம். எல்லா நோயாளிகளையும் நாம் வவுனியாவுக்கு வரவழைத்துக்கொண்டோம்... எனவே யுத்த சூன்ய வலயத்துக்கு அப்பால் ஒன்றுமே இருக்கமுடியாது. எந்தவொரு ஆஸ்பத்திரியும் அங்கு செயற்பட முடியாது. ஒன்றுமே செயற்படக்கூடாது. இதற்காகத்தான் நாம் தெளிவாகவே இந்த யுத்த சூன்ய வலயத்தை வழங்கினோம். பயங்கரவாதிகளை நசுக்கும் போது ஏற்றதல்ல என எதுவுமேகிடையாது.

(35)

94. கிளிநொச்சி வீழ்ந்த பின், இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான தமிழீழ விடுதலைப்புலிகளின் யுத்தத்தில் புதுக்குடியிருப்பு கேந்திர வலுப் பீடமாக இருந்தது. அதன் காரணமாக புதுக்குடியிருப்பு தமிழீழவிடுதலைப் புலியினர் கணிசமானோர் இருந்ததோடு, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் காயமடைந்து ஆயுதம் தாங்காத நிலையில் இருந்த உறுப்பினர்களுக்குப் பிரத்தியேகப் பிரிவொன்றை அது பேணி வந்தது. யுத்த முனை அருகில் இருந்ததோடு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் யுத்தம் தீவிரமடைந்தபோது, மேலும் காயமடைந்த தமிழீழ விடுதலைப்புலியினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர். ஆஸ்பத்திரிக்குச் சமீபத்தில் இருந்து நடமாடும் பீரங்கிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் பிரயோகித்த போதிலும், ஆஸ்பத்திரியில் இருந்தோர் அகற்றப்படும் வரை ஆஸ்பத்திரியை அது இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தவில்லை. எனினும், பிரதேசத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற அதன் அவாவினால், இலங்கை இராணுவம் தொடர்ந்தும் ஆஸ்பத்திரியையும் அதன் சுற்றுப்புறங்களையும் நோக்கிச் ஷெல் வெடிகளைச் செலுத்தியது. தொடரும் செல் தாக்குதல் காரணமாக புதுக் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் இருந்த கிட்டத்தட்ட 300 நோயாளிகளை 6 முதல் 8 கிலோ மீற்றர் தூரத்தில் நந்திக்கடல் குடாவுக்கு அடுத்திருந்த கடல் ஓரப் பகுதியான புதுமாத்தளனுக்கு அகற்றுவதற்குப் பிரதேச சுகாதார சேவைகள் அத்தியட்சகர்கள், ஐ.நா. உதவி அரச அதிபர் மற்றும் ஐ.சி.ஆர்.சி.யினர் தீர்மானித்தனர். தமிழீழ விடுதலைப்புலிகள் நிர்வகித்த தனியார் ஆஸ்பத்திரியான பொன்னம்பலம் ஆஸ்பத்திரி 2009 பெப்ரவரி 6 ஆம் திகதி ஷெல்லடித் தாக்குதலுக்கு உள்ளாகி அதன் ஒரு பகுதி உடைந்து விழுந்தது.

95. தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின்போது அவர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடியதால், புதுக்குடியிருப்பில் இலங்கை இராணுவம் குறிப்பிடத்தக்க பின்னடைவுகளையும் இழப்புக்களையும் எதிர்கொண்டது. 2009 ஏப்ரல் 5 ஆம் திகதி வரை 58 ஆவது மற்றும் 53 ஆவது படைப்பிரிவுகள் புதுக்குடியிருப்பைக் கைப்பற்றவில்லை. கடற்புலிகளின் முக்கிய தளமான சாலை பெப்ரவரி 5 ஆம் திகதி கைப்பற்றப்பட்டது.

96. அச்சந்தர்ப்பத்தில், ஆனந்தபுரம், இரணைப்பாலை மற்றும் தேவிபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்று வந்த உக்கிரமான சண்டையில் இருந்து தப்புவதற்காக அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் எஞ்சியிருந்த பாதுகாப்பான ஒரே இடமான கடற்கரையை நோக்கி விரைந்தனர். 2009 பெப்ரவரி 12 ஆம் திகதி அரசு அம்பலவன்பொக்கணை, கரயான் முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், வலைஞர்மடம் மற்றும் வெள்ளைமுள்ளிவாய்க்கால் கிராமங்களை உள்ளிட்ட இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தை (பொது மக்கள் பாதுகாப்பு வலயம் எனவும் குறிப்பிட்ட) பிரகடனப்படுத்தியது.

(36)

97. மேலும் மேலும், தம் கடைசி நிலைப்பாதுகாப்பை மேற்கொண்டு இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தினுள், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைத்துவம் சிக்கலான பதுங்குகுழிகள் மற்றும் அரண்கள் அடங்கிய வலைப்பின்னலைக் கொண்டிருந்த முள்ளிவாய்க்கால் பிரதேச கரையோரப் பகுதிக்கு தமிழீழ விடுதலைப் புலிப்படையினர் புகுந்தனர். இங்குதான் அவர்கள் தம் இறுதி நிலையை அமைத்துக்கொண்டனர். இப்போது விடுதலைப்புகள் அமைப்பு அதன் நடமாடும் சக்தியை இழந்து வலயம் முழுவதிலும் பாதுகாப்பான மண் அணைகளை அமைத்தது. இடம்பெயர்ந்தவர்களுக்கிடையே மோட்டார் மற்றும் ஏனைய பீரங்கிகளை அது வைத்திருந்ததால், அதிகமான சந்தர்ப்பங்களில் அரசின் எதிர்த்தாக்குதலுக்கு அவை வழிவகுத்ததோடு, அதனால் பொதுமக்களுக்குச் சேதமும் ஏற்பட்டது. இந்தக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் எந்நேரமும் சீருடை அணிந்திருக்கவில்லை. யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி யுத்த முனைகளின் இழப்பைத் தொடர்ந்து. தமிழீழ விடுதலைப் புலிகளின் விநியோக மற்றும் போக்குவரத்து அமைப்புக்கள் செயலிழந்ததோடு, முல்லைத்தீவு மாகாணத்துக்குத் தம் பொருள்களையும் பேணல் அமைப்புக்களையும் அகற்றுவது முடியாத காரியமாகிவிட்டது இதன் விளை வாக, எரிபொருள், வெடி பொருள்கள் மற்றும் உணவுப்பொருள்கள் ஆகிய வற்றுக்கான பிரவேசத்தை தமிழீழ விடுதலைப்புலி இழந்தது. தமிழீழ விடுலைப்புலிக்ளிடம் சில ஆயுதக் குவி யல்கள் இருந்த போதிலும், சில சிறிய பல்குழல் செலுத்திகளை உள்ளிட்ட கனரக ஆயுதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவர்கள் வசம் இருந்தன. இலங்கை வான்படை முழுமையாக ஆதிக்கத்தைக் கொண்டிருந்த தோடு, ஆகாயத்தில் இருந்து நோட்ட மிடுவதைத் தடுப்பதற்காக தமது அமை விடங்களை தமிழீழ விடு தலைப் புலிகள் மறைக்க வேண்டியிருந்தது.

(37)

98. 'பயனற்ற தமது இராணுவ நிலையிலும் தமிழீழ விடுதலைப்புலி சரணடைய மறுத்ததோடு, பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறுவதைத் தொடர்ந்து தடுத்து மனிதக் கேடயங்களாக அவர்கள் அங்கிருப்பதை உறுதி செய்து கொண்டனர். இராணுவக் கட்டுமானங்களையும் அரண்களையும் கட்டுவதற்காக அல்லது ஏனைய கட்டாயக்கடமைக்காக அவர்களைக் கட்டாயப்படுத்தினர். அருகிவரும் தம் அணிகளைத் தக்க வைப்பதற் காக சிறுவர்கள் உள்ளிட்ட கட்டாய அணிசேர்க்கும் பழக் கத்தை அவர்கள் மேலும் தீவிரமாகக் கடைப்பிடித்தனர். தமிழீழ விடுதலைப் புலியின் ஆள்சேர்ப்பு அதிகரித்தபோது, பெற்றோர் அதனை எதிர்த்து தம் குழந்தைகளை அணிசேர்ப்பதைத் தடுப்பதற்காக அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யுமளவுக்குத் துணிந்தனர். இரகசியமான இடங்களில் அவர்கள் குழந்தைகளை மறைத்து வைத்தனர் அல்லது அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் அணிசேர்ப்பதைத் தடுக்க முயற்சிக்கும்போது தமிழீழ விடுதலைப்புலிஉறுப்பினர்கள் சொந்தங்களையோ அல்லது பெற்றோரையோ சில சமயம் மூர்க்கத்தனமாகத் தாக்கவும் முனைந்தனர். தமிழீழ விடுதலைப் புலியின் தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதற்கான பலவற்றை உள்ளிட்ட இவ்வாறன சகல அணுகுமுறைகளும் பொதுமக்களின் அவஸ்தை பற்றிய அலட்சியப் போக்கையும் அவர்களைப் பலியிடுவதற்கான விருப்பத்தையும் சித்திரித்துக் காட்டுவதாக இருந்தது.

99.

ஆயினும், இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தில் நிலைமை மோசமடையத் தொடங்கியதும், அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் தமிழீழ விடுதலைப் புலியின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து தப்பியோட முனைந்தனர். அநேகமாக நடுநிசியில் மண்மேடுகளைக் கொண்ட ஏரிகளில் இறங்கிச் செல்லவும் அல்லது கண்ணிவெடிகள் நிறைந்த பிரதேசங்களினூடாகச் செல்லவும் மக்கள் ஆரம்பித்தனர். மிகுதமான சந்தர்ப்பங்களில் மக்கள் கண்ணிவெடிகள் மீது அடிவைத்து அவை வெடித்ததும் தம் உறுப்புக்களை இழந்தனர் அல்லது உயிரிழந்தனர். பெப்ரவரி மாத ஆரம்பத்தில் இருந்து, தப்பியோட முயற்சிப்பவர்களைச் சுடும் கொள்கையொன்றை தமிழீழவிடுதலைப்புலி பின்பற்றியதோடு, தப்பியோடும் பொதுமக்களைக் கண்டு பிடிப்பதற்காக உறுப்பினர்கள் காத்திருந்தனர்.

### 6. இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தில் இலங்கை இராணுவத்தின் ஷெல்லடித் தாக்குதல்

100, 2009 பெப்ரவரி 6 ஆம் திகதி தொடக்கம், சகல திசைகளில் இருந்தும், தரை, ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தை இலங்கை இராணுவம் தொடர்ச்சியாகச் ஷெல்லடித் தாக்குதலுக்கு உள்ளாக்கியது. அப்பிரதேசத்தில் சுமார் 300,000 க்கும் 330,000 க்கும் இடைப்பட்ட எண்ணிக் கையிலான பொதுமக்கள் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டது. இலங்கை இராணுவம் அதன் தாக்குதல் நடவடிக்கைக்காக வான் தாக்குதல், நீண்ட தூரம் தாக்கக் கூடிய பீரங்கிகள், ஹோவிட்டசர்ஸ், பல்குழல் எறிகணைச் செலுத்தி கள் மற்றும் சிறிய ஆயுதங்களைப் பாவித்தது.

(36)

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும் கிரிக்கெட் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்


யாழ்ப்பாணம், மே 9

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் காலை யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் யாழ்.பல்கலைக் கழகம், கொழும்பு பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் கொடிகள் ஏற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஆரம்ப நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி எஸ்.சிறிசற்குணராசாவுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினரால் போட்டி சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க மற்றும் பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்கள், விரிவுரையாளர்கள், கிரிக்கெட் ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



முதலாவது ஆட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக அணியை எதிர்த்து பேராதனைப் பல்கலைக்கழக அணி மோதியது. (த-23-86)

# கனகபுரம் ம.வி. சம்பியன்

யாழ்ப்பாணம், மே 9

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் கனகபுரம் மகா வித்தியாலயம் சம்பியனானது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கும், கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய அணிகளுக்கும் இடையில் இறுதியாட்டம் இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணி 10 பந்துப் பரிமாற்ற நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.

121 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியெனத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 8.3 பந்துப் பரிமாற்றம் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய அணி 9 விக்கெட்டுக்களால் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை வெற்றிகொண்டு சம்பியனானது. (த-23)

# யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவரிடையே உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17,19 வயதுப் பிரிவின் கீழ் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை 19 வயதுப் பிரிவின்கீழ் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி புதன், வியாழன் ஆகிய நாள்களில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-23)

# 19 வயதுப் பிரிவினருக்கு எல்லே போட்டி

யாழ்ப்பாணம், மே 9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவின்கீழ் ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லேப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இதன் விவரம் வருமாறு:

**பெண்கள்**- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

**ஆண்கள்**- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி.(ம-23)



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவின் கீழ் ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இதில் பெண்களுக்கான இரட்டையர் பிரிவு போட்டியில் மோதும் வீராங்கனைகள். (த-23)





நல்லூர் சி.சி.த.க.பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிராம அலுவலர் இ.சந்திரகுமார் வெற்றிபெற்ற இல்லத்துக்கான வெற்றிக் கேடயம் வழங்குகிறார். (7)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, மே 9

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய விளையாட்டு மைதானங்களில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

- கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.
- மட்டுவில் சந்திரபுரம் வித்தியாலயம் எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.
- திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
- சாவகச்சேரி டிபேர்க் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
- கரவெட்டி இமையாணன் மகாவித்தியாலயம் எதிர் நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.
- யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் நாவற்குழி மகா வித்தியாலயம்.
- வேலணை மத்திய கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
- இரண்டாம் சுற்றில் இருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதவுள்ளது. (த-86)

# வடமராட்சி மெதடிஸ் - சுழிபுரம் விக்ரோறியா அணிகள் எல்லே இறுதியாட்டத்துக்குத் தகுதி

வலி.வடக்கு, மே 9

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லேப் போட்டியின் இறுதியாட்டத்தில் வடமராட்சி மெத்டிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதவுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களின் பெறுபேறுகள் வருமாறு:

35 பந்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய இந்தப் போட்டியில் முதல் அரையிறுதி ஆட்டத்தில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

2 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாட ஆரம்பித்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தது. ஆட்டம் நிறைவில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை 1:0 என்ற ஓட்டங்களால் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வென்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் வடமராட்சி மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய விக்ரோறியாக் கல்லூரியின் ஜெயரஞ்சினி, ரஜிதா ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களைப் பெற்றனர்.

3 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை வீராங்கனைகள் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

ஆட்ட நிறைவில் விக்ரோறியாக் கல்லூரி 2:0 என்ற ஓட்டங்களால் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை வென்றது. (த-86)

# மென்பந்தாட்டப் போட்டி வெற்றியாளர்கள்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவின்கீழ் ஆண், பெண் இருபாலாருக்குமான மென்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**ஆண்கள்**- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி.

**பெண்கள்**- சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Come, let's speak fluent English

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

**Spoken English**
ஆங்கில பயிற்சி மையம்

**veta**®
Experts in English Training

Foundation, First Step மற்றும் Next Step க்கான

**புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

veta Foundation ENGLISH — ஆங்கிலத்தை ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புபவர்களுக்கு

veta Fluent English First Step — இலக்கணத்தை பாடரீதியாக கற்பதைவிட செயல்முறை ரீதியில் கவனம் செலுத்தி வெற்றியளித்த செயன்முறை.

veta Fluent English Next Step — பலவேறு சூழ்நிலைகளில் தன்னம்பிக்கையுடன் பேச மற்றும் செயற்பட 100 % ஒலி, ஒளி காட்சிகளுடன் கூடிய பாடத்திட்டம்.

இலகுவான முறையில் ஆங்கிலம் பயிலுங்கள்.

**UK** Student Visa, Settlement Visa மூலம் UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று. ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

**DMI COMPUTER EDUCATION**

| | | |
|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலையம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243 |

## பொலிஸாரின் நடமாடும் சேவை

பருத்தித்துறை பொலிஸாரினால் நடத்தப்படும் நடமாடும் சேவை எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பொதுமக்களின் வசதிக்காக நடத்தப்படும் இந்தச் சேவையில் தேசிய அடையாள அட்டை பெறுதல், வைத்திய சேவை, இரத்த தானம் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இடம்பெறும்.

(ஐ-236)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30.06.1936

மறைவு
23.04.2007

அமரர்
**வல்லிபுரம் சிவபாக்கியநாதன்**
(ஓய்வு பெற்ற பிரதம மருந்தாளர்)
(திதி- சித்திரை மாத பூர்வபக்க ஸப்தமி 09.05.2011 திங்கட்கிழமை)

அன்பிற்கே இலக்கணமாய் வாழ்ந்த எம் அப்பாவே
அறிவுதனை எமக்கு அளித்து ஆசானாகினீரே
இறைவன் தந்த பொக்கிஷம்
இன்று எமைப் பிரிந்து சென்றதேனோ?
ஏங்குகின்றோம் நாம் உங்கள் நினைவுடன்

சோனெழு,
கோப்பாய் மத்தி (சி/578300)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### மாதர் வேலும்மயிலும்



அல்வாய் மேற்கு, திக்கத்தைப் பிறப்பிடமாகவும், அல்வாய் தெற்கு ஓடையை வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் வேலும்மயிலும் கடந்த (07.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பரராசபூசணியம்மாவின் அருமைக் கணவரும் ரதிதேவி, உமாதேவி, சந்திராதேவி, சயிலாதேவி, கணேசமூர்த்தி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவராசா, புவேந்திரராஜ், ஜெயரூபன் ஜனசா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிஷாந்தினி, நிரோஜினி, உஷாந்தினி, நிதர்ஷன், கஜனிக்கா, தினேக்கா, ஜெயகார்த்திகா, ஜெயகீர்த்தனா, ஜெயகரன்(சுவிஸ்), ஜஸ்மிதா, மதுமிதா(சுவிஸ்) ஆகியோரின் பேரனும் சின்னத்துரை, கந்தசாமி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாக்கியம், இராஜராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2011) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் கடற்கரை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்மரியன் தோட்டம்,
ஓடை, அல்வாய் தெற்கு. (சி/575928)

தகவல்:
மனைவி, மக்கள்.

## ஐ.நா. அறிக்கைக்கு......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்ப நிலையிலிருந்த கொள்கை மாறிவிட்டதை மீண்டும் இது எடுத்துக் காட்டுவதாய் இருந்தது.

நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளமைக்கான பதில் கடிதத்தை அரசு அனுப்பிவைத்திருக்கின்றது என்று தெரியவந்துள்ளது. இருந்தாலும் அது நிறையக் குறைபாடுகளைக் கொண்டுள்ளது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையை வெளியிடவேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட பிறகும் வெளியிடப்பட்டிருப்பதற்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரிவான ஒரு பதில் விரைவில் அனுப்பப் படவிருப்பதாகவும் பீரிஸ், பிளேக் இடம் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒவ்வொன்றாக எடுத்து விவரிக்காமல்; போர் ஆரம்பிக்குமுன் வடக்கிலிருந்த நிலைமைகள் போரின் போது பொதுமக்களைப் பாதுகாக்க அரசு எடுத்த நடவடிக்கை இடம் பெயர்ந்தவர்கள் கவனிக்கப்பட்ட முறைகள் பேரரின் பின் அவர்கள் மீளக்குடிய மர்த்தப்பட்டமை, போரினால் துவம்சமான பகுதிகளை மீள்சீரமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள், போரில் ஈடுபட்டிருந்தவர்களான போராளிகளுக்கான புனர்வாழ்வு ஏற்பாடுகள் மற்றும் இவ்வாறான விடயங்கள் இந்த பதிவில் விரிவாகக் குறிப்பிடப்படவிருப்பதாகத் தெரிகிறது. கனரக ஆட்டிலறி ஆயுதங்கள் பாவிக்கப்பட்டமை தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் பதில்களும் இதில் அடங்கவிருப்பதாகத் தெரிகின்றது.

பிளேக், தமது நாட்டு இலங்கைக்கான தூதுவர் பெட்ரீஷியா புட்டனிஸுடன் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் சந்தித்துப்பேசினார்.

(ப)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர் **இ.ஜங்கரன்** அவர்களின் பாசமிகு தந்தை

**சுந்தரம்பிள்ளை இராமலிங்கம்**
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)

அவர்களின் மறைவினால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

பாடசாலை சமூகம்,
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
29 . 04 . 1967



இறப்பு
09 . 04 . 2010

**அமரர் சக்திவேற்பிள்ளை சத்தியநாதன்**
(நாதன்- பொலிஸ்)

எமது அன்புத் தெய்வமே!
உமது பிரிவு தாங்க முடியாமல் தவிக்கின்றோம்
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
எங்களுடைய மனதில் ஆறாத நினைவுகள்
சுமையாக ஆழ்ந்து கிடக்கின்றன
கள்ளங்கபடமற்ற அந்தமுகம் எங்கள்
இதயங்களில் தேங்கிக்கிடக்கின்றன

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலடியிலுள்ள எமது இல்லத்தில் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடைபெறும்.

A9 வீதி, கந்தசாமி கோயில் வீதி,
கிளிநொச்சி.
(3990)

அப்பாவின் நினைவுடன்:
தேவரஜனா (மனைவி),
பேபி சத்ஜா, மகேஸ்வரன் (பிள்ளைகள்).

## வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வரையறுள்ளது)

## பதவி வெற்றிடம்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01) பதவி: பொது முகாமையாளர்
பதவி இலக்கமும் சம்பளக் குறியீடும்
101-06 (165/88) இன்படி-101-04 (101/81) இன்படி சம்பள அளவுத்திட்டம்
11950 - 15300 / 155 X 10 - 180 X 10 (66/2006 இன்படி)
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

02) தகைமைகள்:
அ. கூட்டுறவுப் பணியாளர் 07வது சம்பளத்திட்டத்தில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 08வது சம்பளத்திட்டத்தில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன் றில் 8 வருட அனுபவம் இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவியில் கடமை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திர (உயர்தர) சான்றிதழ்/க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருட அனுபவம். இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமைப் பதவியில் கடமை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

03) வயது: 18-45

04) சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

05) பிணை தொடர்பானது: ரொக்கம்

06)இலங்கைப் பிரஜைகளிடம் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

07)விண்ணப்ப முடிவு திகதி: 30.05.2011

08) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:- தலைவர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A-9 வீதி. கிளிநொச்சி.

தலைவர்,
வ.ப.தெ.வ.அ.கூ.நி
பேரிணையம் கிளிநொச்சி.

(சி/578291) (39)

## வேலைக்கு ஆள்கள் தேவை

- லிகிதர்கள்,
- தொலைபேசி இயக்குநர்,
- கணினி இயக்குநர்,
- லான்ட் மாஸ்டர் ஓட்டுநர்

தேவை.

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு-**
E.Mail- gnanam 12 @ hotmail.com

### திருத்தி வாசிக்கவும்

நேற்றைய உதயனில் 29ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய கந்தையா சிவனேசன் என்பவரின் மரண அறிவித்தலில் [illegible] கோயில் வீதி [illegible] கோயில்வீதி என திருத்தி வாசிக்கவும்

## மரண அறிவித்தல்

### கந்தையா கயிலாயபிள்ளை



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கயிலாயபிள்ளை 06.05.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி (அமெரிக்கா), விஜயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணபாலசிங்கம், ரூபி, அருணகிரிநாதன், அருளானந்தம், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

மீசாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (10.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அல்லாரை கொப்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு.
(1674)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு தங்க பிஸ்கட் கடத்திய இலங்கையர் கைது

## விளக்கமறியலில் வைக்க மும்பை நீதிமன்று உத்தரவு

கொழும்பு, மே 09

இலங்கையிலிருந்து ஒரு கோடி 85 லட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட் களை இந்தியாவுக்கு கடத்திச் சென்றார்கள் எனக் கூறப்படும் ஏழு இலங்கையர் களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மும்பை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து கும்பலொன்று தங்க பிஸ்கட்களைக் கடத்தி வந்துள்ளது என்றும் அந்தக் கும்பல் தற்போது மும்பை ஹோட்டலில் தங்கியிருக்கின்றது என்றும் இந்திய சுங்கத் துறை புலனாய்வுப் பிரிவினருக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரகசியத் தகவலொன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து தீவிரமடைந்த புல னாய்வுத் துறையினர் பொலிஸாருடன் இணைந்து குறித்த ஹோட்டலை சுற்றி வளைத்தனர். இதன்போதே ஏழு இலங் கையர்களையும் ஒரு இந்தியரையும் அவர்கள் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அன்றைய தினமே நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளனர். இதன்போதே நீதிமன்றம் பிரஸ்தாப உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ஐ-சி)

# தென்மராட்சியில் பொதுக்கூட்டம்

கைதடி, மே.9

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் தலைவர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் வளர்ச்சி தொடர்பான பல விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதால் பொதுச்சபை உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-28)

## ஒஸாமாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அல்-குவைதா அறிவித்துள்ளது.

இதனிடையே, பின்லேடன் பதுங்கியிருந்த இடத்திலிருந்து அல்-குவைதா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 25 பேரை பாகிஸ்தான் இராணுவம் பிடித்து விசாரணை நடத்தி வருகிறது.

நவாஷேஹார், காகுல், நாடியான், தண்டா சோஹா உள்ளிட்ட கிராமங்களில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது என டான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ-சி)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதுடன், பல்வேறு தரப்பு களுடன் கலந்துரையாடல் களை நடத்தி வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை வெளியானதை அடுத்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் 50 பேர் குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள இலங்கை தொடர்பாக அவசர விவாதம் நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டை எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ள விவாதம் கடுமையாக்கி விடக் கூடும் என இலங்கை அச்சம் கொண்டுள்ளது. (ஐ-சி)


## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை மகேஸ்வரன்

(முன்னாள் களஞ்சியக்காப்பாளர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச)



கிளிநொச்சி, திருநகரைப் பிறப்பிடமாகவும் இல.69, ஜெயந்தி நகரை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை மகேஸ்வரன் 07.05.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - கமலம் தம்பதியரின் அன்பு மகனும் சேதுபாண்டியர்- காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் மருமகனும், அருட்சோதியின் (ஆசிரியை, கிளி/ இந்து ஆரம்ப வித்தியாலயம்) அன்புக் கணவரும் வினோதா(3ஆம் வருட கலைப் பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), தர்சிகா, பிறேம்சாந்(உயர்தர மாணவன், கிளிநொச்சி மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் க.வைகுந்தன்(முன்னாள் பொறியியலாளர், ஐக்கியநாடுகள் சபை, நிகழ்சித் திட்டமிடல் செயலகம்), அ.தேவகரன் (விரிவுரையாளர், பௌதிகவியல்துறை, யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் மாமனும் நிகேதன், ஹர்னிதா ஆகியோரின் அன்புப் பேரனும் சோமசுந்தரம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், செல்வேஸ்வரி, நாகேந்திரம் ஆகியோரின் சகோதரனும் இராஜேஸ்வரி, சத்தியேஸ்வரி (கிளி/ புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம்), நாகேஸ்வரி, நாமகள் (கொட்டகலை தமிழ் மகாவித்தியாலயம்), அம்பிகைபாகன் (அதிபர், செல்லியாதீவு, அ.த.க. பாடசாலை), கேதீஸ்வரன் (சேவாலங்கா இணைப்பாளர்), கிருபாகரன்(D.R.C) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (09.05.2011) திங்கட்கிழ்மை மு.ப 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 69, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி. 0778417532 (சி/ 575831)

தகவல்:
குடும்பத்தினர்.


## வெளியூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

யாழ்.நகரில் வாகன நெரிசல்களால் ஏற்பட்டு வரும் இடர்பாடுகள் தொடர்பான இந்தக் கலந்துரையாடல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், யாழ் மாந கரப் பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்), பொலிஸ் உயரதிகாரிகள், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா, யாழ். மாநகர ஆணையாளர், வர்த்தக சங்கத்தினர் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூறு பேர் கொண்ட குழு ஒன்று நேற்று வடபகுதியில் களமிறங்கியது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளின் மக்களைப் பலவந்தப்படுத்தி கையெழுத்தைப் பெற்றுக் கொண்டது இந்தக் கும்பல். கையெழுத்து வைத்தால் பல சலுகைகள் வழங்கப்படும் எனவும் ஆசை காட்டப்பட் டது. பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் வந்து சேர்ந்த இக் குழு, சுண்டுக்குழி, கொழும்புத்துறை போன்ற இடங்களில் உள்ள வீதிகளில் தம்பாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த பொது மக்களை கையைப் பிடித்து இழுக்காத குறையாக வழி மறித்து பலவந்தக் கையெழுத்துச் சேகரிப்பில் ஈடுபட்டது. இதனால் கையெழுத்து வேட்டையில் ஈடுபடுவோர் நிலைகொண்டிருந்த வீதிகளை விடுத்து மாற்றுப் பாதைகளால் மக்கள் பயணித்தனர்.

வீதிகள் வெறிச் சோடிப் போனதால் ஐ.நாவுக்கு ஏதிராக கோஷங்களை எழுப்பியபடி அவர்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு வந்து சேர்ந்தனர். இவர்களுக்கு இராணுவத்தினரின் பூரண பாதுகாப்பும் வழங்கப்பட்டது. பஸ்களுக்காகக் காத்திருந்த பயணிகளைக் கலைத்துப் பிடித்து அவர்களிடமும் தம் கையெழுத்து வேட்டையை இந்தக் குழுவினர் தொடர்ந்தனர்.

யாழ். நகரப் பகுதிகளிலும், பஸ் நிலையத்திலும் திடீர் என முளைத்து அடாவடித்தனமாக கையெழுத்து வேட்டையில் இக் குழுவினர் ஈடுபட்டதால் மக்களிடையே பரபரப்பும், பீதி நிலையும் ஏற்பட்டது.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் இருந்து வந்த சர்வமதக் குழு ஒன்று, ஐ.நா அறிக்கை தொடர்பாக வடபகுதி மக்களின் கருத்துக்களை கேட்டறிந்திருந்தது. அதன் பின்னரே இந்தக் கையெழுத்து வேட்டைக் காரர்களின் பிரசன்னம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(14)


### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதியில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:-0212226799, 0779862593.

### இறைச்சிக்கோழி விற்பனை

வரணி மிஷன் பாம்

CSI

- சுத்தம் செய்த நிறை - 420/=
- முழு நிறை - 270/=

தொடர்பு:-0777715367.

### காணி விற்பனைக்கு

3 பரப்பு விலாசமுள்ள காணி நல்லூர் வலயக்கல்வி அலுவலகம் அருகாமையில் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு:- 0770569696.


## நிபுணர் குழு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் பிரச்சினை. அந்த அறிக்கை வெளிவராமல் இருக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஐ.நா.சபை எமது சபை. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூன் எமது செயலாளர் என்று அரசு கூறியது. ஆனால், அரசு சார்பு அணிகளின் மேதின ஊர்வலத்தில் பான் கீ -மூனின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன. இதுதான் அரசின் கொள்கை - என்றார். (ஐ-சி)

## கப்பம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ். மாவட்ட இராணுவத் தள பதி இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார். இதில் நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். இதன்போதே யாழ். மாவட்டத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வர்த்தக சமூகத்தின் பாதுகாப்புக்கும் அவர்களது முன்னேற்றத்துக்கும் பாதுகாப்புப் படையினர் எப்போதும் ஒத்துழைப்பார்கள். கப்பம் கேட்டு மிரட்டுதல் போன்ற தொழில் ரீதியான பிரச்சினைகளை வர்த்தகர்கள் எதிர்கொண்டால் எனது கைத்தொலைபேசி இலக்கங்களுக்கு அது பற்றி அறியத்தரலாம். தகவல் கிடைத்த மறுகணமே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது தலைமையின் கீழ் படையினர் அதில் நேரடியாகத் தலையிட்டு உடனடித் தீர்வு பெற்றுத்தரப்படும். கடந்த காலங்களில் வர்த் தகர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் பலவும் தற்போது இல்லாதொழிக்கப்பட்டுவிட்டன. எனினும், இப்போதும் சில பிரச்சினைகள், தடைகள் என்பன இருக்கவே செய்கின்றன.

யாழ்ப்பாணத்தில் கப்பம் தொடர்பான குற்றச்செயல் வேரோடு அறுக்கப்படவேண்டும்; அதற்கான நடவடிக்கையைப் பாதுகாப்புப் படையினர் எடுக்க வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியும் எனக்கு அடிக்கடி இந்த விடயம் தொடர்பாக வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பாக நாம் அதிக கவனம் எடுத்துள்ளோம்.

கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் பலாத்காரம் போன்ற சட்ட விரோத செயல்கள் அண்மையில் திடீரென அதிகரித்துள்ளன. இதனால் மக்களைப் பாதுகாப்பதற்கு இராணுவத்தை வீதியில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மக்களைச் சோதனையிட்டு அவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்த வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. பொதுமக்களது வேண்டுகோளுக்கு இணங்கவே வீதிச்சோதனைகளில் படையினர் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளது.

உலகத்திலே யாழ்ப்பாணத்தில் மட்டுமே குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன என்று கருதமுடியாது. குற்றவாளிகள் உள்ள இடங்களிலெல்லாம் குற்றச் செயல்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன.

குழப்பம், குற்றம் ஏற்படாமல் இருக்க இராணுவம், பொலிஸ் நடவடிக்கை எடுப்பதும் வழமைதான். பொது மக்களும் இராணுவமும் இணைந்து தற்போது சிறப்பான நிர்வாகச் செயற்பாடு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிந்துவிட்டது. எனவே, இராணுவத்தினர் தமது வீடுகளுக்குச் செல்லலாமே எனப்பலர் கூறக்கூடும். ஆனால், யுத்தத்தின் பின்னர் மக்களிடையே ஒற்றுமையையும், அமைதியையும் ஏற்படுத்தப் படையினரே உதவுகின்றனர்.

தமது பிரச்சினைகளைத் தெரியப் படுத்த வர்த்தக சமூகத்தினர் எனது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டால் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குச் சென்று அறிவிக்க முடியும். வர்த்தக நடவடிக்கைக்கு இராணுவத்தினர் தடையாக இருந்தாலும் கூட அதுபற்றி முறை யிடலாம் - என்றார். (ஐ-14)


## துயர்பகிர்கின்றோம்

### கந்தையா சிவநேசன் (டீசி)

(கட்டட ஒப்பந்தகாரர்)



அவர்களின் திடீர் மறைவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன், அவரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (3933)

நா.திருச்செல்வம் குடும்பம்.

## மரண அறிவித்தல்

### குமாரசாமி குலசேகரம்பிள்ளை



புங்குடுதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 14/6, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி குலசேகரம்பிள்ளை நேற்று (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி -பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிஐயா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாலகுமாரின் (பிரான்ஸ்) அன்புத்தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

14/6, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம். (3991)

தகவல்: பூ.அன்னலெட்சுமி(நெ...)
சோ.சந்திராதேவி
(காந்தி - பேரமக்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து யாழ். பல்கலை துறைத் தலைவர்கள் ராஜினாமா

## இன்று ஆரம்பமாகிறது போராட்டம்

யாழ்ப்பாணம், மே 9

சம்பள உயர்வுக் கோரி அனைத்துப் பல்கலைக்கழகத் துறைத் தலைவர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர். இதற்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக துறைத் தலைவர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள், மாணவ ஆலோசகர்கள், இணைப்பாளர்கள் மற்றும் விடுதிக் காப்பாளர்கள் இன்று முதல் தமது பணிகளை ராஜினாமாச் செய்யவுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ். விக்னேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2008ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்தை மற்றைய துறையைப் போலநோக்காது தனித்துறையாகக் கருதி சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டது. அது பின்னர் நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்து 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியதை அடுத்து 25 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க பலகலைக் கழக ஆசிரியர்களுக்கு இந்தமுறை வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஆனால், ஆராய்ச்சிப் படிகள் 6.2 வீதம் மட்டுமே வழங்கப்பட்டன. எமது பிரதான கோரிக்கையான சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மார்ச் 15 அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பங்கெடுத்தனர். அதற்கும் தகுந்த பதில் ஏதும் கிடைக்காத நிலையில் இன்று 9ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழக நிர்வாகப் பதவிகளில் சிரேஷ்ட மாணவ ஆலோசகர், ஆகியோர் துறைத் தலைவர், இணைப்பாளர்கள், மாணவ ஆலோசகர்கள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்கின்றனர்.

இதற்கு யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் ஒத்துழைப்பு வழங்குகின்றது. இன்று 9ஆம் திகதியிலிருந்து எமது நிர்வாகப் பதவிகள் ராஜினாமாச் செய்யப்படுகின்றன.

ஒரு கிழமை வரையில் இந்த நிலைமை தொடர்ந்தால் பல்கலைக்கழக செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும் சூழ்நிலை உருவாகும் - என்றார். (ஒ-319)

# விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்துக்கு ஜே.வி.பி. முழு ஆதரவு

## செய்தியாளர் மாநாட்டில் ரில்வின் அறிவிப்பு

கொழும்பு, மே 9

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நியாயமான சம்பள உயர்வுக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு அரசிடம் ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது. சம்பள அதிகரிப்பை வேண்டி விரிவுரையாளர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கத் தாம் தயார் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளம் இறுதியாக 1996இல்தான் அதிகரிக்கப்பட்டது. அவர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி அவர்கள் அண்மைக்காலமாகப் போராடி வருகின்றனர். ஜனாதிபதிக்கும் விரிவுரையாளர்களுக்கும் சந்திப்பு இடம்பெற்று மூன்று மாதங்களில் சம்பளத்தை அதிகரித்துத் தருவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

அதேபோல் பஸில் ராஜபக்ஷவுக்கும் விரிவுரையாளர்களுக்கும் அதற்கு முன்னர் சந்திப்பு நடந்துள்ளது. விரைவில் சம்பளத்தை அதிகரித்துத் தருவதாக பஸில் அச்சந்தர்ப்பத்தில் வாக்குறுதி அளித்தார். அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இதுபோல் பல சந்தர்ப்பங்களில் விரிவுரையாளர்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்குக் குறைந்தளவு சம்பளம் வழங்கப்படும் நாடு இலங்கை மாத்திரம்தான். இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அதிக சம்பளம் வழங்கப்படுகின்றது.

பொருளாதாரத்தில் அதிக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அரசு கூறுகின்றது. அப்படியென்றால் ஏன் இவர்களின் சம்பளத்தை அதிகரித்துக் கொடுக்க அரசுக்கு முடியாதுள்ளது?

குறைந்த சம்பளம் காரணமாக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டுவெளியேறுகின்றனர். அவர்கள் இலங்கைக்குத் திரும்பி விடாமல் அங்கேயே தங்கிவிடுகின்றனர். இவ்வாறு 550 விரிவுரையாளர்கள் வெளிநாட்டுக்குச் சென்று அங்கேயே தங்கியுள்ளனர் என்று உயர்கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

அதேபோல் விரிவுரையாளர்களுக்கான தகைமை உள்ளவர்கள் கூட இந்தத் தொழிலுக்கு வராது சம்பளம் கூடிய வேறு தொழில்களுக்குச் செல்கின்றனர். இதனால் விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது.

ஆகவே, விரிவுரையாளர்களின் நியாயமான சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும். விரிவுரையாளர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கை போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குகின்றோம் - என்றார். (ஐ-சி)

# பத்து வருடங்களின் பின்னர் அழிவடைந்த தமது சொந்த இடத்தைப் பார்த்த எழுதுமட்டுவாழ் மக்கள்

தென்மராட்சி, மே 9

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவு மக்கள் பத்து வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் தமது சொந்த இருப்பிடங்களைப் பார்வையிட்டனர்.

தமது வசிப்பிடம், காணியின் தற்போதைய நிலை கண்டு பல பெண்கள் ஓவென்று கதறி அழுதனர்.

நேற்று முன்தினம் காலை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் ஒன்று கூடிய மக்கள், பிரிவு கிராம அலுவலர் வ. வேல்முருகு, முன்னாள் கிராம அலுவலர் பொ. நவரத்தினராசா ஆகியோர் தலைமையில் பெருமளவு குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களைப் பார்வையிடச் சென்றனர். அங்கு அவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் உதவியுடன் பாதுகாப்பான பாதைகளூடாக அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் தமது பொருள்களை எடுத்துச் செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளாமல் வளவுகளைத் துப்புரவு செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டனர்.

குடியிருக்கக் கூடிய நிலையில் எந்தவொரு குடியிருப்புகளும் காணப்படவில்லை. அங்குள்ள அனைத்து இந்து ஆலயங்களும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. வளவுகள், தோட்டங்களில் நின்ற பயன்தரு மரங்கள் எதனையும் காணமுடியவில்லை. (ஐ-207)

## மகளின் கழுத்தை நெரித்தாராம் தந்தை

மருதங்கேணி, மே 9

13 வயது மகளை மயக்க முறும் வரை தந்தை கழுத்தை நெரித்தார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை தாளையடி மருதங்கேணியில் இடம்பெற்றது.

தந்தையால் கழுத்து நெரிக்கப்பட்ட மேற்படி சிறுமி மயக்கமடைந்த நிலையில் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அம்புலன் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் வினோசினி (வயது -13) என்பவரே கழுத்து நெரிக்கப்பட்டவராவார். (ஐ-207)

## பொதுக்கூட்டம்

கைதடி, மே.9

தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் தலைவர் செ.பேரின்ப நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் வளர்ச்சி தொடர்பான பல விடயங்கள் பற்றி இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் பொதுச் சபை உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-28)

## விகாரைகளுக்கு மின்கட்டணத்தில் 75 சதவீத கழிவு

கொழும்பு, மே 9

புத்த ஜயந்தியை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து பௌத்த விகாரைகளுக்கும் மின்கட்டணத்தில் 75 சதவீத கழிவு வழங்கப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்துள்ளார்.

இதேவேளை, 2600ஆவது புத்த ஜயந்தி விழாவின் ஆரம்பம் வரலாற்றுச் சிறப்பு மிக்க பௌத்த நகரான அநுராதபுரத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். (ஐ-சி)

## நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக வானொலியில்

கொழும்பு, மே 9

நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக வானொலியில் ஒலிபரப்பப்படவுள்ளன என்று பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக வானொலியில் மாத்திரம் இது ஒலிபரப்பப்படும் என பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

எமது நாடாளுமன்ற விவாதங்களை மக்களுக்காக ஒளிபரப்புவதற்குச் சபாநாயகர் திட்டமிட்டுள்ளார். ஆரம்பத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படவுள்ளதால் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பத்தில் இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ-சி)

## சித்திரம், கவிதை போட்டிகள்

வடமராட்சி, மே 9

இந்த ஆண்டுக்கானபன்மைத் துவக் கலாசாரம் ஊடாகச் சமாதானம் என்ற தலைப்பிலான மாணவர்களுக்கான சித்திர, கவிதைப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்த ஆக்கங்களில் முதல் மூன்று இடங்களைக் கோட்ட மட்டத்தில் பெறும் மாணவர்களுக்கான வலயமட்டப் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாகாண மட்டப் போட்டிகள் இடம்பெற்று இதில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு அடுத்தமாதம் 19ஆம் திகதி நடைபெறும் 'மதர் ஒப் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சியின் போது பரிசில்கள் வழங்கப்படும் என மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-236)

## ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி, மே.9

வரணி சுட்டி வேரம் கண்ணகை அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-2?)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவை மீளாய்வு செய்ய நேரிடும் எச்சரிக்கின்றன ரஷ்யாவும் சீனாவும்

ஐ.நாவைப் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் பான் கீ மூனை இழிவுபடுத்தக் கூடாது என்றும் இலங்கை அரசுக்கு ரஷ்யாவும் சீனாவும் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பணியாற்றும் எந்தவொரு அனைத்துலக அமைப்புக்கோ அல்லது அதன் பணியாளர்களுக்கோ இடையூறை ஏற்படுத்தக் கூடாது என் றும் இந்த நாடுகள் அறிவுரை கூறியுள்ளன.

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை வெளியான பின்னர் இலங்கை அரசும் அதைச் சார்ந்த சக்திகளும், ஐ.நா மற்றும் ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு எதிராக தீவிர பரப்புரைகளை மேற்கொண்டு வந்தன.

ஐ.நா பொதுசெயலரை இழிவுபடுத்தும் வகையிலான பேரணிகள் போராட்டங்களை தொடர்ந்து நடத்தினால், மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை மீளாய்வு செய்ய நேரிடும் என்று ரஷ்யாவும், சீனாவும் எச்சரித்துள்ளதாகர இராஜத்தந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அத்துடன் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், அனைத்துலக அமைப்புகளையும் அதன் அதிகாரிகளையும் இழிவுபடுத்தும் அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்வதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்து கொள்ளுமாறும் இந்த நாடுக்ள் அறிவுறுத்தியுள்ளன.

ஐ.நா அறிக்கை வெளியான பின்னர் கொழும்பிலுள்ள ஐ.நா பணியகத்தின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதில் இந்த நாடுகள் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும், இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஐ.நா பொதுச்செயலரின் உருவபொம்மைகள் எரிக்கப்பட்டு நடத்தப்பட்ட போராட்டங்களின் பின்னர் தான் ரஷ்யாவும் சீனாவும் இந்த எச்சரிக்கையை இலங்கைக்கு விடுத்தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்தே ஐ.நா பொதுச் செயலருக்கு எதிரான போராட்டங்களை இலங்கை அரசு நிறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (புதினப்பலகை) (10)

# அமைச்சர் பஸிலுடன் பேசத் தயாரில்லை இந்தியா இலங்கைக்கு அறிவிப்பு

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள இந்திய அரசு தயாராக இல்லாத காரணத்தால் அவரை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டாமென அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் இந்திய அரசின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடலுக்கு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவொன்று எதிர் வரும் தினங்களில் இந்தியா செல்லத் தயாராக இருந்தது.

ஆயினும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் எந்தவொரு கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளத் தயாராக இல்லையென்று இந்திய அரசு முகத்திலடித்தாற்போன்று இலங்கைக்கு அறிவித்துள்ளது.

அவ்வாறு நிபுணர் குழு அறிக்கை குறித்து இந்திய அரசுடன் பேச்சு நடத்த வேண்டுமாயின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தலைமையிலான குழுவொன்றை அனுப்புமாறும் இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது. அது தவிர எந்த வொரு அமைச்சர் தலைமையில் குழுக்கள் வந்தாலும் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ள இந்திய அரசு தயாராக இல்லையென்றும் கடுந்தொனியில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(தமிழ்வின்) (10)



இணையச் செய்திகள்

# இராணுவ ஆட்சி நிறைந்த நாடாக மாறுகிறது இலங்கை

நகர அபிவிருத்தி உள்ளிட்ட பொதுவாழ்வில் அனைத்து அம்சங்களையும் இலங்கை அரசு இராணுவ மயப்படுத்திவருவதாக பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க குற்றம் சுமத்தியிருக்கிறது.

மாநகரசபைத் தேர்தல் இடம் பெறுவதற்கு ஓரிரு வாரங்களின் முன்னர் மாத்தறையினது நகர அபிவிருத்தியில் பாதுகாப்பு அமைச்சு மூக்கினை நுழைப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவிடம் கூறியிருக்கிறார்.

ஒரு நகரத்தினை அபிவிருத்தி செய்வதற்கு இராணுவத்தினைப் பயன்படுத்தவேண்டிய தேவை எதுவுமில்லை. அரசாட்சியின் சிவில் பொறுப்புக்களை இராணுவம் தனதாக்குவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றார் சமரவீர.

தற்போது நடைமுறையிலிருக்கும் நகர அபிவிருத்திச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு நகரத்தினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் சிவில் நிர்வாக அலகுகள் கொண்டிருக்கின்றன என முன்னாள் நகர அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர கூறினார்.

இன்று மாத்தறை நகரத்தில் இராணுவ ஆட்சிப் பண்புகள் தலைதூக்குவதை நாங்கள் காண்கிறோம்.

இது மிகவும் ஆபத்தானதொரு போக்கு. உலக வரலாற்றில் இத்தகைய போக்குத்தான் ஈற்றில் அந்த நாடு இராணுவ ஆட்சி நிலவு கின்ற நாடாக மாறுவதற்கு வழிசெய்திருக்கிறது என்றார் அவர்.

ஆனால் மேற்குறித்த இந்தக் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கிறர் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல. நகர அபிவிருத்தி அதிகாரசபை யின் பணிகளில் இராணுவம் ஒருபோதும் தலையிடவில்லை என அவர் சந்தேசியவிடம் கூறியிருந்தார்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த பின்னர் நகர அபிவிருத்தித் திட்டங்களில் இராணுவத்தினர் பங்கெடுத்து வருகிறார்கள் என்பதை இராணுவப் பேச்சாளர் ஏற்றுக்கொள்கிறார்.

சிவில் அதிகாரிகளுக்கான இராணுவத்தின் உதவிகள், பொது மக்களுக்கான படை உதவிகள் என்பன இராணுவத்தினரின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளின் அங்கமாகிவிட்டது என்றார் அவர்.

(தமிழ்வின்) (10)

# இந்த மாதத்தில் ஏழு பூமி அதிர்வுகள்

இம்மாதத்திற்குள் உலகெங்கும் ஏழு பூமியதிர்வுகள் வரை ஏற்படலாம் என்று பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் ஆய்வு நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

1900ஆம் ஆண்டுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட புவியதிர்வு தொடர்பான தரவுகளைக் கொண்டு புவியதிர்வொன்று ஏற்படமுன்னர் தங்களால் அதனை எதிர்வு கூறமுடியுமென்று அவர்கள் கடந்த மார்ச் மாதம் அறிவித்திருந்தனர்.

அதன் பிரகாரம் ஏப்ரல் மாதம் தொடர்பில் அவர்கள் முன்னறிவித்த புவியதிர்வுகள் தொடர்பான எதிர்வுகூறல்களில் தொண்ணூறு வீதம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைப் போன்று இந்த மாதத்திலும் மொத்தம் ஏழு பூமியதிர்வுகள் அளவில் உலகெங்கும் பரவலாக நிகழக்கூடும் என்று எதிர்வு கூறியுள்ள பேராதனை பல்கலைக்கழக புவியியல் ஆய்வாளர்கள், இலங்கைக்கு அவற்றால் பாதிப்புகள் வராது என்றும் தெரிவித்துள்ளனர்.

(தமிழ்வின்) (10)

# விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளல்லர்; மக்களின் உரிமைக்காகப் போராடியவர்கள்

## அவுஸ்திரேலியப் பேராசிரியரின் கருத்து

பலரும் சொல்வதைப்போல விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் மக்களின் உரிமைக்காகப் போராடிய சுதந்திரப் போராளிகள். அத்துடன் அவர்களில் சிலர் என்னுடைய மாணவர்கள். எனவே அவர்களை நான் இன்னமும் நேசிக்கிறேன் - இவ்வாறு அவுஸ்திரேலிய மருத்துவத் துறை பேராசிரியரான வைட்கோல் என்பவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுனாமியின் பின்னர் மருத்துவ பீட மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக இலங்கைக்குச் சென்றிருந்தேன். அப்போது விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறையைச் சேர்ந்தவர்களும் என்னிடம் கற்பதற்காக வந்தார்கள். அவர்களில் பலர் யுத்தத்தால் அவயவங்களை இழந்தவர்கள். களமருத்துவ நுட்பங்களை இவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

புலிகளுக்கு நான் கற்பித்ததால் என்னைப் பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று பலர் செயற்பட்டனர். ஆனால் புலிகள் உண்மையிலேயே பயங்கரவாதிகள் அல்ல என்பது எனக்குத் தெரிந்ததால் எந்த இடையூறு வந்தபோதும் நான் அவர்களை நேசிக்கிறேன்.

தற்போது படையினரால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் சர்வதேச செஞ்சிலுவைக்குழு பார்வையிட இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் நலன்புரி நிலையங்களிலிருந்து இன்னும் விடுவிக்கப்படாத மக்கள் அவர்களின் சொந்த நிலத்தில் மீளக்குடியேறப்படவேண்டும். இவற்றை இலங்கை அரசு நிறைவேற்றும் வரை இலங்கைக்கு ஆதரவான நடவடிக்கைகள் எவற்றையும் அவுஸ்திரேலியா மேற்கொள்ளக்கூடாது. அத்தோடு தமிழர்களின் நிலைப்பாடு தொடர்பாக சரியான தீர்வைத் தரக் கூடிய நிலையில் ஐ.நா. சபை தற்போது இல்லை. இந்நிலையில் பொது நலவாய நாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அவுஸ்திரேலியப் பிரதமருக்கு மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை நிராகரித்து இலங்கை அரசுக்கு அவுஸ்திரேலியா தனது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். இதனால் தமிழர் நலன் நடவடிக்கைகளை இலங்கை விரைந்து எடுக்கும் அழுத்தம் உருவாகும் - என்றார்.

# ஐ.நா. அறிக்கையை வரவேற்கிறார் ராதிகா

இலங்கை போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த ஐ.நா செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை தான் வரவேற்பதாகக் கனேடிய நாடாளுமன்றத்திற்குக் கனேடிய புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

(தமிழ்வின்) (10)

# ரவி கருணாநாயக்கவின் நியமனம் சட்ட விரோதமானது

ரவி கருணாநாயக்கவை ஐ.தே.க தேசிய அமைப்பாளராக நியமித்தமை சட்டவிரோதமானது என அக்கட்சியின் மறுசீரமைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொள்ளப்போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் சமுகமளிக்காத நிலையில் ரவி கருணாநாயக்க தேசிய அமைப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டதாக மறுசீரமைப்பு பிரிவு அங்கத்தவர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக்கட்சி அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தவதற்காகத் தொடர் கூட்டங்கள் நடத்தப்படும் என அவர் கூறினார்.

(தமிழ்மிரர்) (10)

# கொழும்பு பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தில் களியாட்ட விடுதி அமைப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்புப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடத்தில் கசினோ களியாட்ட விடுதிகள் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றையும் நிர்மாணிப் பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அத்துடன் கொழும்பு பல்கலைக்கழக சுற்றுவட்டாரத்தில் உள்ள வீதிகளையும் கசினோ வீதிகளாக மாற்றியமைக்க அரசு முயற்சிக்கின்றது.

உள்நாட்டு வர்த்தகர்களுக்குக் கொழும்பு மத்தியில் உயர்மட்ட வர்த்தக வலயமொன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனேயே அரசு பிரஸ்தாபத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

அதனையடுத்து கொழும்புப் பல்கலைக்கழகத்தை திவுலப்பிட்டிய அல்லது ஹோமாகமையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கின் அருகில் மீள் நிர்மாணிக்க அரசு உத்தேசித்துள்ளது.

இதனைப்போலவே கொழும்பு இராணுவத் தலைமையகம் அமைந்திருந்த இடத்தையும் சிங்கப்பூரின் ஷாங்கிரிலா ஹோட்டல் நிறுவனத்திற்கு 1387 கோடிகளுக்கு அரசு விற்பனை செய்திருந்தது. ஆனால் பத்தரமுல்லையில் இராணுவத் தலைமையகத்தை மீள நிர்மாணிப்பதற்கு 3 ஆயிரத்து 850 கோடிகள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(தமிழ்வின்) (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் 'வெறியாட்டம்'; நேற்றும் பல்கலையில் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 09

யாழ். பல்கலைக்கழகத்துக்குள் நேற் றுக்காலை திடீரென உள்நுளைந்த பொலி ஸார் அங்கிருந்த மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றை அள்ளிச் சென் றனர். அவற்றை மீளப் பெறச்சென்ற மாண வர்கள் சிலரை பொலிஸார் விசாரணைக் குட்படுத்தினர்.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது:

நேற்று முன்தினம் இரவு வணிக முகா மைத்துவ பீட புகுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வுக் கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டி ருந்த போது, மதுபோதை தலைக்கேறியதால், இரு மாணவர் குழுக்கள் முறுகிக்கொண்டன. இந்த முறுகல் அடிதடி வரை சென்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் கம்பிகள், பொல்லுகள் சகிதம் 'வெறியோடு' மோதிக்கொண்டனர். இதில் பல்கலைக் கழக ஜன்னல் கண்ணாடிகள், பிளாஸ்ரிக் கதிரைகள், கல் இருக்கைகள் எவற்றையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை. மாணவர்களின் அட்டகாசம் உச்சமானதைத் தொடர்ந்து, நிலைமையைக் கட்டுக் குள் கொண்டுவரமுடியாமல் பாதுகாப்பு ஊழியர்கள் திண்டாடினர். இந்த நிலையில் பல்கலைக்கழகத் துக்குள் நுழைந்த பொலிஸார் மாணவர்கள் மீது தடி யடிப் பிரயோகம் மேற் கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த நிலையிலேயே நேற்றுக் காலை மீண்டும் பல்கலைக் கழகத்துக்குள் வந்த பொலிஸார் அங்கு நிறுத்திவைக்கப்பட் டிருந்த மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றை அள்ளிச் சென்றனர். அவற்றைப் பெறுவதற்காக பொலிஸ் நிலையத் துக்குச் சென்ற பல்கலை மாணவர்கள் சிலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட தாக மாணவர் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று யாழ்.பல்கலைக்கழகம் போரால் சிதைவுண்ட பகுதி போல காட்சியளித்தது. முதல் நாள் மோதலுக்கு அத்திவாரமிட்ட மதுப் போத்தல்களும் ஆங்காங்கே வீசப்பட்டு இருந்தன. நேற்று இரவு வரை பல்கலைக்கழகத்தைச் சுற்றி பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட் டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மோதல் சம்பவம் குறித்து யாழ். பல் கலைக்கழகத் துணைவேந்தரைத் தொடர்புகொண்ட போதும், அவர் கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

# இலஞ்ச ஊழல், அரச சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் விவரம்

## ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குத் தெரிவிப்பு

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியவற் றுக்கான உறுப்பினர்களின் விவரங்களை ஜனாதிபதி நாடாளு மன்றத்துக்கு முன் வைத்தார்.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் டி.ஜே.டி. எஸ்.பாலபட்டபெந்தி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக மேன்முறை யீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசர் எஸ்.ஜே. விமலசந்திர, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுயாதீன அரச சேவைகள் ஆணைக்குழு வின் தலைவராக பேராசிரியர் தயாசிரி பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களாக சட்டத்தரணி பாலித குமாரசிங்க, சிறிமாவோ ஏ.விஜய ரத்ன, எஸ்.சீ. மான்னபெரும, ஆனந்த செனவி ரத்ன, என்.எச். பத்திரன, எஸ்.தில்லை நடராஜா, எச்.பீ. டபிள்யூ ஆரி யவங்ச, ஏ. மொஹம்மட் நஹியா ஆகி யோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-சி)

# சமயபாட பரிசளிப்பு நிகழ்வு

தென்மராட்சி, மே 9

தென்மராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட சைவ சமயபாட போட்டிப்பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களுக் கான பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராம லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலு வலர் கு.சிவானந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-207)

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் நாகேஸ்வரி



ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நாகேஸ்வரி நேற்று முன்தினம் (07.05.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனை வியும் லிங்கேஸ்வரன் (கனடா), லோகேஸ் வரன் (பிரான்ஸ்), தனீஸ்வரன், ராஜீ (கனடா), ரதினி, ரஜிதா, துயிர்தா ஆகியோரின் பாசமிகு தாயும் பாச மலர் (கனடா), சுகிர்தா (பிரான்ஸ்), நிருஜா, சிவராசா (கனடா), ஜோகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுசோபன், நிதுசன், நிருசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2011) திங்கட்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஏழாலை சோன்கலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி. (3999) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி நாகரத்தினம் நடராசா



அத்தியடியைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நடராசா நேற்று (08.05. 2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

104/5, அத்தியடி குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (4000)

தகவல்
ஞானசேகரம்
(மருமகன்-C.T.B)
0212225926.

### இராமசாமி பேரம்பலம்



மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பேரம்பலம் நேற்று (08-05-2011) ஞாயிற் றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயாம்பாளின் (சந்திரா) அன்புக் கணவரும் கடம்பேஸ்வரன் (சுவிஸ்), சந்திரகுமாரி (ஜேர்மனி), மஞ்சுளா, காலஞ்சென்ற கரிகாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராணி (சுவிஸ்), காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் உதயகுமார் (பிரான்ஸ்), தயாநிதி ஆகியோரின் அன்பு மாமனும், கிரிசாந், கிரிராஜ், பிரித்திகா, ஸ்ரீபன், நிரோசன், ராம்சன், நிதர்சன், அனுதர்சன், மதுசா ஆகியோரின் பேரனும் இராசம்மா, செல்லமுத்து, காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் கந்தையா (கனடா), சிந்தாமணி, சண்முகசுந்தரம், காலஞ்சென்ற துரைராசா, மற்றும் சோமசுந்தரம் ஆகியோ ரின் அன்பு உடன்பிறப்பும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.05.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் கிழக்கு, மாதகல். (சி/575932)

தகவல் : மனைவி, பிள்ளைகள்

PHYSICS —> N. Edison
A/L 2013 நீர் நிலையியல் Tue, Thu- 6.30-7.30am
A/L 2012 வெப்பவியல் Tue, Thu- 3.30-4.30pm
ஆரம்பம்:- 10.05.2011 (Tuesday)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

LOGIC
S.துரை
(யா/பிரபல பாடசாலை ஆசிரியர்)
* A/L 2012 - இன்று 4pm
* A/L 2011 - இன்று 5pm
* A/L 2013 - ஆரம்பம்
யூனிவேர்சல் - கந்தர்மடம்.

## மரண அறிவித்தல்கள்

### தங்கவேல் செல்லம்மா



'திருமாநிதி', கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த தங்கவேல் செல்லம்மா நேற்று (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிருஸ்னபிள்ளை (இராம மூர்த்தி ஆசிரியர்) மற்றும் இலட்சுமி ஆகியோரின் அன் புச் சகோதரியும் கணேசமூர்த்தியின் (A.O உ.அ.அ. பணி மனை, மருதங்கேணி) அன்புத் தாயும் திருமாமணி, Dr. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியும் கஸ்தூரி (பல்கலைக்கழக மாணவி), கௌதமன், காயத்திரி ஆகியோரின் பேர்த்தியும் சிவபாதத்தின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05 .2011) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தல் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''திருமாநிதி'' கரணவாய் கிழக்கு, கரணவாய். (சி/575933)

தகவல் த.கணேசமூர்த்தி (மகன்).

### யோசீஸ்வரக் குருக்கள் பிரபாகரேஸ்வரக் குருக்கள்



சரவணை பள்ளம் புலம் முருகமூர்த்தி கோயிலடி யைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அத்திய டியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசீஸ்வரக் குருக்கள் பிரபாகரேஸ்வரக் குருக்கள் நேற்று (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, அத்தியடி, யாழ்ப்பாணம். (4001)
தொ.பே. இல. 0212229450

தகவல் மனைவி நாகேஸ்வரி மற்றும் யோசீஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர்.

கடைகள் விற்பனைக்கு
பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள (NNR) கடைத்தொகுதி (மூன்று மாடிக் கட்டடம்) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-0771726564.

கொள்முதல் செய்யப்படும்
பழைய இரும்பு, பித்தளை, செம்பு, அலுமினியம் தரகர் இன்றி நேரடியாக எவ்வளவு தொகையானாலும் நல்ல விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.
தொடர்புகளுக்கு: 0777769869
0757846846
0772357667.
(c/578138)

ஆர்க் என்ரர்பிரைசஸ்

எம்மிடம் மரவேலையினை இலகுவாகமேற் கொள்வதற்கு உதவும் இயந்திங்கள், இயந்திர உபகரணங்கள் மிகக்குறைந்த விலையில்.
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

மிகப் பிரம்மாண்டமான விசேட தள்ளுபடி


மற்றும் ஏனைய ஸ்ரேசனரிப் பொருள்கள், பாடசாலை தர உள்ளீட்டுப் பொருள்கள், வைற்போட், கிறீன்போட், Over head projector O.H.P Screen உட்பட்ட அனைத்து வகையான கல்வி சார் உபகரணங்களையும் ஒரே கூரையின்கீழ் உங்கள் விருப்புக் கேற்ப நீங்களே தெரிவு செய்து பெற்றிட இன்றே நாடவேண்டிய ஒரே இடம்...
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 2225542

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org